

தெப்போ 76
சாவி

விலை ரூ. 3-90

முதற் பதிப்பு : அக்டோபர், 1976
பதிப்புரிமை : ஆசிரியருக்கு.

அச்சிட்டவர்கள் : சௌந்திரா பிரிண்டர்ஸ், சென்னை-5.

## சமர்ப்பணம்

வி. எஸ். டி.

என்று சுருக்கமாக

அழைக்கப்படும்

வடபாதிமங்கலம்

திரு வி. எஸ். தியாகராஜ முதலியார்

அவர்களுக்கு

# முன்னுரை

அமெரிக்கா போகாமலேயே, வாஷிங்டன் நகரைப் பார்க்காமலேயே வாஷிங்டனில் திருமணம் எழுதினேன். ஆனால் தெப்போ-76-ஐ அப்படி எழுதவில்லை. ஜப்பான் நாட்டுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்த பிறகே எழுதியுள்ளேன். தேர் விடப்பட்ட கின்ஸா வீதிகள், தெப்பம் விடப்பட்ட ஹகோனே ஏரி, இம்பீரியல் பாலெஸ், கியோட்டோ, ஒஸாகா, நாரா ஆகிய எல்லா இடங்களும் எனக்கு நன்கு தெரியும். போதாக் குறைக்கு இந்த இடங்களைப் பற்றிய பல புத்தகங்களையும் வரைபடங்களையும் கரைத்துக் குடித்து விட்டேன்.

சென்னை நகரில் எனக்குப் பல இடங்கள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஜப்பானில், அதுவும் டோக்கியோவில் உள்ள சந்து பொந்துகளெல்லாம் எனக்குத் தெரியும்.

தேர் விடுவது அத்தனை சுலபமல்ல. அதற்கு அனுபவமும் ஆற்றலும் வசதியும் இருக்க வேண்டும். அதற்குத் தகுதியானவர் யார் என்று யோசித்து திருவாரூர் வி. எஸ். டி. அவர்களைத் தேர்ந்தெடுத்து முக்கியப் பொறுப்புக்களை அவரிடம் ஒப்படைத்தேன். அவரும் மனப்பூர்வமாக அதற்கு ஒப்புக் கொண்டார். தெப்போ திருவிழாவைச் சிறப்பாக நடத்திக் கொடுத்ததோடு இந்தப் புத்தகத்திற்கு அருமையான முன்னுரை ஒன்றும் எழுதித் தந்துள்ளார். அவருக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடக்க விழாவுக்குக் கலைஞர் அவர்களை அழைத்துச் சென்றேன். மிகச் சிறப்பானதொரு சொற்பொழிவு நிகழ்த்தி, இந்த நகைச்சுவை நவீனத்துக்கேற்ற வகையில் நகைச்சுவையான முறையில் பேசி விழாவைத் தொடங்கி வைத்தார்.

வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான அம்மாஞ்சி, சாம்பசிவ சாஸ்திரி, கோபால் ராவ், பஞ்சு இவர்கள் நால்வருடன், புதிய காரெக்டராக ஜப்பான் சாஸ்திரியையும் உருவாக்கினேன்.

இவர்களுடைய நகைச்சுவை உரையாடல்கள் தேரோட்டத்தின் சிரமம் தெரியாமல் பார்த்துக் கொண்டன.

கதை எழுதிவிட்டால் மட்டும் போதுமா? அதைப் பரிமளிக்கச் செய்வது சித்திரங்கள் அல்லவா? வாரா வாரம் கோபுலு வரைந்து கொடுத்த அற்புதமான சித்திரங்கள் இந்தக் கதைக்கு உயிர்த் துடிப்பைத் தந்தன. அவர் வரைந்த தேர்ச் சக்கரங்களும், வெடிப் புகையும், தொம்பைகளும் இன்னும் கண்முன் நிற்கின்றன. அவருக்கு என் நன்றி.

மிக அழகிய முறையில் இப்புத்தகத்தை வெளியிட்டுள்ள பூம்புகார் பிரசுரம் திரு. பரதன் அவர்களுக்கு என் பாராட்டுதல்களையும் நன்றியையும தெரிவித்துக் கொள்கிறேன்.

—சாவி

அண்ணாநகர்,
சென்னை-40.
8—9—76

# முகவுரை

''தெப்போ-76'' என்ற கற்பனைச் சித்திரத்தை தினமணி கதிரில் படித்தவர்கள் அதன் அருமை பெருமைகளைப் பற்றி நன்கு அறிவார்கள். இந்த அருமையான கற்பனைச் சித்திரத்தைத் தமிழ் மக்களுக்குத் தீட்டித் தந்தவர் நம் பாரத நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரான திரு 'சாவி' அவர்கள். தமிழர்களின் அறிவை வளர்க்கும் வகையில் அவர் நகைச்சுவை ததும்பும் பல கட்டுரைகளை எழுதி, பெரும்சேவை செய்து வருவது பற்றியும் அவரது எழுத்துத் திறமை பற்றியும் அறியாத தமிழர் யாரும் இருக்க முடியாது. 'வாஷிங்டனில் திருமணம்' என்ற பிரமாதமான நகைச்சுவைத் தொடர் கதையை எழுதி எத்தனையோ லட்சம் தமிழர்களை அவர் மகிழ்வித்தார். அதே மாதிரி 'தெப்போ-76' என்ற நகைச்சுவைத் தொடர்கதையை நம் மக்களுக்கு 'சாவி' அவர்கள் சமீபத்தில் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டின் மிகப் புராதனமான திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் பெரிய தேர் உற்சவத்தையும், அங்கு கமலாலயத்தில் நடைபெறும் தெப்ப உத்சவத்தையும், அவைகளின் சிறப்புக்களையும், அவர் மனதில் கொண்டு, இந்த உற்சவங்களை ஜப்பானில் நடத்தினால் எப்படி இருக்கும் என்ற கற்பனையுடன் இக்கதையை உருவாக்கியுள்ளார். இந்தக் கதையை எழுத எண்ணியவுடன், 'சாவி' அவர்கள் இவ்வாண்டு திருவாரூருக்கு வந்திருந்து, இந்த இரண்டு உற்சவங்களையும் நேரில் கண்டு களித்தார். முக்கியமாக, பெரிய தேர் ஓட்டத்தின் சிறந்த அம்சங்களையும், தேர் கோடி திரும்பும் காட்சியையும், பல்லாயிரக் கணக்கான மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் விழாவில் கலந்து கொள்ளும் பாங்கினையும், தெப்போற்சவத்தின்

சிறப்புக்களையும், அப்பொழுது தெப்பத்தில் நடைபெறும் சங்கீதக் கச்சேரிகளையும் நேரில் கண்டு வந்தார்.

இந்த மாபெரும் அழகிய நிகழ்ச்சிகளை அவர் தமது கற்பனைச் சித்திரத்தின் மூலம் ஜப்பானிலே நடத்திக் காட்டி விட்டார். இக் கதையில் எத்தனையோ நகைச் சுவை மிகுந்த விஷயங்களை ஜப்பான் சாஸ்திரிகள் மூலமாகவும், சாம்பசிவ சாஸ்திரிகள் மூலமாகவும் வாசகர்களுக்கு வழங்கியுள்ளார் சாவி. நமது தமிழகத்தின் நுண்கலைகள், பண்பாடுகள், வாழ்க்கை முறைகள், கோவில் விழாக்களின் சிறப்புகள், பல்கலை விற்பன்னர்களின் பணிகள் முதலியவற்றை இக்கதையின் மூலம் எல்லோரும் அறிய ஒரு பெரும் வாய்ப்பை அளித்துள்ளார். இது போல ஜப்பான் நாட்டைப் பார்க்காதவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் அந்த நாட்டின் சிறப்புகளைப் பற்றியும், இயற்கை வளம், செயற்கை வளங்களைப் பற்றியும், அந்நாட்டுச் சக்கரவர்த்தி முதல் மற்ற எல்லா மக்களுடைய பண்பாடு, வாழ்க்கை முறைகள், அவர்களது புத்த கோவிலின் அமைப்பு ஆகியவை பற்றியும், அவர்களிடமிருந்து நம் நாட்டினர் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியக் கருத்துக்கள் பற்றியும் வெகுவிரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

நான் பத்தாண்டுகளுக்கு முன் ஜப்பான் சென்றபொழுது கண்ட இயற்கை வளங்களும், மக்களின் உழைப்பும் சுறுசுறுப்பும், அவர்களது பண்பாடுகளும், விவசாயத் தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும், நகரத் தோற்றங்களும், தெப்போ-76 ஐப் படித்தபோது மறுபடியும் ஜப்பானுக்கே சென்று அவற்றை நேரில் காண்பது போல் எனக்குத் தோன்றியது. அவ்வளவு அழகாகவும், தெளிவாகவும் சாவி அவர்கள் அந்நாட்டின் மேன்மையை நம் மக்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

தேர் இழுக்க 'கின்சா' பகுதியையும் தெப்பத்திற்கு ஹறகோனே ஏரியையும் அவர் தேர்ந்தெடுத்ததே மிகப்

பொருத்தமானது. இம்மாதிரியான விழாக்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலை வெளி நாட்டினருக்குத் தூண்டுகிற வகையில் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு திட்டம் வகுப்பதைப் போல் திரு சாவி அவர்கள் இக் கதையின் மூலம் வழி முறைகளை எடுத்துக்காட்டியிருக்கிறார். தமிழ்நாட்டிற்குத் தனிப் பெருமை அளிக்கும் திருவள்ளுவருக்கும், சமீபத்தில் சென்னையில் அமைக்கப் பெற்றுள்ள வள்ளுவர் கோட்டத்திற்கும், கோவில் உற்சவங்களில் மிகச் சிறப்பு வாய்ந்த திருவாரூர் பெரிய தேர், தெப்பம் முதலியவைகளுக்கும் இந்தக் கதையில் முக்கிய இடங்களைக் கொடுத்து, தமிழ்நாட்டின் பெருமைகளைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளார். திருவாரூர் தேர் உற்சவத்தைப் பார்க்காதவர்கள் உடனே இந்த விழாவைக் காண வேண்டுமென்ற ஆவல் கொள்ளும் வகையில் அதை வர்ணித்துள்ளார்.

இந்தக் கற்பனைச் சித்திரத்தின் மூலம் ஜப்பானைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்களையும், நம் நாட்டில் தமிழகத்தில் நாம் பெருமைப்படக் கூடிய பல கலைகளைப் பற்றியும், திருக்கோவில் விழாக்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பைத் தமிழ் மக்கள் பெற்றுள்ளனர். இந்தப் பெரும் வாய்ப்பை தினமணி கதிர் வாசகர்கள் மட்டுமல்லாமல், எல்லோரும் வாங்கிப்படித்துப் பயன் பெறும் முறையில் 'தெப்போ-76' என்ற தொடர் கதையைப் புத்தக வடிவாக வெளியிட முன் வந்த திரு சாவி அவர்களை நான் பாராட்டுகிறேன். தமிழ் மக்கள் படித்து மகிழ்வதற்கும் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் இப்புத்தகம் ஒரு பெரும் சாதனமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**வி. எஸ். தியாகராஜ முதலியார்**

சென்னை-34

# தெய்போ - 76

"ஹலோ, கோபால் ராவ்! டில்லிக்கு எப்ப வந்தீங்க? எங்கே இப்படி நடந்தே..." என்று வியப்போடு கேட்டான் பஞ்சு.

"உன்னைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கேன். இப்ப நீ 'ஜாப்னீஸ் எம்பஸி'யிலே பெரிய 'பொஸிஷன்'லே இருப்பதாகக் கேள்விப்பட்டேன்" என்றார் கோபால் ராவ்.

"ஆமாம், இப்பவெல்லாம் நினைத்தால் ஜப்பானுக்குப் போறேன், வரேன். ஜப்பானிலிருந்து உமக்கு என்ன வேணும் சொல்லுங்க. கேமரா, டிரான்ஸிஸ்டர், வாட்ச்... ஏதாவது?"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நான் ஜப்பானுக்குப் போகணும். அங்கே போய்க் கார் ஓட்டணும்..."

"என்னது? ஜப்பான்லே கார் ஓட்டணுமா? டாக்ஸி டிரைவர் வேலையா? போயும் போயும் உமக்கு இப்படி ஒரு அல்ப ஆசையா? அங்கே கார் ஓட்டுவதென்றால் அவ்வளவு சுலபம் இல்லேய்யா. அதற்குத் தனி சாமர்த்தியம் வேணும். எக்கச்சக்க ஸ்பீட் ஓட்டணும். மணிக்கு ஐம்பது மைல், அறுபது மைல்..."

"நான் ஓட்ட ஆசைப்படறது உம்ம 'டொயோடா' கார் இல்லே. டெம்பிள் கார். அதாவது நம்ம ஊர்த் தேர் ஒண்ணு ஓட்டணும். இது வரைக்கும் அவ்வளவு பெரிய தேரை யாருமே பார்த்திருக்கக் கூடாது. திருவாரூர்த் தேரைவிடப் பெரிசா இருக்கணும்..."

"திருவாரூர்த் தேர் மாதிரி ஜப்பான்லே ஓட்டிப் பார்க்கிறதா? என்னய்யா, தமாஷ் பண்றீரா? இதெல்லாம் நடக்கிற கதையா?"

"நடக்கிற கதையில்லே. ஓடுகிற கதை."

"நல்ல 'ஐடியா'வாத்தான் இருக்கு. ஆமாம்; அவ்வளவு பெரிய தேருக்கு நாம் எங்கே போவது? அதை யார் செய்து கொடுப்பாங்க? முதல்லே அதைப் பற்றி யெல்லாம் யோசித்தீரா?"

"ஜப்பான்லே, 'எக்ஸ்போ ஸெவண்ட்டி' நடத்தினாங்க இல்லையா? அதே மாதிரி இது 'தெப்போ - 76'! தேரோடு ஒரு தெப்பம். அவ்வளவுதான்" என்றார் கோபால் ராவ்.

"ரொம்ப ஸிம்பிளாச் சொல்லிட்டீங்க நீங்க. 'எக்ஸ்போ - 70' என்றால் அதுக்கு எத்தனை வருஷம் எவ்வளவு பணம் செலவழிச்சாங்க தெரியுமா?" என்று கேட்டான் பஞ்சு.

"இதுக்கு வேண்டியதெல்லாம் ஒரு தேர், ஒரு தெப்பம். அவ்வளவுதான். வேணுமானால் முத்துப் பல்லக்கு ஒண்ணும் செஞ்சுடலாம். ஜப்பான்லே முத்துக்கு என்ன பஞ்சம்? கொட்டிக் கிடக்குமே! தரக்குறைவான முத்தெல்லாம் கடலிலே கொண்டு போய்க் கொட்டி விடுகிறார்களாமே!"

"கோபால் ராவ்! உம்ம திட்டம் பிரமாதமாகத்தான் இருக்கு. இதுக்கெல்லாம் யாரய்யா பணம் செலவழிப்பாங்க? அதைச் சொல்லுங்க முதல்லே" என்று கவலையோடு கேட்டான் பஞ்சு.

"அமெரிக்காவிலே 'வாஷிங்டனில் திருமண'த்தையே நடத்தினவனுச்சே நீ! உனக்கு நான் சொல்லித் தரணுமா? யாரைப் பிடிப்பாயோ? என்ன செய்வாயோ? அதெல்லாம் எனக்குத் தெரியாது. 'டோக்கியோ கின்ஸாவிலே தமிழ் நாட்டுத் தேர் ஓட்டம்'னு விளம்பரப்படுத்தினுல் அமெரிக்கா, ஐரோப்பாவிலேருந்தெல்லாம் கூட்டம் கூட்டமாக வேடிக்கை பார்க்க வருவாங்களே! வெளிநாட்டுப் பணம் வந்து குவியுமே! பெரிய டூரிஸ்ட் அட்ராக்ஷனுச்சே..."

"கோபால் ராவ்! உமக்குத்தான்யா இந்த மாதிரி 'எக்ஸெண்ட்ரிக்' ஐடியாவெல்லாம் வரும். சரி, தேர் என்ருல் அதிலே எந்த சாமியை வைக்கிறது?"

"தெப்பத்திலே பிள்ளையாரை வைப்போம். முத்துப் பல்லக்கிலே நடராஜாவை வைப்போம். தேரிலே திருவள்ளுவரை வைத்துடலாம். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியாரே பாடியிருக்கிருரே. வள்ளுவர்தான் இண்ட்டர்நேஷனல் ஃபிகர்.

"சொல்லச் சொல்ல எனக்கு ஒரே த்ரில்லிங்கா இருக்கய்யா! தேங்காய் உடைத்து தீபாராதனை காட்டறதுக்கு அம்மாஞ்சி வாத்தியார், சாம்பசிவ சாஸ்திரி இரண்டு பேரையும் அழைச்சுண்டு போயிடலாம். அவங்க நம்ம பழைய ஃப்ரண்ட்ஸ்!" என்ருன் பஞ்சு.

"ஆமாம், டோக்கியோவே அல்லோலகல்லோலப்படணும். நமக்கும் ஒரு நல்ல பொழுது போக்கு. ஜப்பான் மக்களோடு கலாசார உறவுக்கு ஒரு வழி. நம் கலைச் சிறப்புகளையெல்லாம் உலக மக்கள் கண்டு களிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம். நம் ஊர் நாதசுரம், மல்லிச்சரம், தண்டமாலை, கோயில் குடை, தேர்ச்சீலை, பொய்க்கால் குதிரை, தாரை தப்பட்டை, வாண

வேடிக்கை, கொம்பு வாத்தியம், கொம்பு மிட்டாய், பொரி கடலை பட்டாணி, தண்ணீர்ப் பந்தல், நீர் மோர்...''

''நீர் மோர்னு?'' என்று குறுக்கிட்டான் பஞ்சு.

''More நீர்னு அர்த்தம்!'' என்றுர் ராவ்.

''நம் ஊர் நீர் மோரெல்லாம் அங்கே கொண்டு போகக் கூடாது. ஜப்பான் தூய்மையான, துல்லியமான தேசம். அங்கே போய்த் தண்ணீர்ப் பந்தல் அது இது என்று வைத்து அசிங்கப்படுத்திவிடக் கூடாது'' என்றுன் பஞ்சு.

''திருவிழான்னு ஒரு தண்ணீர்ப் பந்தல் வேண்டாமா?''

''தண்ணீர்ப் பந்தல் என்ன? அவங்களிடம் சொன்னுல் 'ஸன்ட்டோரி'ப் பந்தலே வைத்துக்கொடுப்பாங்க.''

''ஸன்ட்டோரியா? அப்படின்னு?''

''அது ஜப்பான் தேசத்து ட்ரிங்க். ரொம்ப ஒஸ்தி. அதிலே கொஞ்சம் உள்ளே போனுல் ஜப்பானே ஆடும்.''

''பூகம்பத்திலேயா?''

''ஜப்பான் ஆடாது; நீர்தான் ஆடுவீர்! அது சரி; கொம்பு மிட்டாய்னு சொன்னீங்களே, அதென்ன?'' என்று கேட்டான் பஞ்சு.

''நீளமா கொம்பு நுனியிலே கலர்லே ஜவ் மிட்டாய் இருக்கும். ஒருத்தன் அந்தக் கொம்பைத் தோள் மீது சாய்த்துக்கொண்டு 'கிணுகிணு'னு மணி அடிச்சிட்டே போவான். சின்னப் பசங்களெல்லாம் அவனைச் சூழ்ந்துகிட்டு நிப்பாங்க. அவன் பைசா வாங்கிட்டு அந்தக் கொம்பு நுனியிலே உள்ள பாகுமிட்டாயை ரப்பர் மாதிரி இழுத்து வளைத்து அந்தப் பசங்க கையிலே ரிஸ்ட் வாட்ச் கட்டி விடுவான்...''

“பலே, பலே! ரொம்பத் தமாஷாத்தான் இருக்கும். வாட்சுக்குப் பெயர் போன ஜப்பான் நாட்டிலே மிட்டாய் வாட்சா? ரொம்ப வேடிக்கைதான்!”

“இது மட்டும்தானு? இன்னும் எத்தனையோ தமா ஷெல்லாம் இருக்கே...?”

“சரி; தேர் என்ருல் அதை யார் செய்து கொடுப் பாங்க? யார் ஓட்டுவாங்க?”

“திருவாரூர் வி. எஸ். டி. கிட்டே இதைப் பற்றியெல் லாம் ஏற்கெனவே விவரமாப் பேசிட்டேன். தேர் விடற திலே அவர் ஒரு ‘எக்ஸ்பர்ட்’டாச்சே! ஓடாத தேரை ஓட வைத்தவராச்சே! இந்தத் தேரைச் செய்து கொடுக்கிற பொறுப்பு அவருடையது. அப்புறம் என்ன கவலை? அவர் தான் நமக்கெல்லாம் லீடர்...”

“கோபால் ராவ்! பெரிய ஆளய்யா நீர்! எல்லா ஏற் பாடுகளையும் செய்து வைத்துவிட்டுத்தான் என்னிடம் வந் தீரா? ரொம்ப சரி. தேரை யார் இழுப்பாங்க?”

“ஒரு வடத்தை ஜப்பான்காரங்க இழுக்கட்டும். நாம் இன்னொரு வடத்தை இழுப்போம். கலாசார உறவுக்கு இது நல்ல வழி. இதுதான் ரியல் கல்ச்சுரல் எக்ஸ்சேஞ்ச்” என்ருர் கோபால் ராவ்.

“நாம் என்ருல் எத்தனை பேர்?”

“ஆயிரம் பேர்.”

“போதுமா அவ்வளவு பேர்?”

“கூடத்தான் நாலைந்து யானைகளைக் கொண்டுபோகப் போகிறேமே!”

“யானைகளா? அதுங்க எதுக்கு?”

“பின் பக்கத்திலிருந்து தேரைத் தள்ளி விடுவதற்கு. பாலக்காட்டிலே தேர் தள்ளுவதற்கென்றே யானைகளைப் பழக்கி வைத்திருக்காங்க. கல்பாத்தி தேர் பார்த்திருக்

கீங்களா? அந்தத் தேரை யானைகள் முட்டித் தள்ளுகிற காட்சியை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கிட்டிருக்கலாம்.''

''அப்படியா? யானைகளுக்கு யார் தீனி போடறது?''

''தீனி போடுவதற்கென்று பத்து ஆளை அழைத்துக் கொண்டு போனால் போச்சு. இந்த சாக்கிலே அந்தப் பத்துப் பேரும் ஜப்பான் பார்க்கலாமே!''

''சரி, என்ன தீனி?''

''கரும்புதான். ஜாவாவில் இருந்து வரட்டும். இல்லன்னா இந்தியாவிலேருந்து கொண்டு போவோம். ஜப்பான் நாட்டிலே இப்போது கரும்பு சாகுபடி அவ்வளவாகக் கிடையாது. அவங்களே வெளி நாட்டிலேருந்துதான் சர்க்கரை வரவழைக்கிறாங்களாம்.''

''ஆமாம்; இங்கிருந்து யானைகளை எப்படிக் கொண்டு போவது?'' என்று கேட்டான் பஞ்சு.

''ஏன்? அக்பர் சக்கரவர்த்தி இருக்கிறபோது நமக்கென்ன கவலை?''

''அக்பர் சக்கரவர்த்தியா? அது யார்?''

''ஏர் இந்தியா ஜம்போ ஜெட்டைத்தான் சொல்கிறேன். அவரைத் திருப்பித் திருப்பி டோக்கியோவுக்கும் மெட்ராஸுக்கும் விட்டால் போச்சு. இப்போதெல்லாம் மீனம்பாக்கம் ஏர்போர்ட்டுக்கே வர ஆரம்பிச்சுட்டாரே. ஒரு ட்ரிப்புக்கு முன்னூறு பேர் போகலாமாம். அப்படியே யானைகளுக்கும் ஒரு ட்ரிப் அடிச்சுட வேண்டியதுதானே!''

''முக்கியமாக ஒன்று கேட்க மறந்துவிட்டேன். தேருக்கு முட்டுக்கட்டை போட ஆள் வேண்டாமா?'' என்று கேட்டான் பஞ்சு.

''நம்ம நாட்டிலே அதுக்கென்ன பஞ்சம்? எந்த நல்ல காரியத்துக்கும் முட்டுக்கட்டை போடுவதற்கென்றே சில

பேர் இருக்காங்களே, அவங்களை அழைச்சிட்டுப் போயிட்டாப் போச்சு'' என்றார் ராவ்.

''இங்கிருந்து தேரை எப்படிக் கொண்டு போவது? அதைச் சொல்லவில்லையே?'' என்று கேட்டான் பஞ்சு.

''தேரைக் கொண்டு போவதா? தேர் தெப்பம் இரண்டையும் ஜப்பானிலேயேதான் செய்யணும். அதற்காக நம்ம சிற்பிகளையும், ஆசாரிகளையும் ஸ்பெஷலா அழைத்துக்கொண்டு போகணும். தேர் செய்வதையே ஒரு எக்ஸிபிஷனா காட்டலாமே. இழைப்புளி, கொட்டாப்புளி, இலுப்பை மரம், தேக்கு மரம் அவ்வளவும் எக்ஸ்போர்ட் ஆகவேண்டியதுதான். அதோடு, பல்லக்கு ஜோடிக்கிறவங்க, பந்தல் போடறவங்க தஞ்சாவூர்லே ஏராளமா இருக்காங்க. அவங்களையும அழைச்சுக்கிட்டுப் போயிடுவோம்.''

''சரி; தேரை டோக்கியோவிலே விட்டால், தெப்பத்தை எங்கே விடுவது? கியோட்டோவிலே விடலாமா? அதுதான் ஜப்பானின் பழைய தலைநகரம். அங்கேதான் இண்டர்நேஷனல் கான்பரன்ஸ் ஹால் இருக்கு. அதற்குப் பக்கத்திலே ஒரு பெரிய ஏரி இருக்கிறது. தெப்ப விழா நடத்துவதற்கு ஏற்ற இடம். அந்தக் கட்டடத்திலே ஆயிரம் பேர் வேண்டுமானாலும் தங்கிக் கொள்ளலாம்.''

''எனக்குத் தெரியும். அந்த இடமெல்லாம் நானும் பார்த்திருக்கிறேன்'' என்றார் கோபால் ராவ்.

''நீங்க ஜப்பான் போயிருக்கீங்களா?''

''ஒரே ஒரு முறை போயிருக்கிறேன். ஆனால் அதிக நாள் தங்கினதில்லே. எதற்கும் நாம் நாலைந்து பேர் முதலில் ஒரு 'ட்ரிப்' போய்ப் பார்த்து லொகேஷனை முடிவு செய்து விட்டு வருவோம்'' என்றார் கோபால் ராவ்.

''எனக்கு ஒரு சந்தேகம். தேர் ஓடுகிறபோது அதுக்கு முன்னாலும் பின்னாலும் யார் போவாங்க?''

“பின்னாலே ஓதுவார்கள். முன்னாலே ஊதுவார்கள்” என்றார் ராவ்.

“ஊதுவாரா?”

“பீ! பீ!”

“கின்ஸா ஏரியாவிலே தேர் விடுவதென்றால் ரொம்பக் கஷ்டமாச்சே. உலகத்திலேயே ரொம்ப ‘பிஸியஸ்ட்’ ஏரியாவாச்சே அது?”

“அந்த இடத்திலே தேர் விடறதுதான் சாதனை! வேகமா ஓடறவங்களுக்கு நடுவிலே, சுறுசுறுப்பான மக்களுக்கு மத்தியிலே, நிதானமா, சாவகாசமா நகரப் போகிற ஒரு தேரை விடப் போறோம். அதிலேதான் வேடிக்கை இருக்கு. எப்படி என் யோசனை? எப்படியாவது நீ ஜப்பான் கவர்ன்மெண்டை சம்மதிக்க வைத்துவிடு. அப்புறம் பாரேன் வேடிக்கையை!”

“எனக்குத் தெரியும். ஜப்பான் கவர்ன்மெண்ட் இதற்கு மறுப்பே சொல்ல மாட்டாங்க. சந்தோஷமா ஒப்புக்கு வாங்க. ஏன்னா அவங்களே இப்படி ஏதாவது ஒன்று செய்யணும்னு கொஞ்ச நாளா யோசிச்சுக்கிட்டிருக்காங்க. வெளிநாட்டு டூரிஸ்ட்டுகளை ‘அட்ராக்ட்’ பண்ணுகிற மாதிரி என்ன செய்யலாம்னு கேட்டுகிட்டு இருக்காங்க. நம்முடைய இந்த ஐடியாவைச் சொன்னால் உடனே ‘ஓகே’ தான். தே வில் ஜம்ப் அட் தி ஐடியா! ஆமாம், நீங்க டில்லியிலே எங்கே தங்கி யிருக்கீங்க...?”

“இங்கே பக்கத்திலேதான், அசோகா ஓட்டல்லே.”

“அப்படியா! நாளைக்கே மறுபடியும் மீட் பண்ணுவோம். பை, பை! நான் வரட்டுமா?” என்று சொல்லிக் கொண்டே பஞ்சு தன்னுடைய ‘டொயோடா’ காரை அறுபது மைல் வேகத்தில் செலுத்தினான்.

‘அவ்வளவுதான்; பஞ்சுவுக்கு ஃபுல்லா கீ கொடுத்தாச்சு! இனி, காரியம் நடந்த மாதிரிதான்’ என்று தமக்குள்ளாகவே சொல்லி மகிழ்ந்து கொண்டார் கோபால் ராவ்.

# 2

"சாஸ்திரிகளே, அடிச்சுதய்யா உமக்கு ப்ரைஸ்!..." என்று உற்சாகத்தோடு கூவிக் கொண்டே வந்தார் அம்மாஞ்சி வாத்தியார்.

"எதைச் சொல்றீங்க? ராஜஸ்தான்லே ஒரு டிக்கெட், கர்நாடகாவிலே ஒரு டிக்கெட் வாங்கி வச்சிருக்கேன். எந்த லாட்டரியிலே அடிச்சுது?" என்று ஆர்வத்தோடு கேட்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"லாட்டரி இல்லேய்யா. அடுத்த வாரம் நாம் இரண்டு பேரும் ஜப்பானுக்குப் போகிறோம். நாளைக்கே டில்லிக்குப் புறப்படணும். அங்கிருந்து டோக்கியோ! ரெடியா இருங்க."

"டில்லிக்கா? அங்கே நமக்கு என்ன வேலை?"

"ஜப்பான் அம்பாசிடரைப் பார்க்கப் போகிறோம்" என்று தக்ளியைத் திருகி நூல் நூற்றபடியே சொன்னார் அம்மாஞ்சி வாத்தியார்.

"யாரிடம் சரடு விடுகிறீர்? ஜப்பான்லே கூட அம்பாசிடர் கார் பண்றாங்களா?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"அம்பாசிடர் என்றால் கார் இல்லேய்யா; வெளி நாட்டுத் தூதரை இங்கிலீஷ்லே அம்பாசிடர்னு சொல்லுவாங்க. ஜப்பான் நாட்டுத் தூதர் டெல்லியிலே இருக்கார். 'டகாஷிஸாஸுகி' என்று பெயர். ரொம்ப நல்லவராம். அவர் நம்மைப் பார்க்க ஆசைப்படுகிறாராம். ஜப்பான்லே நம் தமிழ்நாட்டுத் தேர் ஒன்று ஓட்டப் போகிறார்களாம்.

நாம் முன்னாடியே ஜப்பானுக்குப் போய் பூர் வாங்க ஏற்பாடுகளை யெல்லாம் கவனிக்கணுமாம். பஞ்சு எழுதியிருக்கான். அவன் இப்போ டில்லி ஜாப்னீஸ் எம்ப ஸியிலே ஒரு முக்கியமான ஆபீசர், தெரியுமோல்லியோ?''

''யார், நம்ப பஞ்சு ஸாரா? முன்னே அமெரிக்காவுக்கு அழைச்சிண்டு போனார். இப்போ ஜப்பானுக்கா? பலே, பலே! அது சரி, ஜப்பான்லே நாம் எங்கே தங்கப் போகி ரோம்? சாப்பாட்டு அரேஞ்ச்மெண்டெல்லாம் எப்படி?'' என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''இம்பீரியல் பாலஸ்லே ஜப்பான் சக்கரவர்த்தியின் 'கஸ்ட்'டா தங்கப் போகிறோம்'' என்றார் அம்மாஞ்சி.

''இத பாருங்க, நாம் ஜப்பான் போகப் போகிற விஷ யம் யாருக்கும் தெரிய வேண்டாம். தெரிஞ்சா ஒவ்வொருத் தரும் வாட்ச், காமிரா, டேப் ரிகார்டர்னு பிராணனை எடுத் துடுவாங்க...'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''ரொம்ப சரி; ஆனால் நம்ம ஜப்பான் சாஸ்திரிகளை மட்டும் அழைச்சுண்டு போயிடலாம். பார்க்கறதுக்குக் குள்ளமா ஜப்பான்காரன் மாதிரி இருக்கார். அத்தோடு நல்ல சுறுசுறுப்பு. பேரும் ஜப்பான் சாஸ்திரி. அவரை நினைச்சாலே எனக்குச் சிரிப்பு வரது...'' என்றார் அம் மாஞ்சி.

''ஏன்?''

''ஒரு நாள் வெற்றிலைக்குக் கீழ்ப் பாதியிலே மட்டும் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டிருந்தார். 'என்ன சாஸ் திரிகளே, மேல் பாதிக்கு சுண்ணாம்பு தடவலையா?' என்று கேட்டேன். 'நான் குள்ளமோன்னோ, மேல் பாதி எட்ட வில்லை' என்று ஜோக் அடிக்கிறார். அவர் கூட இருந்தால் பொழுது போவதே தெரியாது. ரொம்ப தமாஷ் பேர்வழி'' என்றார் அம்மாஞ்சி.

''அவர் அசல் பேரென்ன?'' என்று கேட்டார் சாம்ப சிவ சாஸ்திரிகள்.

"ஹரிஹர சாஸ்திரிகள். பாஸ்போர்ட்டுலே அந்தப் பெயரைத்தான் எழுதணும். வாங்க, இப்பவே அவரைப் போய்ப் பார்த்துடலாம்..."

ஜப்பான் சாஸ்திரி ஊஞ்சலில் உட்கார்ந்து விசிறிக் கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும், "வாங்கோ, வாங்கோ! எங்கே இப்படி இந்த வெய்யில்லே?" என்று விசாரித்தார்.

"உம்மைப் பார்க்கத்தான். அடுத்த வாரம் ஜப்பானுக்குப் போகிறோம். நீரும் வருகிறீரா?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"ஜப்பானுக்கா? என் மருமானுக்குக்கூட டோக்கியோவிலேதான் உத்தியோகம். அங்கே போனால் சாப்பாட்டுக்குக் கவலையில்லை. ஆமாம், ஜப்பானில் என்ன விசேஷம்?" என்று கேட்டார் குள்ள சாஸ்திரி.

"நம் ஊர் தேர் தெப்பமெல்லாம் அங்கே விடப் போறுங்க. நாம் தான் முன் கூட்டியே போய் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து எந்த இடத்திலே தேர் விடறது, எந்த ஏரியிலே தெப்பம் விடறது என்பதை முடிவு செய்யணுமாம். டில்லி பஞ்சு லெட்டர் எழுதியிருக்கான். இப்ப அவன் ஒரே பிஸி. ஜப்பான் கவர்ன்மெண்ட்டோடு ஓவர்ஸீஸ் கால் போட்டு ஓயாமல் பேசிண்டிருக்கானும். ஏக தடபுடல் பட்டுக் கொண்டிருக்கிறதாம்."

"பலே பலே!" என்றுர் குள்ள சாஸ்திரி.

"உம்ம பேரே ஜப்பான் சாஸ்திரியாச்சே! அதனுலே உம்ம ஞாபகம் வந்தது. நாளைக்கே டில்லிக்குப் புறப்படணும். ரெடியாயிருங்க" என்றுர் அம்மாஞ்சி.

"ஜப்பானுக்குப் போனு நல்ல விசிறியா நாலு வாங்கிண்டு வரணும். இந்த விசிறியிலே காத்தே வர மாட்டேங்கறது" என்றுர் ஜப்பான் சாஸ்திரி.

‘‘விசிறியிலிருந்தா காத்து வருகிறது? ஊரிலே காத்து இல்லேன்னு விசிறி என்ன பண்ணும்?’’ என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

‘‘என்ன இருந்தாலும் ஜப்பான் சாமான் ஆகாதய்யா. ஜப்பான் மாதிரி ஒரு அழகான நாடும் கிடையாது. ஜப்பான் தேசத்திலே கெய்ஷா கர்ல்ஸ் விசிறி வெச்சிண்டு நடக்கிறதே ஒரு தனி அழகாம். என் மருமான் சொல்லுவான்’’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.

‘‘கெய்ஷான்னாலே கர்ல் என்றுதான்யா அர்த்தம். அதனாலே கெய்ஷான்னு மட்டும் சொன்னால் போதும். ஆம்பளை கெய்ஷா கிடையாது’’ என்று திருத்தினார் சாம்பசிவம்.

‘‘ஜப்பானுக்குப் போனால் ஒரு கெய்ஷா அழகியைப் பார்த்துவிட்டு வரணும்’’ என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

‘‘உமக்கு அப்படி ஒரு சபலமா! அது சரி, உமக்கு ஜப்பான் பாஷை தெரியுமா?’’

‘‘பாஷை என்ன பிரமாதம்? நாம் சிரிச்சா அவளும் சிரிக்கிறா. க்யூஷு, ஷிகோகு, ஹோன்ஷு, ஹொக்காய்டு — இவ்வளவு தானே ஜப்பான்?’’ என்றார் குள்ள சாஸ்திரி.

‘‘ஓய், ஓய்! உமக்கு ஜப்பான் பாஷை தெரியுமா!’’ என்று வியந்தார் அம்மாஞ்சி.

‘‘இது பாஷை இல்லை. முக்கியமான நாலு ஜப்பான் தீவுகளின் பெயர். ஹோன்ஷூ தீவிலேதான் டோக்கியோ இருக்கு. டோக்கியோவிலேதான் இண்டியன் எம்பஸி இருக்கு. அங்கேதான் என் மருமான் இருக்கான்’’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.

சாம்பசிவ சாஸ்திரி தலையை நிமிர்த்தி யோசனையில் ஆழ்ந்தார்.

‘‘என்ன பலமா யோசிக்கிறீங்க?’’ என்று சாம்பசிவ சாஸ்திரியைப் பார்த்துக் கேட்டார் அம்மாஞ்சி.

''ஒன்றுமில்லை; முதல் முதல் புறப்படும் போது மூன்று பேராகப் புறப்படலாமா என்று தான் யோசிக்கிறேன்'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''அம்மாஞ்சி வாத்தியார் ஒன்று, நீங்க ஒன்று, நான் ரெண்டு பேர் — ஆக நாலு பேராச்சே!'' என்றார் ஜப்பான் சாஸ்திரிகள்.

''என்ன புதிர் போடறீங்க? நீங்கள் எப்படி ரெண்டு பேரானீங்க?'' என்று வியப்போடு கேட்டார் அம்மாஞ்சி.

''ஆமாம், என் பெயர் ஹரிஹரன் இல்லையா? ஹரி ஒன்று ஹரன் ஒன்று — ஆக இரண்டு பேராச்சே!'' என்றார் ஜப்பான் சாஸ்திரிகள்.

''ரொம்ப வேடிக்கையாப் பேசறீங்க. அவசியம் நீங்க எங்களோடு வந்தே ஆகணும்'' என்று சிரித்தார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''வெறும் கை, வெறும் கழுத்தோடுதான் வரப் போகிறேன்'' என்று கூறிக் கொண்டே தன் கையிலிருந்த பழைய வாட்சையும் கழுத்திலிருந்த ருத்திராட்ச மாலையையும் கழற்றி ஊஞ்சல் மீது வைத்தார் ஜப்பான் சாஸ்திரிகள்.

''எதுக்கு இதையெல்லாம் கழட்டி வெச்சுட்டீங்க?'' என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''அப்பத்தானே ஜப்பானிலிருந்து திரும்பி வரபோது கையிலே ஸீக்கோ வாட்சும், கழுத்திலே முத்துமாலையும் போட்டுக்கொண்டு வரலாம்'' என்றார் குள்ள சாஸ்திரி.

கோபால் ராவ், பஞ்சு, அம்மாஞ்சி வாத்தியார், சாம்பசிவ சாஸ்திரி. ஜப்பான் சாஸ்திரி — ஆக ஐந்து பேரும் டோக்கியோ இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டில் போய் இறங்கிய போது இவர்களை அழைத்துச் செல்ல இம்பீரியல்

பாலெஸைச் சேர்ந்த 'கெடிலாக்' கார் ஒன்று வந்து ரெடியாகக் காத்திருந்தது. கோபால் ராவ் ஒரு கூடை நிறைய செடி கொடிகளை அடைத்துக்கொண்டு போயிருந்தார்.

"இதெல்லாம் என்ன குப்பை?" என்று கேட்டான் பஞ்சு.

"ஜப்பான் சக்கரவர்த்திக்குக் கொடுப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன். இதெல்லாம் நம் ஊர் குளங்களிலிருந்தும் ஏரிகளிலிருந்தும் தண்ணீருக்கு அடியில் மூழ்கி எடுத்து வந்தேன்" என்றார் கோபால் ராவ்.

"சக்கரவர்த்தியை முதல் முதல் பார்க்கும்போது எல்லோரும் பழங்களைக் கொண்டு போய்க் கொடுப்பாங்க. அதுதான் மரியாதை. நீங்க செடி கொடிகளைக் குப்பை மாதிரி அள்ளிக் கொண்டு வந்திருக்கீங்களே! கஷ்டம்! கஷ்டம்!" என்று தலையில் அடித்துக்கொண்டான் பஞ்சு.

"எனக்கென்ன கஷ்டம்! ஒரு கஷ்டமுமில்லை. ஜப்பான் சக்கரவர்த்திக்கு மெரீன் ப்ளாண்ட் லைஃப்லே ரொம்ப இஷ்டம். பயாலஜி ரிஸர்ச் எல்லாம் செய்து கொண்டிருக்கிறாராம். இதெல்லாம் அவருக்காக இண்டியாவிலிருந்து ஸ்பெஷலாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று தெரிந்தால் ரொம்ப சந்தோஷப்படுவார்" என்றார் கோபால் ராவ்.

"இன்றைக்கு எங்கே சாப்பாடு?" என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"இன்று நான் சோமவாரம். எனக்கு உபவாசம். சாப்பிட மாட்டேன்" என்றார் ஜப்பான் சாஸ்திரிகள்.

அம்மாஞ்சி வாத்தியார் மற்ற நால்வரையும் பெட்டி படுக்கைகள் வரும் கன்வேயர் வட்டத்துக்கு அருகில் விட்டுவிட்டுத் தான் மட்டும் தனியாக ஏர் போர்ட்டிலிருந்து வெளியே செல்லும் வாயிற் கதவுக்கருகில் போய் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

பெரிய பெரிய கண்ணாடிக் கதவுகள் டக்கென்று திறந்து கொள்வதும் மூடிக் கொள்வதுமாக இருந்தன. அவை எப்போது திறக்கும், எப்போது மூடிக்கொள்ளும் என்பது அம்மாஞ்சி வாத்தியாருக்குப் புரியவில்லை. அது எலெக்ட்ரானிக் ஸிஸ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்ததால் ஆள் அருகில் போனதும், திறந்து கொள்ளும் என்ற ரகசியம் அவருக்குத் தெரியாது. அது திறக்கும் போது உஷாராக இருந்து பாய்ந்து வெளியே போக வேண்டும். அது தன்னால் முடியாத காரியம் என்று எண்ணிக் கொண்டார். வெளியே செல்ல வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று அவர் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தபோது அங்கே வந்த பஞ்சு, ''ஓய் அம்மாஞ்சி, எல்லாருக்கும் முன்னால் இங்கே வந்து என்ன செய்கிறீர்? வாரும், போகலாம்'' என்று அழைத்துக் கொண்டே வேகமாக நடந்தான். அவன் அந்தக் கதவருகில் போகும்போதே கதவு சட்டென்று திறந்து கொண்டுவிட்டது. அம்மாஞ்சி வாத்தியாருக்கு வியப்புத் தாங்கவில்லை. 'பஞ்சுவைக் கண்டால் ஜப்பான் கதவுகள் பயந்து வழிவிடுகின்றன. ஜப்பானில் பஞ்சுவுக்கு நல்ல செல்வாக்கு' என்று எண்ணிக் கொண்டார்.

அரண்மனையிலிருந்து வந்திருந்த காரில் ஐவரும் ஏறிக்கொண்டனர். அது வாயு வேகத்தில் பறந்தது. ''அப்பா, என்ன ஸ்பீட்?'' என்றார் அம்மாஞ்சி.

''இங்கிருந்து டோக்கியோ நகரத்துக்கு மானோ ரயில் போகிறது. ஒற்றைத் தண்டவாளம். அந்த ரயிலின் வேகத்தைப் பார்க்கணும் நீங்க!'' என்றார் கோபால் ராவ்.

ஏர்போர்ட்டிலிருந்து இம்பீரியல் பாலெஸ் போய்ச் சேருவதற்குள் பல பாலங்கள் குறுக்கிட்டன. அங்கங்கே 'ஃப்ளை ஓவர்'கள் பல்வேறு திசைகளில் வளைந்து வளைந்து போய்க் கொண்டிருந்தன. அம்மாஞ்சி வாத்தியார் எல்லா

வற்றையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே போனார்.

"இத்தனை பாலங்களுக்கும், ஃப்ளை ஓவர்களுக்கும் இடையில் எப்படித் தேர் விடப்போகிறோம்? இதெல்லாம் தடுக்காதா?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"இந்தப் பாலங்களையெல்லாம் பார்க்கும்போது எனக்கு நம் ஊர் பன்னீர்தாஸ் சகோதரர்கள் ஞாபகம் தான் வருகிறது!" என்றார் குள்ள சாஸ்திரி.

"ஏன்?"

"ஒரு பாலம் பாக்கி விடாமல் அவர்கள் பெயரை எழுதி வைத்து விடுவார்களே!" என்றார் குள்ள சாஸ்திரி.

"இன்று மாலையே டோக்கியோ டவர்மீது ஏறி ஒரு ஏரியல் ஸர்வே நடத்தி விடலாம். அப்போதுதான் டோக்கியோ பற்றி நமக்கு ஒரு ஐடியா கிடைக்கும்" என்றார் கோபால் ராவ்.

"மாலை ஐந்து மணிக்கு மேல் போனால் பகல் வெளிச்சத்திலும் ஊரைப் பார்க்கலாம். இரவு மின்சார விளக்குகளின் வண்ண ஜாலக் கண் சிமிட்டுகளையும் காணலாம்" என்றான் பஞ்சு.

"க்யோபாஷி, நிஹோம்பாஷி, இடோபாஷி, ஷிம்பாஷி" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார் ஜப்பான் சாஸ்திரி.

"என்ன அது, பாஷி பாஷின்னு ஜபிக்கிறீங்க? என்ன மந்த்ரம் அது?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"பாஷின்னா பிரிட்ஜ் என்று பெயர். ஜப்பான்லே தொட்ட இடமெல்லாம் பிரிட்ஜ்தான்" என்றார் கோபால் ராவ்.

"இத்தனையூண்டு மீன் குஞ்சு மாதிரி சின்னஞ்சிறு தேசம். முப்பதே வருஷத்திலே என்னமாய் வளர்ந்துட்

டான்! ஆண்டவன் வாமன அவதாரம் எடுத்து உலகத்தையே அளந்த மாதிரி இருக்கு'' என்றார் குள்ள சாஸ்திரி.

''நீரே வாமனாவதாரம்தானே!'' என்று கேலி செய்தார் அம்மாஞ்சி.

அரண்மனை கஸ்ட் ஹவுஸில் ஐந்து பேருக்கும் தனித்தனி அறை ஒதுக்கியிருந்தார்கள்.

''ஜப்பான் சக்கரவர்த்தி இந்தத் தேர் ஓட்டத்திலே ரொம்ப ஆர்வமாயிருக்கிறாராம்'' என்றான் பஞ்சு.

''அவரை நாம் எப்போது சந்திக்கப் போகிறோம்?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''முதலில் குளியலை முடியுங்க. மற்றதெல்லாம் அப்புறம்'' என்றான் பஞ்சு.

ஒரு மணிக்கு எல்லோரையும் லஞ்ச்சுக்கு அழைத்தபோது சாம்பசிவ சாஸ்திரிகளை மட்டும் காணவில்லை. அவர் எங்கே போனார் என்பது யாருக்கும் தெரியவில்லை. அம்மாஞ்சிக்கோ பசி தாங்கவில்லை.

''சாஸ்திரிகள் எங்கே? எங்கே?'' என்று அலறிக்கொண்டிருந்தார் அம்மாஞ்சி.

''இவ்வளவு பெரிய அரண்மனையிலே அவரை எங்கே போய்த் தேடுவது?'' என்று கவலைப்பட்டார் குள்ள சாஸ்திரி.

''அவர் டயட்லே இருக்காராம். சாப்பிட வரவில்லை என்று சொல்லி விட்டார்'' என்றான் பஞ்சு.

''டயட்லேயோ? அவருக்கென்ன டயட்? உடம்பு இன்னும் இளைக்கணுமாமா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''இல்லே; டயட்னா கவர்ன்மெண்ட் பில்டிங் பேர். பார்லிமெண்ட் கூடுகிற இடம். டோக்கியோவிலேயே முக்கியமான இடம்'' என்றான் பஞ்சு.

"சரி சரி; நாம் சாப்பிடப் போகலாம் வாங்க" என்றார் அம்மாஞ்சி.

"நாளைக்கு நாம ஐந்து பேரும் ஒரு டீ ஸெரிமனிக்குப் போகணும்" என்றான் பஞ்சு.

"ஸெரிமனியா? எங்கே? ஜப்பான்காரர்கள்கூட சிராத்தமெல்லாம் பண்ணுவாளா! அது சரி; சிராத்தத்திலே டீ தான் கொடுப்பாளா? சாப்பாடு போட மாட்டாளோ?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"ஐயோ, டீ ஸெரிமனி என்றால் தவசம் இல்லேய்யா. ஜப்பானியப் பெண் ஜப்பானிய முறையிலே டீ தயாரித்துக் கொடுக்கிற ஒரு ஏற்பாட்டுக்கு டீ ஸெரிமனி என்று பெயர். அது ஒரு பெரிய கலை" என்றான் பஞ்சு.

"டீ என்றதும் எனக்கு நம் ஊர் நாயர் கடை ஞாபகம் வந்துவிட்டது இந்த ஊரிலே கூட நாயர் ஒருத்தர் ஓட்டல் வைத்திருக்கிறாராமே! மசாலா தோசைகூடப் போடறாங்களாம் அங்கே. நாமெல்லாம் ஒரு நாள் அங்கே போய்விட்டு வரணும்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

3

''எனக்கு ஒரு சந்தேகம்'' என்றார் அம்மாஞ்சி.

''என்ன அது?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''பெண்ணுக்குத் தானே கெய்ஷான்னு சொல்வது? அப்புறம் எதுக்கு ஆம்பிள்ளை மாதிரி ஷான்னு சொல்லணும்? கெய்ஷின்னே அழைக்கலாமே!'' என்றார் அம்மாஞ்சி.

''எனக்கு ஒன்று தோன்றுகிறது. ஜப்பான் வந்ததற்கு அடையாளமா இனிமே அம்மாஞ்சியை அம்மாஞ்ஷின்னே அழைக்கலாம்'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''அது சரி; ராத்திரி நன்றாய்த் தூங்கினீரா?'' என்று சாம்பசிவ சாஸ்திரியைக் கேட்டார் அம்மாஞ்சி.

''இல்லை; கட்டில் மேலே படுத்திருந்தேனா? தூக்கமே வரவில்லை. பூகம்பம் வருமோன்னு பயமாக இருந்தது. அப்புறம் என்ன செய்தேன் தெரியுமா? துண்டை உதறித் தரையிலே போட்டுக்கொண்டு நிம்மதியாப் படுத்து விட்டேன்'' என்றார் சாம்பசிவம்.

''காளிதாசன் கட்டிலில் படுத்த கதைதான்! ஏர்கண்டிஷன் ரூமிலே மெத்தென்ற 'குஷன்' கட்டிலில் சுகமாகப் படுத்துத் தூங்கக் கொடுத்து வைக்கணுமே! உமக்கு அவ்வளவுதான் பிராப்தம்'' என்று கேலி செய்தார் அம்மாஞ்சி.

''அப்படி ஒண்ணும் இல்லை. எந்த நிமிஷத்திலே பூகம்பம் வருமோ, என்னைக் கட்டிலிலிருந்து கீழே

தள்ளுமோ என்று பயந்துவிட்டேன்'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''மணி நாலு ஆகப் போகிறது. நேரமாச்சு. புறப்படலாமா?'' என்று கேட்டுக்கொண்டே அம்மாஞ்சி தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். அது நின்று போயிருந்ததால் அம்மாஞ்சியின் முகத்தில் அசடு வழிந்தது.

''உம்ம 'வாச்'சை ஏதாவது ஒரு ரயில் தண்டவாளத்தின் மீது கொண்டுபோய் வையும். அப்புறம் நிற்காமல் ஓடும்'' என்று கேலி செய்தார் ஜப்பான் சாஸ்திரி.

''இன்று செவ்வாய்க்கிழமை. மூணு நாலரை ராகு காலம். இந்த நேரத்தில் புறப்படலாமா?'' என்று ஒரு பிரச்னையைக் கிளப்பினார் சாம்பசிவ சாஸ்திரி.

''பரவாயில்லை; நம்ம பூமிக்குதான் ராகுகாலம், எமகண்டம் இதெல்லாம். இது ஜப்பான்'' என்றார் குள்ள சாஸ்திரி.

''பஞ்சு ஸாரும் கோபால் ராவும் எங்கே போனாங்க? ரொம்ப நேரமாக் காணோமே?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''அவங்க இரண்டு பேரும் டயட் பில்டிங் போயிருக்காங்க. அங்கே கல்ச்சுரல் அஃபேர்ஸ் மினிஸ்ட்ரியிலே இன்று டிஸ்கஷன் நடக்கிறதாம். தேரோட்டம் பற்றி 'த்ரெட்பேரா' எல்லா விவரங்களையும் டிஸ்கஸ் பண்ணப் போறாங்களாம்'' என்றார் சாம்பசிவம்.

''த்ரெட்பேர் என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''தேர் இழுக்கிற கயிற்றுக்கு 'த்ரெட்'னு சொல்லுவாங்க. 'பேர்'னு தேர் இழுக்கிறவங்க எத்தனை பேர் என்று அர்த்தம். அதுதான் த்ரெட்பேர்'' என்று விளக்கினார் சாம்பசிவம்.

''ஓய், சாம்பசிவ சாஸ்திரி! உமக்கு இங்கிலீஷ் தெரியாது. கண்டபடி உளறுதேயும். த்ரெட் பேர்னு நம்ம மூணு பேரையும் பற்றிப் பேசுவாங்க. நாம்தானே பேர் பாடியா இருக்கோம். அந்த பாடியிலே ஒரு த்ரெட் போட்டுக் கொண்டிருக்கோம். அதுக்குத்தான் த்ரெட்பேர்னு சொல்லுவாங்க'' என்று தமது பூணூலைக் காட்டி விளக்கிஞர் அம்மாஞ்சி.

''நாம் மூவரும் டோக்கியோ டவருக்குப் போகணுமே. அதுக்கு என்ன அரேஞ்ச்மெண்ட்?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''வாசலில் கார் ரெடியா நிற்கிறது. நாம் அதில் ஏறிக் கொண்டு இஷ்டப்பட்ட இடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரவேண்டியதுதான்'' என்ருர் சாம்பசிவம்.

''நமக்கு மொழியும் தெரியாது. வழியும் தெரியாதே!'' என்ருர் அம்மாஞ்சி.

''டிரைவர் விட்ட வழி'' என்ருர் சாம்பசிவம்.

''சரி, முதல்லே டிரைவரிடம் டோக்கியோ டவருக்குப் போகச் சொல்லணுமே, அதற்கு என்ன வழி?'' என்ருர் அம்மாஞ்சி.

''நான் சொல்றேன். எனக்கு ஜப்பான் பாஷை தெரியும்'' என்று முந்திக் கொண்டார் ஜப்பான் சாஸ்திரி.

''ஜப்பான் சாஸ்திரி வந்தது சௌகரியமாப் போச்சு! அவருக்கு இங்கிலீஷும் சுமாராத் தெரியும்'' என்ருர் சாம்பசிவம்.

மூவரும் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

''டோக்கியோ டவர், ஸுகுயுகிமாஷோ'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

அவர் அப்படிச் சொன்னதுதான் தாமதம். டிரைவர் வாயு வேகத்தில் டோக்கியோ டவரை நோக்கிப் பறந்தான்.

''ஜப்பான் பாஷை எப்போது கற்றுக் கொண்டீர்கள்?'' என்று குள்ள சாஸ்திரியை வியப்போடு கேட்டார் சாம்பசிவம்.

''கய்ட் புக்லே இருக்கிறது. டூரிஸ்ட்களுக்கு வேண்டிய முக்கியமான வார்த்தைகளெல்லாம் அதிலே போட்டிருக்கு. மத்தியானம் படிச்சு வைத்தேன். அதிலே இப்படி ஒரு வார்த்தை இருந்தது. அடிச்சு விட்டேன்!'' என்றார் குள்ள சாஸ்திரி பெருமையோடு.

''டோக்கியோவிலிருந்து கின்ஸாவுக்குப் போகணுமே, அப்ப என்ன செய்யப் போறீங்க?''

''இதே வார்த்தை தானே? 'கின்ஸா, ஸுகுயுகி மாஷோ' என்பேன்'' என்றார் குள்ள சாஸ்திரி.

டோக்கியோ டவர் அருகில் பெரும் கூட்டம் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்துக்கிடையில் இவர்கள் மூவர் மட்டும் பளிச்சென்று வித்தியாசமாகத் தெரிந்தார்கள்.

அமெரிக்க டூரிஸ்ட் ஒருவர் அம்மாஞ்சியைப் பார்த்து, ''வாட் இஸ் யுவர் நேம்?'' என்று கேட்டார்.

''அம்மாஞ்ஷி'' என்றார் அம்மாஞ்சி.

''ஓ! இட் ஸௌண்ட்ஸ் லைக் ஜாப்னீஸ்'' என்றார் அந்த அமெரிக்கர்.

அம்மாஞ்சி பெருமையோடு தம் கையிலிருந்த தக்ளியை ஒரு சுழற்றுச் சுழற்றி விட்டார். அது 'கிர்'ரென்று அழகாகச் சுழல்வதைக் கண்ட டூரிஸ்ட்டுகள், 'ஒண்டர் ஃபுல்!' என்றனர்.

''மின்சாரமே இல்லாமல் எப்படிச் சுழல்கிறது பாருங்கள்'' என்றார் அம்மாஞ்சி.

ஜப்பான் சாஸ்திரிகள் கையில் வைத்திருந்த பனை ஓலை விசிறியைப் பார்த்துவிட்டு, ''இது என்ன மெடீரியல்?'' என்று கேட்டார் ஒரு அமெரிக்கர்.

"பல்மைரா லீஃப்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பல்மைரா ட்ரீ எப்படி இருக்கும்?" என்று கேட்டார் அமெரிக்கர்.

"நெட்டையா உயரமா இருக்கும். முப்பது நாற்பது அடி உயரம் இருக்கும்" என்றார் சாம்பசிவம்.

"அவ்வளவு உயரத்திலுள்ள இந்த 'லீஃப்'களை எப்படி எடுப்பீர்கள்?"

"எங்கள் ஊரில் ஒவ்வொரு பல்மைரா ட்ரீக்கும் ஒரு லிஃப்ட் வைத்திருக்கிறோம். அதில் ஏறிப் போய்ப் பறித்து வந்து விடுவோம்" என்று ஒரு போடு போட்டார் சாம்பசிவம்.

"இண்டியா மஸ்ட் பி எ வெரி ரிச் கண்ட்ரி. எவெரி பல்மைரா ட்ரீ ஹேஸ் எ லிஃப்ட்!" என்றார் அமெரிக்கர்.

"நான் கீழேயே நிற்கிறேன். நீங்க ரெண்டு பேரும் லிஃப்ட்லே மேலே போய்ப் பார்த்துவிட்டு வாங்க" என்றார் சாம்பசிவம்.

"நீங்க இல்லாமல் எப்படி ஏரியல் சர்வே நடத்துவது? நீங்களும் வாங்க" என்றார் அம்மாஞ்சி.

"எனக்குப் பயமாயிருக்கு. இந்த ஊரிலே அடிக்கடி பூகம்பம் வருமாமே!" என்று நடுங்கினார் சாம்பசிவம்.

"ஏன் இப்படி நடுங்கறீங்க?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"அது சாதா நடுக்கமில்லே; நில நடுக்கம்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

அம்மாஞ்சியும் குள்ள சாஸ்திரியும் அவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

மூவரும் மேலே போனதும் முப்பது 'யென்' கொடுத்து ஆளுக்கொரு பைனகுலரை வாடகைக்கு வாங்கிக் கொண்டார்கள்.

“அதோ இம்பீரியல் பாலெஸ் தெரியுதே!” என்றார் ஜப்பான் சாஸ்திரி மகிழ்ச்சியோடு.

சாம்பசிவம் கீழே சாரிசாரியாகப் பார்க் செய்யப்பட்டிருந்த கார்களைக் கண்ணோட்டமிட்டார்...

“நம்ம டிரைவர் தெரியறானா பாருங்க” என்றார் அம்மாஞ்சி.

“அந்தக் கார்கள் எவ்வளவு அழகாகத் தெரியுது பாருங்க, ‘பளபள’ன்னு பாதம் பெப்பர்மின்ட்டைச் சப்பிவிட்ட மாதிரி” என்றார் சாம்பசிவம்.

“இந்தப் பக்கம் பார்த்தீங்களா, ஸுமிடா நதியை!” என்றார் அம்மாஞ்சி.

“நதியைக் கண்டதும் நீங்க ஸ்நானம் பண்ணக் கிளம்பிடாதீங்க” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

சாம்பசிவம் பைனாகுலரைத் திருகித் திருகித் தொலைவில் தெரிந்த கட்டடங்களுக்கு அட்ஜெஸ்ட் செய்தார்.

“கின்ஸா எந்தப் பக்கம் இருக்கிறது?” என்று கேட்டார் அம்மாஞ்சி.

சாம்பசிவம் ஏதோ ஒரு பக்கத்தில் சந்தேகமாகக் கையைக் காட்டினார்.

“என்னய்யா, கின்ஸா எந்தப் பக்கம் என்று கேட்டால் ஒரு ‘குன்ஸா’ கையைக் காட்டுகிறீரே!” என்றார் அம்மாஞ்சி.

“மொத்தம் மூன்று கின்ஸா இருக்கு. கிழக்கு கின்ஸா, மேற்கு கின்ஸா, நடு கின்ஸா—அது தெரியுமா உமக்கு?” என்று கேட்டார் சாம்பசிவம்.

“தெரியும்; அந்த மூன்றும் சேர்ந்தாற்போல் ஒரே இடத்திலேதான் இருக்கு. நீர் கை காட்டுகிற பக்கம் இல்லை” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“நாம் மூன்று பேரும் கின்ஸா மாதிரி எப்போதும் சேர்ந்தே இருக்கணும். கூட்டத்தில் தனித் தனியாகப் பிரிந்து விடக் கூடாது” என்றார் அம்மாஞ்சி.

“கின்ஸான்னு என்ன பேரு? அது எப்படி வந்தது?” என்று கேட்டார் சாம்பசிவம்.

“ஒரு காலத்திலே அந்த இடத்திலே வெள்ளி நாணயங்கள் செய்கிற தொழிற்சாலை இருந்ததாம். ‘கின்’ என்றால் வெள்ளி, ‘ஸா’ என்றால் தொழிற்சாலை என்று அர்த்தமாம். அதனால்தான் அந்த இடத்துக்கு அந்தப் பெயர் நிலைத்து விட்டதாம்” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“உமக்கு இதெல்லாம் யார் சொன்னது?” என்று கேட்டார் அம்மாஞ்சி.

“என் மருமான் சொன்னான்” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“அடாடா, இந்த டவரை எப்படித்தான் கட்டினாங்களோ?” என்று வியந்தார் சாம்பசிவம்.

“நாற்பது மாடி ஐம்பது மாடிக் கட்டடமெல்லாம் அங்கங்கே எப்படி உயர்ந்து நிற்கிறது, பாருங்க” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“யுத்தத்தின்போது தரைமட்டமாகப் போய்விட்ட ஒரு தேசத்தை என்னமாய் ‘டெவலப்’ பண்ணி விட்டான்!” என்று வியந்தார் சாம்பசிவம்.

“பூகம்பத்துக்குப் பயந்து உயரமான கட்டடங்களை கட்டக் கூடாதென்று இங்கே ஒரு சட்டம் போட்டிருக்காங்க. அதனால்தான் உயரமான கட்டடமே அதிகமில்லை. பத்து மாடி பதினொரு மாடியோடு சரி. இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா உத்தரவைத் தளர்த்திக்கிட்டு வராங்க. இல்லேன்னா இதுக்குள்ளே எல்லாமே நியூயார்க் மாதிரி அறுபது மாடிக் கட்டடங்களா உயர்ந்து விட்டிருக்கும்” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

‘‘இந்த டவர்லே நாலாயிரம் டன் ஸ்டீல் இருக்காமே!’’ என்றார் சாம்பசிவம்.

‘‘இரும்பே இல்லாத ஒரு நாட்டிலே ஸ்டீல் டவர்! என்ன ஆச்சரியம்!’’ என்றார் அம்மாஞ்சி.

‘‘மலையே இல்லாத தஞ்சாவூர் ஜில்லாவிலே கல்லிலேயே கோயில் கட்டவில்லையா? நம்ம நாட்டுப் பெருமை நமக்குத் தெரிவதில்லை’’ என்று குறைப்பட்டுக் கொண்டார் சாம்பசிவம்.

‘‘நம் நாட்டின் பெருமைகளை நிலை நாட்டத்தானே இங்கே தேர் தெப்பமெல்லாம் விடப்போகிறோம். ஜப்பானே மூக்கிலே விரல் வைத்து ஆச்சரியப்படப் போகிறது’’ என்றார் குள்ள சாஸ்திரி,

‘‘ஜப்பானியர்களுக்கு மூக்கு இருந்தால்தானே விரல் வைத்து ஆச்சரியப்படுவதற்கு? எல்லாம் சப்பை மூக்குன்னு?’’ என்றார் சாம்பசிவம்.

‘‘கல் என்றதும் எனக்கு இம்பீரியல் பாலெஸுக்கு வெளியே ரோடுகளுக்குப் பக்கத்தில் அழகாகப் பரப்பி வைத்திருக்கிறார்களே, அந்தக் கூழாங்கற்களின் ஞாபகம் வருகிறது’’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.

‘‘உருளைக் கிழங்கு மாதிரி இருக்கு ஒவ்வொன்றும்’’ என்றார் அம்மாஞ்சி.

‘‘உருளைக் கிழங்கு என்றதும் மசாலா தோசை சாப்பிடணும் போல இருக்கு எனக்கு’’ என்றார் சாம்பசிவம்.

‘‘இந்த ஊரிலே கிடைக்காத கறிகாயே கிடையாதாம். புடலங்காய் கூடக் கிடைக்கிறதாம். மார்க்கெட்டிலே பச்சை பச்சையாகக் கறிகாய் கொட்டி வெச்சிருக்குமாம். மூணு பேரும் நாளைக்குப் பையை எடுத்துண்டு போய்க் கறிகாய் வாங்கி வந்து நாமே சமையல் செய்யலாமா?’’ என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"ஃபஸ்ட்க்ளாஸ் ஐடியா! நான் ரெடி! புடலங்காய் பொரிச்சக் கூட்டு, உருளைக் கிழங்கு பொடிமாஸ், முருங்கைக்காய் சாம்பார், பச்சைப் பட்டாணி, கோஸ், பீன்ஸ் மூணும் போட்டு ஒரு கறி, ஒரு பச்சடி, ஒரு அப்பளம்! எப்படி?" என்றார் அம்மாஞ்சி.

"அடிச்சு நொறுக்கிடலாம்" என்றார் சாம்பசிவம்.

"அடாடா! நாக்கிலே ஜலம் சொட்றது" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பச்சைப் பட்டாணி, கோஸ், பீன்ஸ் இந்த மூணும் நல்ல காம்பினேஷன்" என்றார் சாம்பசிவம்.

"பீன்ஸ் கறியில் பச்சை மிளகாயை வெட்டிப் போட்டு விடாதீங்க. இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் பச்சை மிளகாயைக் கடித்து விடுவோம். அப்புறம் நாக்கிலே மட்டும் ஜலம் சொட்டாது. கண்ணிலிருந்தும் கொட்டும்" என்றார் சாம்பசிவம்.

"பச்சை மிளகாய், எலுமிச்சம் பழம், இஞ்சி, கொத்து மல்லி, கறிவேப்பிலை இந்த அஞ்சும் இருந்துட்டா சமையல் ருசியே தனி. அஞ்சும் பஞ்சரத்னம் மாதிரி" என்றார் அம்மாஞ்சி.

"ஜப்பான் ரோடுகளைப் பார்த்தீங்களா, எவ்வளவு க்ளீனா இருக்குது! ஒரு தும்பு தூசு இல்லையே!" என்றார் சாம்பசிவம்.

"ரோடா அது? மொஸைக் தரை மாதிரின்னா இருக்கு. ரோடிலேயே இலை போட்டுச் சாப்பிடலாம். அத்தனை சுத்தமாயிருக்கு."

"இங்கே தேர் விட வந்தீங்களா? பந்தி போட்டுச் சாப்பிட வந்தீங்களா?..." என்று கடிந்து கொண்டார் சாம்பசிவம்.

"ஊரை விட்டு வந்து முழுசா மூணு நாள் கூட ஆகவில்லை. இதற்குள் நாக்கு செத்துப் போச்சு" என்றார் அம்மாஞ்சி.

''எனக்கு மூக்கு செத்துப் போச்சு. கொண்டு வந்த பொடி ஸ்டாக் தீர்ந்து போச்சு'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''உமக்கு மூக்கே இல்லே ஜப்பான்காரன் மாதிரி. இந்த லட்சணத்திலே பொடி வேறேயா!'' என்று கேலி செய்தார் அம்மாஞ்சி.

''ஓய் அம்மாஞ்சி! உம்ம வாச்சிலே இப்ப என்ன டைம்?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''செவனே கால்!'' என்றார் அம்மாஞ்சி.

''மணி ஆறரை கூட இருக்காது. செவனே காலாம். உம்ம வாச் ரொம்ப ஃபாஸ்ட்டா ஓடறது'' என்றார் சாம்பசிவம்.

''ஜப்பானேல்லியோ! இங்கே எல்லாமே ஃபாஸ்ட்டாத்தான் ஓடும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

இதற்குள் மாலை மயங்கி இருள் சூழத் தொடங்கியது. அதே சமயம் ஒரு மாயா ஜாலம் நிகழ்வது போல் டோக்கியோ நகர் முழுதும் ஒளி பெற்று வைர வைடூரியங்களாக மாறி மின்னத் தொடங்கின. நியான் விளக்குகளும், பேப்பர் விளக்குகளும், பூச்சி எழுத்துக்களும் சேர்ந்து வண்ணக் கோலங்களாய் நெளிந்து வளைந்து கொண்டிருந்தன.

''சற்றுமுன் பகல் வெளிச்சத்தில் பார்த்த டோக்கியோவுக்கும் இப்போது இரவில் பார்க்கும் டோக்கியோவுக்கும் எவ்வளவு வித்தியாசம்!'' என்றார் அம்மாஞ்சி.

''கின்ஸா வீதியில் தேர் நகரும் போது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்'' என்றார் சாம்பசிவம்.

''வள்ளுவருக்கு நுங்கம்பாக்கத்திலே தேர் எழுப்பினோம். இங்கே கின்ஸாவிலே தேரிலேயே அவரை வைத்து இழுக்கப் போகிறோம்'' என்று பெருமை பொங்கக் கூறினார் அம்மாஞ்சி.

"கின்ஸா என்கிற பெயரில் 236 வீதிகள் இருக்கின்றனவாம். எந்தத் தெருவிலே தேரை விடப் போறீங்க?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"மெயின் ஸ்ட்ரீட்லே தான் விடணும். அந்த வீதி தான் நம்முடைய கம்பீரமான தேருக்கேற்ற வகையில் விசாலமாக இருக்கும்" என்ருர் அம்மாஞ்சி.

"பிஸினஸ் ஏரியாவாச்சே! பிஸினஸ் ட்ராஃபிக் இருக்காதோ?" என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"ஸண்டே ஸண்டே அந்த வீதியிலே கார்களே போகக்கூடாதாம். எந்த வண்டியும் அனுமதிக்கப்படுவதில்லையாம்" என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

"யார் சொன்னது?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"என் மருமான் சொன்ஞன்" என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

மூவரும் கின்ஸாவுக்குப் போய் அந்த வீதிகளில் நடக்கத் தொடங்கிஞர்கள். திடீரென்று ஓர் இடத்தில் ஆணி அடித்த மாதிரி நின்று கொண்டார் ஜப்பான் சாஸ்திரி.

"இங்கே எதற்கு நிற்கிறீர்?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"இப்போது நான் இருபதாயிரம் டாலர் மீது நின்று கொண்டிருக்கிறேன்" என்று ஒரு புதிர் போட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"என்ன சொல்றீங்க? இருபதாயிரம் டாலரா? உம்ம காலடியில் கிடக்கிறதா? யாராவது பர்ஸைக் கீழே தவற விட்டுவிட்டாங்களா, என்ன?" என்று கேட்டார் சாம்பசிவம் திகைப்போடு.

"அதெல்லாம் இல்லே; நாம் நிற்கிற இந்த இடம் இந்த டோக்கியோவிலேயே மிகவும் காஸ்ட்லியான இடம்.

ஒரு சதுர அடி நிலம் இருபதாயிரம் டாலர்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''யார் சொன்னது? உங்க மருமான் சொன்னாரா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

சாம்பசிவ சாஸ்திரி ஆகாசத்தையே பார்த்துக் கொண்டு நடந்தார்.

''மேலே என்ன பார்க்கிறீங்க? தேர் ஆகாசத்திலா ஓடப் போகுது?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''தேர் போகிறபோது மேலே எதுவும் இடையூறு இருக்கக் கூடாதல்லவா? அப்படி ஏதாவது இருக்கிறதா என்றுதான் பார்க்கிறேன். நல்ல வேளை. குறுக்கே ஒரு ஒயர் கூட இல்லை'' என்றார் சாம்பசிவம்.

''அது மட்டுமா? இரண்டு பக்கமும் பத்து மாடிக் கட்டடங்கள். கட்டடத்தின் மீதெல்லாம் ஜனங்கள் உட்கார்ந்து வேடிக்கை பார்க்க ரொம்ப வசதியான இடம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

திடீரென்று சாம்பசிவ சாஸ்திரிகளைக் காணவில்லை.

''பின்னோடு தானே வந்து கொண்டிருந்தார்...'' என்று இழுத்தார் ஜப்பான் சாஸ்திரி.

''எங்கே போயிருப்பார்?'' என்று கவலையோடு கேட்டார் அம்மாஞ்சி.

''வழியிலே யாராவது கெய்ஷா அழகியைப் பார்த்து விட்டு இளித்துக்கொண்டு நிற்கிறாரோ, என்னவோ?'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''நீர் இங்கேயே நில்லும். நான் போய்த் தேடி அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வந்த வழியாகவே திரும்பி நடந்தார் அம்மாஞ்சி வாத்தியார்.

“நடைபாதையில் ஸப்வே எண்ட்ரன்ஸ் இருக்கிறது. ஒரு வேளை அந்த வழியிலே இறங்கிப் போயிட்டாரோ என்னவோ?” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“திண்டாடித் தெருவில் நிற்கட்டும். ஊரெல்லாம் அலைந்துவிட்டுக் கடைசியிலே எப்படியாவது வந்து சேருவார்” என்றார் அம்மாஞ்சி.

“தனியாக நடந்து வந்தால் இம்பீரியல் பாலெஸ் கேட்டில் உள்ளே விடமாட்டானே இவரை” என்று கவலைப்பட்டார் ஜப்பான் சாஸ்திரி.

“ராகு காலத்தில் புறப்பட்டோம் இல்லையா? பலன் கிடைச்சுட்டுது” என்றார் அம்மாஞ்சி.

## 4

கின்ஸா ஏரியா முழுதும் சாம்பசிவ சாஸ்திரியைச் சல்லடை போட்டுத் தேடி விட்டார்கள், அம்மாஞ்சி வாத்தியாரும் குள்ள சாஸ்திரியும்.

‘‘தேடித் தேடிச் சலித்து விட்டது. அவர் எங்குமே அகப்படவில்லையே!’’ என்றார் குள்ள சாஸ்திரி.

‘‘இப்படிச் சல்லடை போட்டுத் தேடினால் சலிக்காமல் என்ன செய்யும்?’’ என்று அந்த வேதனையிலும் ‘ஜோக்’ அடித்தார் அம்மாஞ்சி வாத்தியார்.

‘‘அம்மாஞ்சி! ஜோக் அடிப்பதற்கு உமக்கு நேரம் காலம் கிடையாதா? மணி ஒன்பதரை ஆகப்போகிறது. என்னால் இனி ஒரு அடி கூட நகர முடியாது. கால் வலி தாங்கவில்லை’’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.

‘‘உமக்குக் கால் வலி, எனக்குத் தலைவலி. ஏதாவது ஒரு ரெஸ்டாரண்ட்டில் புகுந்த டீ சாப்பிடுவோம் என்றால் மொழிப் பிரச்னை’’ என்றார் அம்மாஞ்சி.

‘‘எங்காவது டீ ஸெரிமனிக்குப் போகலாமா?’’ என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

‘‘நல்ல நேரம் பார்த்தீர் டீ ஸெரிமனிக்குப் போக! நினைச்சபோது நம் ஊர் லாரி டிரைவர்கள் டீக்கடையில் புகுந்து ‘ஒரு ஸிங்கிள் டீ’ அடிச்சுட்டு வராங்களே, அந்த மாதிரி என்று நினைச்சுட்டீரா?’’ என்று கேட்டார் அம்மாஞ்சி.

''டீ ஸெரிமனி என்றால் என்ன செய்வாங்க? அதைப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''அதற்கு இதுவா நேரம்? சாவகாசமாப் போய், நிதானமா உட்கார்ந்து, ஆற அமர கவனிக்க வேண்டிய ஒரு கலை அது...'' என்றார் அம்மாஞ்சி.

''ஆற அமர உட்கார்ந்து கவனித்தால் டீ ஆறிப் போயிடாதோ?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''ஆமாம், ஆறிப் போயிடும். அப்புறம் திரும்பச் சுட வைத்துக் கொடுப்பாங்க. கர்மம்! டீ ஸெரிமனின்னு அது ஒரு சிராத்தம்னு சொன்னவர்தானே நீர்?'' என்று தலையில் அடித்துக் கொண்டார் அம்மாஞ்சி.

''இப்ப என்ன செய்யலாம்?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''காருக்கே போயிடலாம்'' என்றார் அம்மாஞ்சி.

இருவரும் காரை நெருங்கியபோது, சாம்பசிவ சாஸ்திரி காருக்குள் ஜம்மென்று உட்கார்ந்து விசிறிக் கொண்டிருந்தார். அவரைக் கண்ட அம்மாஞ்சிக்குக் கோபம் கோபமாக வந்தது.

''ஓய், எங்கே தொலைந்து போனீர்? உம்மைத் தேடித் தேடி இந்த கின்ஸா முழுவதும் அலைந்தோம். காலே போச்சு எங்களுக்கு'' என்றார் அம்மாஞ்சி.

''நானா தொலைந்து போனேன்? நீங்கதானே காணாமல் போயிட்டீங்க? கின்ஸாவிலே ஒரு கட்டடத்தின் மீது உலகம் மாதிரி உருண்டையா ஒன்று சுற்றிக் கொண்டிருந்ததே, அதை அண்ணாந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். திரும்பிப் பார்க்கிறேன். உங்க ரெண்டு பேரையும் காணோம். எங்கே போனீர்கள் என்றே தெரியல்லே. சரி, எப்படியும் காருக்கு வந்து சேருவீங்கன்னு இங்கே வந்து உட்கார்ந்துட்டேன்'' என்றார் சாம்பசிவம்.

“ஏதாவது சாப்பிட்டீரா?” என்று கேட்டார் அம்மாஞ்சி.

“வழியிலே ஒரு ரெஸ்டாரண்ட் இருந்தது. அந்த ஓட்டல்லே என்னென்ன ஐட்டங்கள் உண்டோ அத்தனையும் மாதிரிக்கு ஒண்ணொண்ணு கண்ணாடி ‘விண்டோ’வில் அழகா அடுக்கி வைத்திருந்தாங்க. வெளியே நின்றபடியே அந்தக் கண்ணாடிச் சுவர் வழியா அத்தனை ஐட்டங்களையும் பார்த்தேன். எல்லாவற்றுக்கும் நம்பர் கொடுத்து அதன தன் மீது விலையும் எழுதி வைத்திருந்தாங்க. ஓட்டலுக்குள் போய் நமக்குத் தேவையான நம்பரைச் சொல்ல வேண்டியதுதான். நாம் கேட்கிற ‘ஐட்டம்’ மேஜைக்கு வந்து விடும். பாஷை தெரிய வேண்டிய அவசியமே இல்லை” என்றார் சாம்பசிவம்.

“பிடித்திருந்தால் உள்ளே போய் தேவையானதைக் கேட்டுச் சாப்பிட வேண்டியது தானே?” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“ஐட்டம் பிடித்திருந்தது. விலைதான் பிடிக்கவில்லை...”

“அப்புறம்?...”

“அப்புறம் என்ன, பேசாமல் வந்துட்டேன். கையிலே இருந்ததே நூறு யென்தான். அதை வைத்துக்கொண்டு என்னத்தை ஆர்டர் பண்றது? பில் எக்கச்சக்கமாக ஆயிட்டுதுன்னா அப்புறம் மாவரைச்சுட்டு வரவேண்டியதுதான்” என்றார் சாம்பசிவம்.

“இங்கெல்லாம் மாவரைக்கச் சொல்ல மாட்டா. பிளேட்தான் கழுவச் சொல்லுவா” என்றார் அம்மாஞ்சி.

“நீங்க கண்ணாடி வழியா பார்த்த ஐட்டமெல்லாம் அசல் இல்லை சாஸ்திரிகளே, எல்லாம் பிளாஸ்டிக் மாடல். அசலுக்கும் அதற்கும் வித்தியாசமே தெரியாது. அவ்வளவு தத்ரூபமா இருக்கும். நெருப்பிலே தீய்ந்து போன இடம் கூடக் கறுப்பாகத் தெரியுமே...” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"ஆமாம்; ஏதோ மீன் மாதிரி ஒன்று. அப்படித்தான் இருந்தது. நான் அதை அசல் என்றே நம்பிவிட்டேன்..." என்றார் சாம்பசிவம்.

"இந்த நாட்டிலே ஒரு விசேஷம் கவனிச்சீங்களா?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"என்ன அது?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"எங்கே பார்த்தாலும் புத்தர் கோயில். வணங்குவது புத்தரை. சாப்பிடுவது மாமிசம். புத்தருடைய கொள்கைக்கு நேர் விரோதம்" என்றார் அம்மாஞ்சி.

"சரி, நேரமாகிறது; பாலெஸுக்குப் புறப்படலாம்" என்றார் அம்மாஞ்சி.

மூவரும் பாலெஸை அடையும் போது மணி கிட்டத் தட்ட பத்தரைக்கு மேலாகிவிட்டது.

"கோபால் ராவும், பஞ்சு ஸாரும் ஒன்பது மணிக்கே சாப்பிட்டு விட்டு வெளியே போய்விட்டார்களாம். பாலெஸ் சிப்பந்திகள் சொன்னார்கள்" என்றார் ஜப்பான் சாஸ்திரிகள்.

"எங்கே போயிருப்பாங்க?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"இது நைட் ஸிடி. ராத்திரி முழுதும் காபரேயும், கூகியும் நடக்கும். எங்கே போனாங்களோ?" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"நாம் கூட எங்கேயாவது போய் மஸாஜ் செய்து கொண்டு வந்தால் என்ன? உடம்பு வலிக்கு சுகமாயிருக்குமே?" என்றார் அம்மாஞ்சி.

"உமக்கு மஸாஜ் வேறே கேட்கிறதா, மஸாஜ்! ஏதாவது இடம் தெரியாத இடத்திலே போய்க் கேட்டு வைக்காதீங்க. நிஜமாகவே உடம்பைப் பிடிச்சு அனுப்பிடப் போறாங்க! அப்புறம் பிளாஸ்திரி போட்டுக்க வேண்டியது

தான். அதைப் பார்த்துவிட்டு சாஸ்திரீஸ் வித் பிளாஸ் திரீன்னு பேப்பர்லே போடுவாங்க'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''டர்க்கிஷ் பாத்துக்குன்னு ஒரு இடம் இருக்காம். அங்கே அழகான பொம்மனாட்டிகளெல்லாம் வந்து நம்மைக் குளிப்பாட்டி விடுவாங்களாம்'' என்றார் அம்மாஞ்சி.

''டர்க்கிஷ் பாத் என்றால் என்ன?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''டர்க்கி டவல் ஸ்நானம்!'' அம்மாஞ்சி சுருக்கமாக விளக்கினார்.

''நாமே ஒரு டர்க்கி டவலை எடுத்துக்கொண்டு போய் ஏதாவது ஒரு ஏரியிலே ஸ்நானம் பண்ணிட்டு வந்தாப் போச்சு. அங்கேயே ஹாட்வாட்டர் ஸ்பிரிங்கெல்லாம் கூட வரதாமே. அதிலே குளித்தால் நல்லதாம்'' என்றார் சாம்பசிவம்.

''அதெல்லாம் தெருக்கப்புறம் வைத்துக் கொள்வோம். இப்ப சாப்பிடப் போவோம் வாங்க...'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''எனக்கு ஒரு சந்தேகம்'' என்றார் அம்மாஞ்சி திடீரென்று.

''என்ன சந்தேகம் வந்து விட்டது உமக்கு?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''ஒன்றுமில்லே. நமக்கும் தேரோட்டத்துக்கும் என்ன சம்பந்தம் என்பதுதான் அந்த சந்தேகம்'' என்றார் அம்மாஞ்சி.

''இப்ப சம்பந்தம் இருக்கிறவங்கதான் எல்லா வேலையும் செய்யறாங்களா, என்ன? அந்த மாதிரிதான் நாம் வந்திருப்பதும். வந்தாச்சு; இனிமேல் அதைப்பற்றி என்ன யோசனை?'' என்றார் அம்மாஞ்சி.

''ஒரு பொருத்தம் கவனிச்சீங்களா? திருவாரூர்த் தேரின் உயரம் 101 அடி. இங்கே கின்ஸா வீதியிலுள்ள கட்டடங்களின் உயரம் 102 அடி'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''தேரோட்டம் என்றால் நாலு வீதியைச் சுற்ற வேண்டாமா? அப்படின்னா டர்னிங்லே தேரைத் திருப்பணுமே, அதற்கு என்ன வழி?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''ஜப்பான்லே ரயில் ஓட்டத்தையே எலெக்ட்ரானிக் ஸிஸ்டத்திலே கண்ட்ரோல் பண்றாங்க. தேரைத் திருப்புவதுதானா ஒரு பிரமாதம்?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''அதெல்லாம் கூடாது. நம் ஊர்த் தேரை நம் ஆட்கள்தான் இழுக்கணும். திருப்புவதெல்லாம் கூட நம் ஊர் ஸிஸ்டத்தில்தான் திருப்பணும். ஸ்டீல் ஷீட் ரீப்பர், கட்டையெல்லாம் சக்கரத்தின் கீழே வைத்து அவற்றின் மீது விளக்கெண்ணெயை ஊற்றிவிட்டால் தேர்ச்சக்கரம் அதில் வழுக்கிக் கொண்டு 'டர்ன்' ஆகும். அப்போது, அடாடா, தேர் கம்பீரமாகத் திரும்புகிற காட்சி அற்புதமாயிருக்கும். அதுதான் இந்த விழாவுக்கே க்ளைமாக்ஸ்'' என்றார் அம்மாஞ்சி.

''அப்படின்னா முட்டுக்கட்டைகளோடு ரீப்பர் கட்டை, ஸ்டீல் ஷீட், விளக்கெண்ணெய் இதெல்லாம் ஞாபகமாகத் தமிழ் நாட்டிலேருந்து கொண்டுவரணும்'' என்றார் சாம்பசிவம்.

''அது மாத்திரம் இல்லே. அங்கங்கே சக்கரங்களின் கீழே கட்டைகளைப் போட்டு தேரை நகர்த்த வேண்டியிருக்கும். அதற்காக லாரி லாரியா தூங்குமூஞ்சி மரக்கட்டைகள், இலுப்பைக்கட்டைகள் கூட வரணும்'' என்றார் அம்மாஞ்சி.

''கட்டைகளெல்லாம்கூட அக்பர் ச்க்கரவர்த்தியிலே பயணமா? கேவலம் இந்தக் கட்டைகளுக்கு வந்த யோகத்தைப் பாருங்கள். ஜம்போ ஜெட்லே பயணம்!''

''ஆமாம், ஜப்பானுக்கு ஜம்போ ஜெட்டில் பறந்து சென்ற முதல் தூங்குமூஞ்சி மரக்கட்டை என்று பேப்பர்லே போடுவார்கள்!'' என்றார் சாம்பசிவம்.

''தேர் தெப்பம் முத்துப்பல்லக்கு மூன்றையும் மல்லிகைப் பூவால் அலங்காரம் செய்ய வேண்டும். மதுரையிலிருந்து மல்லி, கனகாம்பரம், தவனம் மூன்றும்கூட முதல் நாளே அக்பர்லே வந்துவிட வேண்டும்'' என்றார் அம்மாஞ்சி.

''அக்பருக்குச் சரியான வேலை இருக்குன்னு சொல்லுங்க......'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''சிவகாசியிலிருந்து வெடிகளெல்லாம் வரணும். அமெரிக்காவுக்கே போறதே! அதுக்கு ஒரு ட்ரிப், நாதஸ்வர கோஷ்டிகளுக்கு ஒரு ட்ரிப், ஓதுவார்களுக்கு ஒரு ட்ரிப், அப்புறம் தேர் இழுக்கறவங்க, இழுக்காதவங்க, இழுக்கிற மாதிரி பாசாங்கு செய்றவங்க, முட்டுக்கட்டை போடறவங்க, இவங்க எல்லாருக்கும் சேர்ந்து எத்தனை 'ட்ரிப்' ஆகுமோ?'' என்றார் அம்மாஞ்சி.

''சந்தனம் அரைக்கிறவங்களை விட்டுட்டீங்களே?'' என்றார் சாம்பசிவம்.

''சந்தனமா? அது எதுக்கு?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''தேர் இழுக்கிறவங்க எல்லோருக்கும் சந்தனம் பூசி விடுங்க. அதெல்லாம் தான் தமாஷ். நம் ஊர் சந்தனம், ஊதுவத்தி வாசனையை ஜப்பான்காரங்க ரசிக்க வேண்டாமா?'' என்றார் சாம்பசிவம்.

''அது சரி; ஸ்டீல் ஷீட்டில் விளக்கெண்ணெய் விடற ஐடியா யாருடையது? ரொம்ப நல்ல ஐடியாவா இருக்கே?'' என்றார் ஜப்பான்.

''எல்லாம் வி. எஸ். டி. ஐடியாவாத்தான் இருக்கும். தேர் விடுவதில் அவர் ஒரு எக்ஸ்பர்ட்'' என்றார் அம்மாஞ்சி.

''விளக்கெண்ணெயைக் கொட்டினால் கின்ஸா வீதி யெல்லாம் பாழாயிடுமே!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அது மட்டுமா? தேர் இழுக்க வருகிறவர்களில் பாதிப் பேர் வெற்றிலை பாக்குப் போடுகிறவர்களாயிருப்பாங்க. அவங்க வேறே ரோடெல்லாம் துப்பிடுவாங்களே, அதை நினைக்கிறபோதுதான் கஷ்டமாயிருக்கு'' என்றார் சாம்ப சிவம்.

''வெற்றிலை போடுகிறவர்கள் தரையைக் கெடுப் பாங்க. பொடி போடுகிறவர்கள் காற்றைக் கெடுப்பாங்க. உம்...ஜப்பான் சுத்தமான தேசம்...'' என்று இழுத்தாற் போல் கூறி, குள்ள சாஸ்திரியை ஓரக் கண்ணால் பார்த் தார் அம்மாஞ்சி.

''ஆமாம், இவ்வளவு பேரையும் எங்கே தங்க வைப் பது?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார் சாம்பசிவம்.

''ஓட்டல் ஒகூரா, ஓட்டல் டய்ச்சி, ஓட்டல் டோக் கியோ இப்படி எல்லா ஓட்டலிலும் போட வேண்டியது தான். சக்கரவர்த்தியே இதில் ரொம்ப ஆர்வமா யிருக்கிற போது இதெல்லாம் ஒரு பிரச்னையா? ஜப்பானில் தடுக்கி விழுந்தால் ஓட்டல். முதல்லே தெப்பம் விடறது எங்கே? அது தீர்மானம் ஆக வேண்டாமா?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''நாளைக்கே நாம் மூன்று பேரும் ரயிலில் போய் ஃப்யூஜி மௌண்டன் பக்கத்திலே உள்ள ஹகோனே ஏரி யைப் பார்த்துவிட்டு வந்துவிடலாம்'' என்றார் அம்மாஞ்சி.

''முதலில் ஸூப்பர் எக்ஸ்பிரஸில் ஏறி க்யோடாவுக்குப் போய்ப் பார்ப்போம். ஜப்பானின் மிகப் பழமையான நகரம் அது. ஊர் ரொம்ப அழகாக இருக்குமாம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ஸூப்பர் எக்ஸ்பிரஸ்லே பயணம் செய்வதே ஒரு தனி அனுபவமாம். மணிக்கு 125 மைல் வேகம் போகு மாம்'' என்றார் சாம்பசிவம்.

''பறக்கும்னு சொல்லுங்க!'' என்றார் அம்மாஞ்சி.

''புல்லெட் ட்ரெயின் என்றுகூட அதற்கு ஒரு பெயர் உண்டு'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''முதல்லே டோக்கியோ ஸ்டேஷனுக்குப் போய் ஸூப்பர் எக்ஸ்பிரஸ் புறப்படற பிளாட்பாரத்தைக் கண்டு பிடிக்கணுமே. அதைச் சொல்லுங்க'' என்று கவலைப்பட்டார் அம்மாஞ்சி.

''ஒரு கவலையுமில்லை. ஜப்பான் கய்டு அழகிகள் ஸ்டேஷன்லே மூலைக்கு மூலை நிற்பார்களாம். அவர்களுக்கு இங்கிலீஷ் நன்றாகப் பேசத் தெரியுமாம்!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''நமக்குப் பேசத் தெரியாதே!'' என்றார் அம்மாஞ்சி.

''சரி, காலையில் முதல் காரியமா பஞ்சு ஸாரைப் பார்த்து நம்ம ப்ரோக்ராமைச் சொல்லிவிடலாம்'' என்றார் அம்மாஞ்சி.

''ஆமாம்; அவருக்கும் நிறைய வேலை இருக்கும். தேர் நிலைக்கு வருகிற வரைக்கும் அவர் ஒரு நிலையில் நிற்க மாட்டார். பம்பரமாய்ச் சுற்றிக் கொண்டே இருப்பார்'' என்றார் சாம்பசிவம்.

# 5

அம்மாஞ்சி வாத்தியார், சாம்பசிவ சாஸ்திரி, குள்ள கனபாடிகள் மூவரும் நாலு மணிக்கே எழுந்து ஸ்நானத்தை முடித்து விட்டார்கள். ஜப்பான் சாஸ்திரி அரண்மனைப் பூங்காவிலுள்ள செர்ரி மரம் ஒன்றின் கீழே போய் உட்கார்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தார். சாம்பசிவ சாஸ்திரி ஈரத்துணிகளை, குள்ளம் குள்ளமான பரட்டைத் தலைச் செடிகள்மீது காயப் போட்டுக் கொண்டிருந்தார். அம்மாஞ்சி வாத்தியார் பார்க் பெஞ்ச் மீது உட்கார்ந்து தாமே தயாரித்த நெஸ் காப்பியைச் சுடச்சுடச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"குளிர் வேளையிலே மணக்க மணக்க சூடா ஒரு கப் காப்பி வயிற்றுக்குள் போகும்போது அதன் சுகமே அலாதி தான்" என்றார் அம்மாஞ்சி.

"அந்தக் காப்பி எங்க வயிற்றிலும் கொஞ்சம் போகட்டுமே?" என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

"சுறுசுறுப்புக்குப் பெயர் போன இந்த ஜப்பான் தேசம் இந்த உஷத் காலத்திலே எப்படி அமைதியாக அடங்கிக் கிடக்கிறது பார்த்தீர்களா?" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பறவைகள் முறை வைத்துக் குரல் கொடுக்கும் இன்னிசையைக் கேளுங்க. இங்கிலீஷ் நோட் வாசிக்கிற மாதிரி இல்லே?" என்று ரசித்தார் ஜப்பான் சாஸ்திரி.

''விடியற்கால வேளையின் சுகமே தனி. இந்த சுகத்தை மெட்ராஸில் பால்காரர்கள்தான் அனுபவிக்கிறார்கள்'' என்றார் அம்மாஞ்சி.

''நம் மாதிரி வைதிகர்களும் கூடத்தான்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''எவ்வளவு பெரிய அரண்மனை, எத்தனை பெரிய தோட்டம்! மஞ்சளும் ஆரஞ்சுமாகப் பூத்துக் குலுங்கும் இந்த மரங்களின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். இன்னும் கொஞ்ச நேரத்திலே உதய சூரியன் ஒளி பட்டு இந்தப் பூக்கள் தகதகவென்று நெருப்புக் கொழுந்துகளாக மாறிவிடும்'' என்றார் சாம்பசிவம்.

''மதில் சுவரைப் பாருங்கள்! எத்தனை அகலம்! அதன் மீது ஒரு வண்டியே போகலாம்'' என்றார் அம்மாஞ்சி.

''சக்கரவர்த்திக்கு நல்ல டேஸ்ட்...அத்தோடு மரம், செடி, கொடி, மலர் இதிலெல்லாம் அலாதி ஈடுபாடு. 'ப்ளாண்ட் லைஃப்' பற்றிப் பல புத்தகங்கள் எழுதியிருக்காராம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அதோ பஞ்சு ஸார் கமிங்!'' என்றார் அம்மாஞ்சி.

''அடேடே! அதுக்குள்ளே குளிச்சு ரெடியாயிட்டாரே! வாங்க, வாங்க'' என்று மூவரும் பஞ்சுவை வரவேற்றார்கள்.

''ராத்திரியெல்லாம் எங்கே? கின்ஸாவா? ரொம்பக் குஷிதான் போலிருக்கு! கோபால் ராவ் எங்கே, ஆளையே காணோம்?''

''இங்கே தானே இருந்தார் இப்போ. அது சரி, நேற்று நீங்க எங்கெல்லாம் போயிருந்தீங்க? என்னெல்லாம் பார்த்தீங்க? தேர் விடறதுக்கு வசதியா ஏதாவது இடம் 'சூஸ்' பண்ணீங்களா?'' என்று கேட்டான் பஞ்சு.

"கின்ஸாவிலே தான் விடணும். அதுதான் பொருத்தமான இடம். ரூட்டெல்லாம் கூடப் பார்த்து வைத்து விட்டோம்" என்றார் அம்மாஞ்சி.

"அப்படின்னு இனிமேல் டயத்தை வேஸ்ட் பண்ணக்கூடாது. சுறுசுறுப்பா வேலை நடக்கணும். பிரைம் மினிஸ்டர் டாகியோ மிக்கி, ஃபாரின் மினிஸ்டர் கிச்சி மியாஸாவா, சக்கரவர்த்தி ஹிரா ஹிடோ எல்லாரையும் நான் சந்திச்சுப் பேசிட்டேன். அவங்க எல்லாரும் ஒரே ஆவலாயிருக்காங்க. விழாவை நம் இஷ்டப்படி நடத்திடச் சொல்றாங்க. ஆனால் தேரை மட்டும் இந்த அரண்மனைக் குள்ளே தான் செய்யணுமாம். சக்கரவர்த்தி, தம் மனைவி மக்களுடன் அதை வேடிக்கை பார்க்கணுமாம். பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. தேர் வேலை சீக்கிரம் ஆரம்பிக்கணும். அதுதான் முக்கியம்னு சொல்லிட்டாங்க" என்றான் பஞ்சு.

"வள்ளுவர் சிலை..." என்று இழுத்தார் அம்மாஞ்சி.

"அதையும் இங்கே தான் செய்யணுமாம். ஒரு சௌகரியம். நுங்கம்பாக்கத்தில் வேலை செய்த ஸ்தபதிகள், சிற்பிகள், கலைஞர்கள் எல்லாரும் இப்ப ஓய்வாத்தான் இருக்காங்க. அவங்க அத்தனை பேரையும் அப்படியே ஒரு ப்ளேன்லே ஏற்றி நாளை மறுநாளே அனுப்பச் சொல்லிட வேண்டியதுதான்" என்றான் பஞ்சு.

"வள்ளுவர் சிலைன்னு அதுக்குக் கல் வேணுமே. அவ்வளவு பெரிய கல்லை எப்படி ப்ளேன்லே கொண்டு வர முடியும்? சிரமப்படுமே..." என்று இழுத்தார் சாம்பசிவம்.

"அதென்ன பிரமாதம்! ஒரு மலையே வேண்டுமானாலும் கொண்டு வரலாம்" என்றார் அம்மாஞ்சி.

"எனக்கு ஒரு ஐடியா தோண்றது..." என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"என்ன அது?"

"வள்ளுவர் சிலை செய்வதென்றால் குறைந்தது நாலு மாசமாவது ஆகுமே..." என்று இழுத்தார் ஜப்பான் சாஸ்திரி.

"அதனாலே?..." என்று கேட்டான் பஞ்சு.

"மயிலாப்பூர் ஸான்ஸ்க்ரிட் காலேஜ் முன்னாலே உள்ள வள்ளுவர் சிலையை இங்கே கொண்டுவந்து விடலாமே!"

"அதெல்லாம் கூடாது. டோக்கியோவிலே வள்ளுவர் சிலை, தேர், தெப்பம், முத்துப் பல்லக்கு இவ்வளவும் செய்தாகணும். அதெல்லாம் எப்படிச் செய்யறாங்கன்னு சக்கரவர்த்தி குடும்பத்தார் நேரில் பார்க்கணும். அதுதான் முக்கியம் இதிலே..." என்றான பஞ்சு.

"எனக்கு ஒரு ஐடியா தோணறது..." என்றார் சாம்பசிவம்.

"என்ன அது?"

"தெப்போ-76 முடிஞ்சதும் அந்தத் தேரையும் வள்ளுவர் சிலையையும் இந்தத் தோட்டத்திலேயே நிரந்தரமா வைத்து, இங்கே ஒரு வள்ளுவர் கோட்டம் அமைக்க வேண்டும். திருக்குறளுக்காகத் தங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்ட தமிழ்ப் புலவர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களில் பத்துப் பதினைந்து பேரைத் தேர்ந்தெடுத்து இந்த வள்ளுவர் கோட்டத்தை அவர்கள் பொறுப்பில் விட்டுவிட வேண்டும். குறள் நெறிகளைப் பரப்ப அவர்கள்தான் உண்மையாகப் பாடுபடுவாங்க. ராமகிருஷ்ண மடத்திலே இல்லையா சில துறவிகள், அந்த மாதிரி டெடிகேஷனோடு இவங்களும் வேலை செய்வாங்க. இதுதான் என் ஐடியா" என்றார் சாம்பசிவம்.

"நம்ம கலைஞர் கண்ட கனவு" என்றார் அம்மாஞ்சி.

"கலைஞர் வருவாரோல்லியோ இந்த விழாவுக்கு?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"பருப்பில்லாமல் கல்யாணமா? தெப்போ 76 இனுகுரேஷனே அவர் கையாலேதான். யூ மஸ்ட் கிவ் திடெவில் இட்ஸ் ட்யூ" என்றான் பஞ்சு.

"பஸ்ட்கிளாஸ் ஐடியா!" என்றார் அம்மாஞ்சி.

"இந்த மாதிரி ஐடியாவெல்லாம் பஞ்சு ஸாருக்குத்தான் உதிக்கும்!" என்றார் சாம்பசிவம்.

"அது சரி; சக்கரவர்த்தி இன்று பதினொரு மணிக்கு உங்களுக்கு பேட்டி கொடுக்கப் போகிறார். நீங்க மூணு பேரும் அதற்குள் பாலஸ் ஆபீஸில் ரெடியா இருக்கணும். தேரோட்டம் என்றைக்கு என்று தேதி நிச்சயம் செய்யணும். சக்ரவர்த்தி பெயரில் 'இன்விடேஷன்' போடணும். அவரிடமே உங்க ஐடியாவெல்லாம் சொல்லுங்க..." என்றான் பஞ்சு.

"நான் சக்கரவர்த்தியை ஏற்கெனவே பார்த்தாச்சு!" என்று சொல்லிக்கொண்டே வந்தார் கோபால் ராவ் பெருமை பொங்க.

"என்னது! சக்கரவர்த்தியைப் பார்த்துவிட்டீரா? எப்போது பார்த்தீர்?" என்று கேட்டான் பஞ்சு.

"காலை வேளையில் சக்கரவர்த்தி தோட்டத்தில் உலாவச் செல்வது வழக்கமாம். அரண்மனை சிப்பந்தி ஒருவர் சொன்னார். சக்கரவர்த்தி எந்தப் பக்கம் உலாத்துவார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டு அந்தப் பக்கமாக நடந்தேன். ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த செடி கொடிகளையும் கையோடு எடுத்துச் சென்றேன். சக்கரவர்த்தி என்னைப் பார்த்துவிட்டு அருகில் அழைத்து 'இந்தோஜின்? இந்தியனா?' என்று கேட்டார். 'நான் தேர் விடுகிற பார்ட்டியைச் சேர்ந்தவன்' என்று சொன்னேன். ரொம்ப சந்தோஷப்பட்டார். நான் அவருக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொண்டு வந்த செடிகளைக் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தேன்.

''இதெல்லாம் என்ன கொடி?'' என்று கேட்டார்.

''இண்டியாவிலிருந்து ஸ்பெஷலாகக் கொண்டு வந்திருக்கிறேன். தங்களுக்கு மெரின் பயாலஜி பிடித்த சப்ஜக்ட்னு கேள்விப்பட்டிருக்கிறேன். தங்கள் பர்த் டே ப்ரஸெண்ட்'' என்றேன்.

''சக்ரவர்த்திக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அருகிலிருந்த தம் மனைவியிடம் முத்துமாலை ஒன்றைக் கேட்டு வாங்கி எனக்கு அன்பளிப்பாகத் தந்துவிட்டு 'தொமோ' என்று நன்றி கூறினார்.''

''அடிச்சுது உமக்கு யோகம். சக்கரவர்த்தி பேட்டிக்கு அவங்கவங்க தவம் கிடக்கிறாங்க இங்கே. அவர் பிறந்த நாளன்று அவரை தரிசனம் செய்ய அரண்மனைக்கு வெளியே பெரும் கூட்டம் காத்திருக்கும்'' என்றான் பஞ்சு.

''சக்ரவர்த்தி எனக்கு தரிசனம் கொடுக்கவில்லை. நான்தான் குறுக்கே போய் அவருக்கு தரிசனம் கொடுத்தேன். எக்கச்சக்கமா வழியிலே என்னிடம் மாட்டிக் கொண்டார்'' என்றார் கோபால் ராவ்.

''இன்றைக்கு கோபால் ராவ் நரி முகத்திலே முழிச்சிருக்கணும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இங்கே ஏது நரி? அம்மாஞ்சி முகத்திலேதான் விழிச்சேன்'' என்றார் கோபால் ராவ்.

''பஞ்சு ஸார்! இன்றைக்கு நாங்க மூணு பேரும் மகாராஜாவைப் பார்த்தப்புறம் ஸூப்பர் எக்ஸ்பிரஸிலே க்யோட்டோவுக்குப் போய் வந்து விடுகிறோம். ஜப்பானுக்கு வந்து க்யோட்டோ பார்க்கலேன்னா காசிக்குப் போய் கங்கையில் குளிக்காத மாதிரியாம்'' என்றார் அம்மாஞ்சி.

''க்யோட்டோவுக்கா? அப்புறம் எங்கெல்லாம் போகப் போறீங்க?''

''நாரா, கோபே, ஒஸாகா, ஹகோனே எல்லா இடத்துக்கும்தான்...'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ஹாங்காங் ஏரிக்கு நீங்க இங்கே வந்த பிறகு ஹெலி காப்டர்லே போகலாம். அப்பத்தான் உங்களுக்கு ஒரு ஐடியா கிடைக்கும்'' என்றான் பஞ்சு.

டோக்கியோ சென்டிரல் ஸ்டேஷனுக்குப் போய் ஸூப்பர் எக்ஸ்பிரஸ் இருக்குமிடத்தைத் தேடிக் கண்டு பிடித்து அதில் ஏறி உட்காருவதற்குள் மூன்று சாஸ்திரி களும் திணறிப் போனார்கள்.

''ஒரே பிரமிப்பா யிருக்கு! திக்கு திசையே புரியல்லே. எவ்வளவு பெரிய ஸ்டேஷன்? எத்தனை எண்ட்ரன்ஸ்? எத்தனை ரயில்? எத்தனை பிளாட்பாரம்? எத்தனை லைன்? அடேயப்பா'' என்றார் அம்மாஞ்சி.

ஸூபர் எக்ஸ்பிரஸ் எடுத்த எடுப்பிலேயே அம்பு மாதிரி 'விர்' ரென்று புறப்பட்டது.

''இதற்கு 'புல்லெட்' என்று கூட ஒரு பெயர் உண் டாம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''உம்ம மருமானைப் பார்க்க வேண்டும் போலிருக் கிறது'' என்றார் அம்மாஞ்சி புன்சிரிப்போடு.

''கனபாடிகளே! ரயில் என்ன வேகம் பார்த்தீங் களா?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''கன வேகம்! கனபாடிகளெல்லாம் போகிறோம். இல்லையா?'' என்றார் அம்மாஞ்சி.

''சிலேடையிலே நம்ம அம்மாஞ்சி கிட்டே கி. வா.ஜ., கலைஞரெல்லாம் பிச்சை வாங்கணும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''உம்ம சிண்டு காற்றிலே பிய்ச்சுண்டு போயிடப் போறது!'' என்றார் சாம்பசிவம்.

''ஜப்பான்லே 'ஷிண்டோ' ரிலிஜியன் தானமே?'' என்றார் அம்மாஞ்சி.

''சிண்டு வேறே, 'ஷிண்டோ' வேறே'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இந்த ஊர்லே 'ஸிமோ'ங்கற பயில்வான்கள் கூடச் சிண்டு வைத்துக் கொண்டிருப்பார்களாம். அதனாலே ஷிண்டோ ரிலிஜியனுக்கும் சிண்டுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோன்னு நினைச்சேன்'' என்றார் அம்மாஞ்சி.

''உம்மை யார் அப்படி நினைக்கச் சொன்னது?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''யாரும் சத்தம் போட்டுப் பேசமாட்டேங்கருளே, இந்த ரயில்லே'' என்றார் அம்மாஞ்சி.

''ரயில்லே என்ன! எங்கேயும் அப்படித்தான். இந்த நாடே அமைதியா இருக்கு. மக்களெல்லாம் அடக்கமாயிருக்கா. அதுதான் நாகரிகம்'' என்றார் சாம்பசிவம்.

''பசி இல்லாத நாட்டிலே சத்தம் ஏது? பசி உள்ள நாட்டிலே தான் இரைச்சல் அதிகமாயிருக்கும். பசி உள்ள குழந்தை அழறது. பால் குடிச்ச குழந்தை மௌனமாச் சிரிக்கிறது. ஒரு நாடும் அந்த மாதிரிதான்...'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அது மட்டுமில்லே. திருட்டு புரட்டு எதுவும் கிடையாதாம் இந்த நாட்டிலே...'' என்றார் சாம்பசிவம்.

''புரட்டுன்னா?'' அம்மாஞ்சி கேட்டார்.

''நம் ஊர் டாக்ஸியிலே மீட்டரைப் புரட்டுருங்களே, அந்த வழக்கம் இங்கே கிடையாது. ஒரு லட்ச ரூபாயை டாக்ஸியிலே மறந்து வைத்தாலும் யாரும் தொடமாட்டாங்க. தொலைச்சவங்க அட்ரஸை எப்படியாவது கண்டு பிடிச்சு பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுவாங்க...'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

அம்மாஞ்சி வாத்தியார் முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டார்.

"சத்தியம் தவருத ஒரு நாட்டைக் கண்டு சந்தோஷப் படும் ஓய்! வருத்தப்படுகிறீரே!" என்ருர் சாம்பசிவம்.

"என்னிடம் லட்ச ரூபாய் இல்லையேன்னு வருத்தப்படறேன். இருந்தால் இந்த ரயிலில் மறந்து வைத்து விட்டுப் போய்ப் பார்க்கலாமே!" என்ருர் அம்மாஞ்சி.

"இந்த ரயில் எவ்வளவு சுத்தமாயிருக்கு. ஒவ்வொரு சீட்டின் மீதும் தும்பைப்பூ மாதிரி ஒரு வெள்ளைத் துணி போட்டிருக்கான். டாய்லெட் எப்படி இருக்கு என்று பார்த்துவிட்டு வருகிறேன்" என்று எழுந்து போனுர் சாம்பசிவம்.

போனவர் வெகுநேரம் ஆகியும் திரும்பி வரவில்லை.

ஜப்பான் சாஸ்திரிக்குக் கவலை வந்து விட்டது. "அடிக்கடி தொலைந்து போவதையே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிருரே, இந்த சாம்பசிவ சாஸ்திரி" என்று கடிந்து கொண்டே டாய்லெட் பக்கம் போய்ப் பார்த்தார். கதவு உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. எவ்வளவோ முயன்றும் ஜப்பான் சாஸ்திரியால் அதைத் திறக்க முடியவில்லை.

ஜப்பான் சாஸ்திரி கூச்சலிடத் தொடங்கினுர். அந்த ரயிலில் பயணம் செய்த அத்தனை ஜப்பானியர்களும் அதிர்ச்சியடைந்து டாய்லெட் பக்கம் ஓடினுர்கள். இதற்குள் அந்த ரயில் க்யோட்டோ ஸ்டேஷனில் போய் நின்றது. உடனே ஸ்டேஷனிலிருந்த ரயில்வே சிப்பந்திகள் ஓடி வந்து அந்தக் கதவைத் திறந்து விட்டார்கள். டாய்லெட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த சாஸ்திரி இஞ்சி தின்ற மாதிரி விழித்துக் கொண்டிருந்தார்.

"என்ன ஆயிற்று உமக்கு?..." என்று கேட்டார் அம்மாஞ்சி.

"கதவைச் சாத்தினேன். மூடிக்கொண்டு விட்டது. அப்புறம் எப்படித் திறந்தாலும் திறக்க முடியவில்லை.

தாழ்ப்பாளில் ஏதோ கோளாறு போலிருக்கு. ஜாமாகி விட்டிருக்கிறது'' என்றார் சாம்பசிவம்.

''ஆபத்து சமயத்திலே அடிப்பதற்கென உள்ளே அலாரம் மணி இருக்கிறதே, அதை அடித்திருக்கலாமே'' என்றார் ஒரு ஜப்பானியர்.

''அது எனக்குத் தெரியவில்லை'' என்றார் சாம்பசிவம்.

''பரவாயில்லை; இப்படி ஒரு அசௌகரியத்தை ஏற்படுத்தியதற்காக வருந்துகிறோம்'' என்று கூறி மன்னிப்பு கேட்டார் ஒரு ரயில்வே அதிகாரி.

''என் அறியாமைக்கு நீங்கள் வருத்தப்படுவானேன்?'' என்றார் சாம்பசிவம்.

''இரண்டு மணி நேரம் டாய்லெட்டிலேயே பயணம் செய்திருக்கிறீர்கள். அது அசௌகரியம்தானே? ஆகையால் நாங்கள் உங்களிடம் சார்ஜ் வாங்க மாட்டோம். தங்கள் டிக்கட் பணத்தை வாபஸ் தந்து விடுகிறோம்'' என்று கூறி ஆயிரத்து முன்னூறு யென்களை சாஸ்திரி களிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

''அடாடா! என்ன தேசம், என்ன தேசம்! நம் ஊரில் இம்மாதிரி நடந்திருந்தால் உடனே 'டிக்கெட்லெஸ் ட்ராவல்'னு சந்தேகப்பட்டு கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளியிருப்பான்'' என்றார் சாம்பசிவம்.

''இன்று நீங்க நரிமுகத்தில் விழித்திருக்க வேண்டும். கோபால் ராவுக்கு முத்துமாலை. உமக்கு டிக்கட் பணம் வாபஸ்'' என்றார் அம்மாஞ்சி.

''நானும் உம்முடைய முகத்தில் தான் விழித்தேன்!'' என்றார் சாம்பசிவம்.

# 6

கோபால் ராவையும் பஞ்சுவையும் டீக்கு அழைத்திருந்தார் சக்கரவர்த்தி ஹிரோஹிடோ. கோபால் ராவைப் பார்த்ததும் புன்சிரிப்போடு, ''காலையில் கொடுத்த ப்ளான்ட்ஸ் எல்லாம் ரொம்ப யூஸ்ஃபுல். தோமொ, தோமொ'' என்றார் சக்கரவர்த்தி.

கோபால் ராவுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

திருவாரூர் தேர்ப் படத்தையும் கின்ஸாவில் தேர் ஓடப் போகிற வீதிகளின் வரைபடத்தையும் சக்கரவர்த்தியிடம் எடுத்துக் காட்டினான் பஞ்சு. அந்தத் தேரைக் கண்டுவிட்டு, ''பியூத்திபுல்! ஒண்டர்புல்'' என்று வியந்து பாராட்டினர் சக்கரவர்த்தியும் மகாராணியும்.

''பாலெஸிலிருந்து தேரைக் கின்ஸாவுக்கு எப்படிக் கொண்டு போவது?'' என்றொரு பிரச்னையைக் கிளப்பினான் பஞ்சு.

''ஏன், அதிலே என்ன கஷ்டம்?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''குறுக்கே நிறைய ரயில்வே பிரிட்ஜுகள் இருக்கின்றன. பிரிட்ஜுகளுக்கு அடியில் தேரைக் கொண்டு போக முடியாமல் மேலே தடுக்கும் போலிருக்கிறதே'' என்றான் பஞ்சு.

''டோண்ட் ஒர்ரி. யூ கன்ஸல்ட் அவர் என்ஜினீர்ஸ். தே வில் ஸால்வ் தி ப்ராப்ளம் இன் நோ டைம்'' என்றார் சக்கரவர்த்தி.

''தேரை கீழ்பாதி மேல் பாதி என்று இரண்டு பாதி பாகப் பிரித்து எடுத்துக்கொண்டு போய்விட்டால் போகிறது'' என்று யோசனை கூறினார் கோபால் ராவ்.

''எதற்கும் வடபாதி வந்து விடட்டும். அப்புறம்தான் எல்லாம் சரியாகும்'' என்றான் பஞ்சு.

''சாஸ்திரிகள் மூன்று பேரும் எங்கே?'' என்று கேட்டார் மகாராணி.

''தெப்பத்துக்கு இடம் பார்க்கப் போயிருக்காங்க'' என்றார் கோபால் ராவ்.

''ஐ லைக் ஷிம்பாஷி சாஸ்திரி! ஹிஸ் நேம் ஸௌண்ட்ஸ் லைக் ஜாப்னிஸ்'' என்றார் மகாராணி.

''தேரோட்டத்துக்கு டேட் பிக்ஸ் பண்ணியாச்சா? இண்டியாவிலிருந்து ஆளெல்லாம் எப்போது வருகிறார்கள்?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''அடுத்த மாதம் ஏதாவது ஒரு தேதி வைத்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறோம். சக்கரவர்த்தியின் சௌகரியம் தெரிந்த பிறகுதான் பிரைம் மினிஸ்டரைக் கன்ஸல்ட் செய்யணும்'' என்றான் பஞ்சு.

''வெரிகுத்! டயட் பில்டிங்லே உங்களுக்காக ஒரு ஆபீஸ் போடச் சொல்லியிருக்கேன். என்னுடைய பர்ஸனல் ஸெக்ரடரி யோஷினோரியையும் இனி உங்களோடு கூடவே இருக்கச் சொல்லியிருக்கிறேன். அவர் உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளும் செய்வார். அவ்வளவுதான்; இனி வேலையெல்லாம் க்விக்கா நடக்கணும்...'' என்றார் சக்கரவர்த்தி.

''நீங்க எதுக்கும் கவலைப்படாதீர்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நாலு ஸ்டேஜ் மட்டும் இருந்துட்டால் போதும். வேலை மடமடன்னு தீர்ந்துவிடும்'' என்றான் பஞ்சு.

"ஸ்டெனோதானே! அதென்ன பிரமாதம்? யோஷிஹோரியிடம் சொன்னால் இண்டியன் எம்பஸியிலிருந்து எத்தனை ஸ்டெனோ வேண்டுமானாலும் வரச் சொல்லுவார். இண்டியன் அம்பாஸிடர் கூட இந்தத் தேரோட்டத்திலே ரொம்ப இண்ட்ரெஸ்டட்" என்றார் சக்கரவர்த்தி.

"சரி, இப்போதே நானும் யோஷிஹோரியும் அம்பாஸிடரைப் போய்ப் பார்த்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிடுகிறோம்..." என்றான் பஞ்சு.

"என்ன செய்வீங்களோ, எப்படி முடிப்பீங்களோ எனக்குத் தெரியாது. முதலில் இண்டியாவிலிருந்து என்னென்ன வர வேண்டும், யார் யார் வர வேண்டும் என்பதற்கெல்லாம் கம்ப்ளீட் லிஸ்ட் தயார் செஞ்சுக்குங்க. ஒரு சின்ன ஐடம் கூட மறக்கக்கூடாது. ஐ ஆம் ஈகர் டு நோ ஆல் தி டீடெய்ல்ஸ் தென் அண்ட் தேர். நாளையிலிருந்து நீங்க என்னோடுதான் டீ சாப்பிடணும்" என்றார் சக்கரவர்த்தி.

மறு நாளே டயட் பில்டிங்கில் 'தெப்பேம-76' அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கி விட்டது. அன்று மாலை கோபால் ராவ் 'பிரஸ் மீட்' ஒன்றுக்கு ஏற்பாடு செய்து விட்டார். பஞ்சு அஷ்டாவதானம் செய்துகொண்டிருந்தான். லெட்டர் டிக்டேஷன், ஓவர்ஸீஸ் கால், யோஷிஹோரியோடு டிஸ்கஷன், அம்பாஸிடரோடு மீட்டிங், இப்படி ஓயாத வேலை அவனுக்கு. இவ்வளவுக்கும் இடையில் மெட்ராஸுக்குக் கால் போட்டு பாப்ஜியோடு பேசி தமிழ் நாட்டிலிருந்து அனுப்ப வேண்டியவற்றுக்கு ஒரு 'லிஸ்ட்'டும் சொல்லிவிட்டான்

தினப் பத்திரிகை நிருபர்களுக்கு கோபால் ராவ் கொடுத்த செய்தி அடுத்த சில மணி நேரத்துக்குள் ஜப்பான் டைம்ஸ், அஸாகி ஈவினிங் நியூஸ், மைனிச்சி டெய்லி நியூஸ் போன்ற முக்கியப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகி விட்டது.

# SOUTH INDIAN TEMPLE CAR FESTIVAL IN TOKYO

Emperor Showing keen interest

**Five-member delegation has already arrived**

~~Ginza~~, the magic street of a million lights venue for Therottam

**Millions of tourists are expected**

---

"கோபால் ராவ்! முதலில் விழாவுக்குப் பொருத்தமாக ஒரு நல்ல சின்னம் தயாரிக்க வேண்டுமே!" என்றான் பஞ்சு.

"இந்த நாட்டிலே உள்ள முக்கிய ஆர்ட்டிஸ்ட்டுகளையெல்லாம் அழைத்து ஒரு டிசைன் போட்டி நடத்தி விடலாமா?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"அதற்கெல்லாம் டைம் இல்லை. 'எக்ஸ்போஸெவெண்டி'க்குச் சின்னம் தயாரித்துத் தந்த ஆர்ட்டிஸ்ட் மட்ஸுஷிடாவையே கூப்பிட்டு வரைந்து கொடுக்கச் சொல்வோம்" என்றான் பஞ்சு.

"அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறிய யோஷினாரி உடனே டெலிபோனை எடுத்து அந்த ஆர்ட்டிஸ்ட்டிடம் பேசினார்.

"க்யோட்டோ ரொம்பப் புராதனமான நகரம். யுத்தத்தால் பாதிக்கப்படாத ஊர்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"கிராப் தலைகளுக்கு நடுவே நம்மைப் போன்ற வைதிகர்கள் மட்டும் குடுமியோடு வாழ்கிறோம் இல்லையா? அந்த மாதிரி!" என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"பஸ்ட்கிளாஸ் உதாரணம்" என்றார் அம்மாஞ்சி.

"சரித்திர கால அரண்மனைகள், புராதனக் கோயில்கள், புத்தர் சிலைகள், மலைகள், நீர்த்தேக்கங்கள் மூங்கில் புதர்கள் அவ்வளவும் அப்படி அப்படியே இருக்கின்றன" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"நீர் சரித்திர காலத்தில் இங்கே வந்து பார்த்திருக்கிறீரா?" என்று குத்தலாகக் கேட்டார் அம்மாஞ்சி.

ஜப்பான் சாஸ்திரி சளைக்கவில்லை.

"ஆமாம்; அப்போது இவ்வளவு வசதி கிடையாது. ஸூப்பர் எக்ஸ்பிரஸ் இல்லை. அதனால் குதிரை மீது ஏறி வந்தேன்" என்றார் பதிலுக்கு.

"அதோ அந்த மூங்கில் புதர்கூட அப்போது இருந்ததா?" என்று கேட்டார் அம்மாஞ்சி மேலும்.

"ஆமாம். நான் அதிலிருந்து ஒரு மூங்கிலை வெட்டி எடுத்துக் கொண்டு போய் வீட்டிலே துணி உலர்த்தும் கொடியாகக் கட்டி வைத்திருக்கிறேன். இன்னும் கூட அந்த மூங்கில் இருக்கிறது" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"சுத்த வெட்டிப் பேச்சு. நாம் எங்கே தங்கப் போகிறோம்? அதை யோசித்தீர்களா?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"க்யோட்டோ டவர் ஓட்டலில்தான் தங்கணும். அதுதான் இதோ ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே இருக்கிறது" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

மூவரும் அந்த ஓட்டலில் போய்த் தங்கினார்கள்.

ஜப்பான் சாஸ்திரி ஓட்டல் பணிப்பெண் ஒருத்தியை அழைத்து, அவளிடம் எப்படியோ பேசி ஒரு கெட்டில் நிறைய கொதிக்கும் வெந்நீர் கேட்டு வாங்கி வந்து விட்டார். அம்மாஞ்சி அதில் தயாரித்த நெஸ் காப்பியை மூவரும் அருந்தி சிரம பரிகாரம் செய்து கொண்டனர்.

''என்ன இருந்தாலும் நம்ம அம்மாஞ்சி தயாரிக்கிற காப்பிக்கு உள்ள மணமே அலாதி!'' என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

''அம்மாஞ்சி போடுகிற காப்பி அமிஞ்சியாப் போகுமா?'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இன்று ஏகாதசியாச்சே, ராத்திரி என்ன பலகாரம்?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''நான் அவல் கொண்டு வந்திருக்கிறேன். அதைத் தயிரில் ஊறப்போட்டுச் சாப்பிட்டால் தேவாமிருதமாயிருக்கும்'' என்றார் அம்மாஞ்சி.

''நீர் ஏற்கனவே தேவாமிருதம் ருசி பார்த்திருக்கிறீரா?'' என்று அம்மாஞ்சியைச் சமயம் பார்த்து மடக்கினார் ஜப்பான் சாஸ்திரி.

''ஹரிஹரி! நீர் சரித்திர காலத்தில் ஜப்பானுக்கு வந்த மாதிரி தான் நான் தேவாமிருதம் ருசி பார்த்ததும்!'' என்று சொல்லிச் சிரித்தார் அம்மாஞ்சி.

''அப்படி வாங்க வழிக்கு!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''நாளைக் காலையில் நாராவுக்குப் போய் புத்தர் கோயிலைப் பார்த்துவிட்டு வந்து விடலாம். உலகத்திலேயே மிகப் பெரிய புத்தர் சிலை அங்குதான் இருக்கிறதாம்'' என்றார் சாம்பசிவம்.

''இங்கிருந்து நாராவுக்கு எப்படிப் போவது?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''ரயில், டூரிஸ்ட் பஸ், டாக்ஸி எதில் வேண்டுமானாலும் போகலாம். முப்பதே நிமிஷம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இன்று சாயந்திரம் திரும்பி வந்ததும் டீ ஸெரிமனியும் பார்த்துவிட வேண்டியதுதான். க்யோட்டோ தான் டீ ஸெரிமனிக்கு ஏற்ற இடமாம். அதைப் பார்க்காமல் தள்ளிக் கொண்டே போகிறது'' என்றார் சாம்பசிவம்.

''தள்ளிப் போனால் போகட்டுமே! இது கூட சிராத்தமா என்ன, திதி தவறாமல் செய்வதற்கு?'' என்றார் அம்மாஞ்சி.

''வந்த ஜோலி எதுவும் ஆகவில்லை; ஊர் சுற்றிக் கொண்டே இருக்கிறோம். தெப்பம் விடுவதற்கு ஏற்ற இடம் எது என்று தீர்மானம் செய்வதற்கே இத்தனை நாளா?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''பஞ்சுவும் கோபால்ராவும் இருக்கச்சே நமக்கென்ன கவலை?'' என்றார் அம்மாஞ்சி.

''நாரா போவதற்கு டூரிஸ்ட் பஸ் இங்கே வாசலிலேயே வந்து நிற்குமாம். காலையில் ஏழு மணிக்கு நாம் ரெடியாயிருக்க வேண்டும். க்ரே லைன் பஸ்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ரொம்ப நல்லதாப் போச்சு. இயற்கைக் காட்சிகளையெல்லாம் நான் போட்டோ எடுக்கப் போகிறேன். பஸ்ஸில் எனக்கு ஓரம் ஸீட் வேண்டும்'' என்றார் அம்மாஞ்சி.

''மலைகளைப் படம் எடுங்கள். அவைதான் அசங்காமல் அப்படியே நிற்கும்'' என்றார் சாம்பசிவம்.

''பஸ் அசங்குமே'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''சரி வாங்க, மேலே போய்ப் பார்த்துவிட்டு வரலாம்'' என்று அழைத்தார் அம்மாஞ்சி.

மூவரும் எட்டாவது மாடிக்குப்போய் 'ஹிகாஷ்யாமா' என்ற க்ரில் ரூமுக்குள் நுழைந்து கண்ணாடிச் சுவர் ஓரமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

தற்செயலாய்க் கீழே வீதியை எட்டிப் பார்த்த ஜப்பான் சாஸ்திரி, "அதோ என் மருமான் ரமேஷ், ரமேஷ்!" என்று கத்திக் கொண்டு எழுந்து நின்றார்.

"ஏன் இப்படிக் காட்டுத்தனமா கத்தறீங்க? இது இண்டியா இல்லே. மெதுவாகப் பேசும். இங்கே யாராவது உரக்கப் பேசுகிறார்களா, பார்த்தீரா?" என்று அடக்கினார் அம்மாஞ்சி.

"அவர்களுக்கு இப்படி திடீரென்று மருமான் வரவில்லையே!" என்று கூறிய ஜப்பான் சாஸ்திரி ரமேஷைப் பார்க்கக் கீழே இறங்கி ஓடினார்.

ஜப்பான் சாஸ்திரியைக் கண்டதும் "நீங்க எப்ப வந்தீங்க மாமா, ஜப்பானுக்கு?" என்று வியப்பு மலரக் கேட்டான் ரமேஷ்.

"நீ டோக்கியோவிலிருந்து எப்போது வந்தாய்? அதைச் சொல்லு முதலில்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"நண்பர்களோடு எக்ஸ்கர்ஷன் வந்திருக்கிறேன் மாமா நாலாவது மாடியில் தங்கியிருக்கிறோம். இப்போது தான் வந்தோம்" என்றான் ரமேஷ்.

"ரொம்ப விஷயங்கள் பேச வேண்டும் உன்னோடு. வா, மேலே போய் உட்கார்ந்து பேசலாம்" என்று அவனை க்ரில் ரூமுக்கு அழைத்துச் சென்றார் ஜப்பான் சாஸ்திரி.

"நீங்க வந்திருக்கிற விஷயம் எனக்குத் தெரியும். தெப்போ-ஸெவெண்ட்டிஸிக்ஸ் தானே? என்னைக்கூட தெப்போ-76 சம்பந்தமா டயட் ஆபீஸுக்கு 'போஸ்ட்' பண்ணியிருக்கிறார்கள். அடுத்த வாரத்திலிருந்து எனக்கு அங்குதான் வேலை" என்றான் ரமேஷ்!

“அப்படியா, பழம் நழுவிப் பாலில் விழுந்தது” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“பால் என்றதும் ஞாபகம் வருகிறது. எனக்குக் கொஞ்சம் மில்க்தும் ப்ரூட்ஸும் வேணும். இன்று ஏகாதசி” என்றார் சாம்பசிவம்.

எல்லோருக்கும் ஃப்ரூட் ஸாலட் ஆர்டர் கொடுத்தான் ரமேஷ்.

“இவன்தான் உங்க மருமானா? ரொம்ப லட்சணமா துருதுருப்பா இருக்கானே! எந்தப் பெண் கொடுத்து வெச்சிருக்காளோ?” என்றார் அம்மாஞ்சி.

“பாஷை தெரியாமல் ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். தெய்வமே உன்னை இங்கே கொண்டுவிட்டது” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“சரி, நாளைக்கு என்ன புரோக்ராம்?” என்று கேட்டான் ரமேஷ்.

“நாரா போகப் போகிறோம்” என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“ரொம்ப நல்லதாப் போச்சு. நானும் உங்களோடு வந்து விடுகிறேன்” என்றான் ரமேஷ்.

மறுநாள் பொழுது விடிவதற்குள்ளாகவே பயணத்துக்குத் தயாராகிவிட்டார்கள் சாஸ்திரிகள் மூவரும. டூரிஸ்ட் பஸ் ஏழு மணிக்குள்ளாகவே நாரா போய்ச் சேர்ந்து விட்டது. ‘டீர் பார்க்’ அருகில் போய் நின்ற பஸ்ஸைக் கண்டதும் அங்கிருந்த மான்கள் கூட்டம் கூட்டமாக வேலி ஓரத்தில் வந்து நின்று கொண்டன. டூரிஸ்ட்கள் சிலர் அவற்றைப் படம் எடுத்துக் கொண்டார்கள். சிலர் அவற்றுக்கு பிஸ்கட் மாதிரி குச்சி குச்சியாக இருந்த தின்பண்டம் ஒன்றை விலைக்கு வாங்கிப் போட்டார்கள்.

“இந்த மான்களுக்கு இந்த பிஸ்கெட்டுகளைத் தினம் தினம் சாப்பிட்டு அலுத்துப் போயிருக்காதோ?” என்றார் அம்மாஞ்சி.

"நமக்கு உளுந்து வடை அலுத்துப் போச்சா?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

அம்மாஞ்சி மான்களைத் தடவிக் கொடுத்தார்.

"இந்த மான்கள் பயப்படவே இல்லையே. நம் ஊர் ஜூவில் ஆளைக் கண்டால் பயந்து ஓடுமே" என்றார் சாம்பசிவம். அம்மாஞ்சி வாத்தியாரையும் மானையும் சேர்த்து ஒரு போட்டோ எடுத்துக் கொண்டான் ரமேஷ்.

"அம்மாஞ்சியும் மானும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்துக்கு 'மானும் கரடியும்' என்று தலைப்புக் கொடுக்கலாம்" என்று கேலி செய்தார் சாம்பசிவம்.

"நல்ல மான்தோல் கிடைத்தால் கீழே ஆசனமாகப் போட்டுக்கொண்டு ஜபம் செய்ய உதவும்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"மானை யாரும் தொடக்கூடாது. இங்கே மானைத் தொட்டால் நம்ம தோலை உரித்து விடுவார்கள்" என்றான் ரமேஷ்.

"மான், யானை இதெல்லாம் செத்தாலும் பயன்படுகின்றன. மனுஷன் செத்தால் எதற்கும் உபயோகமில்லை" என்றார் சாம்பசிவம்.

"மெடிகல் காலேஜில் எலும்புக் கூட்டை வைத்துப் பாடம் சொல்லித் தர உபயோகப்படுமே" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

அடுத்தாற்போல், புத்தர் கோயிலுக்குப் போய்ப் பார்த்தார்கள். பெரிய பெரிய வைரம் பாய்ந்த மரங்களைக் கொண்டு விதானங்களும் கூரைகளும் அமைத்துக் கட்டப்பட்டிருந்தது அந்தக் கோயில். சாம்பசிவம் அவற்றை அண்ணாந்து பார்த்தபடி "ஆகா! ஜப்பான்காரன் மூளையே மூளை!" என்று வியந்து கொண்டிருந்தார்.

"வாரும், வாரும், நேரமாகிறது; அப்படியே ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டே திடீரென்று காணாமல் போய்

விடுவீர். இனிமேல் தேர் மாதிரி உமக்கும் ஒரு வடத்தைக் கட்டி இழுத்துப் போக வேண்டியதுதான்'' என்றார் அம்மாஞ்சி.

''தேர் செய்வதற்கு வேண்டிய மரம் ஜப்பானிலேயே கிடைக்கும் போலிருக்கிறதே'' என்றார் சாம்பசிவம்.

''தெப்பம் விடுவதற்கு மூங்கிலுக்குப் பஞ்சமில்லை'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

மாலை மணி மூன்றுக்குள்ளாகவே எல்லோரும் க்யோட்டாவுக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

''ரமேஷ்! இன்று மாலையே டீ ஸெரிமனி பார்க்கணும்!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இங்கே யஸாகா ஹால் என்று ஒரு இடம் உள்ளது. ஜப்பான் நாட்டுக் கலாசாரங்கள் அவ்வளவையும் அங்கே பார்த்து விடலாம். டீ ஸெரிமனி கூட அங்கே உண்டு. வாருங்கள், அங்கே உங்களை அழைத்துப் போகிறேன். நான் உள்ளே வரமாட்டேன். ஏற்கனவே நான் டீ ஸெரிமனி பலமுறை பார்த்திருக்கிறேன். எனக்கு அது ரொம்ப 'போர்' அடிக்கும்'' என்றான் ரமேஷ்.

மூவருக்கும் 'ஜப்பானிய' உடைகள் வாங்கிக் கொடுத்து டீ ஸெரிமனி நடக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றான் ரமேஷ். மூவரும் செருப்பைக் கழற்றி வாசலிலேயே விட்டு விட்டு உள்ளே போய் உட்கார்ந்தார்கள். இவர்களைக் கண்டதும் அங்குள்ள ஜப்பானியப் பெண்கள் இடுப்போடு உடலை வளைத்து வணக்கம் தெரிவித்தார்கள். அங்கே மேஜை நாற்காலிகள் இல்லை. தரையில் பாய் விரிக்கப்பட்டிருந்தது. மூவரும் ஜப்பானிய முறைப்படி மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டார்கள். அப்படி உட்காருவது அவர்களுக்குக் கஷ்டமாயில்லை. மூங்கில் குழாய்களில் ஒருத்தி எதையோ ஊற்றிக் கொண்டிருந்தாள். இன்னொருத்தி கலையழகு மிக்க பளபளக்கும் பீங்கான் கோப்பைகளை நளினமாகத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

# 7

டீ ஸெரிமனி முடிவதற்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆயிற்று.

"போர், சரியான போர்! இது நிஜமாகவே சிராத்தம் தான். ரொம்பப் பொறுமை வேண்டும் இதற்கு" என்று அலுத்துக் கொண்டார் அம்மாஞ்சி.

"வேகத்துக்கும் சுறுசுறுப்புக்கும் பெயர் பெற்ற ஜப்பான்காரர்கள் இந்த டீ ஸெரிமனி விஷயத்தில் இப்படி ஆமையாக இருக்க வேண்டாம்" என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"போர் அடிப்பதுதான் இந்த டீ ஸெரிமனியின் தனிச் சிறப்பு. சாவகாசமாக உட்கார்ந்து அவசரத்தை யெல்லாம் மறந்து அமைதியாக 'தியானம்' செய்வது போன்ற ஒரு கலை இது" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பச்சையா ஒரு டீ பவுடரை எடுத்து வெந்நீரில் போட்டுக் கலக்கிச் சாப்பிடுவதற்கு இத்தனை நிதானமா? டீயாவது நன்றாயிருக்கிறதா என்றால் அதுவுமில்லை" என்றார் அம்மாஞ்சி.

"அந்த டீக் கோப்பைகளை எத்தனை நேரம்தான் அழகு பார்ப்பது? இந்தக் கையிலிருந்து அந்தக் கைக்கும் அந்தக் கையிலிருந்து இந்தக் கைக்கும் எத்தனை தடவை மாற்று வது? இப்படி ஒரு கலையா? மடமடன்னு குடிக்கக் கூடா தாம்! உரக்க பேசக் கூடாதாம்! கொஞ்சம் கொஞ்சமா

சாப்பிடணுமாம். ரகசியக் குரலில் பேசணுமாம். நல்ல தண்டனை இது'' என்றார் சாம்பசிவம்.

''மொத்தத்தில் அந்த டீ வாசனையே எனக்குப் பிடிக்கல்லே...'' என்றார் அம்மாஞ்சி.

''கற்பூரத்தின் வாசனை நமக்குத் தெரியும். வெள்ளி மூக்குக் குதிரைக்குத் தெரியுமோ? அந்த மாதிரிதான் இதுவும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ஜப்பானைப் பழித்தால் உமக்கு ஏன் ரோஷம் பொத்துக் கொள்கிறது?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''வாங்க, ரூமுக்குப் போவோம். அங்கே பஸ்ட் கிளாஸா எல்லோருக்கும் ஒரு நெஸ் காப்பி தயார் பண்ணிக்கொடுக்கிறேன். அதைச் சாப்பிட்டால்தான் வயிற்றெரிச்சல் தீரும்'' என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

''ரமேஷைக் காணோமே! அவன் எங்கே போயிட்டான்?'' என்று சுற்றும் முற்றும் தேடினார் ஜப்பான் சாஸ்திரி.

''அதோ, அந்த மரத்தடியில் யாரோ ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டு நிற்கிறானே'' என்றார் அம்மாஞ்சி.

இவர்களைக் கண்டதும் ரமேஷ் விரைந்து வந்து, ''என்ன மாமா! ஸெரிமனி முடிஞ்சுட்டுதா? புறப்படலாமா?'' என்று கேட்டான்.

''யாருடா அந்தப் பெண்?'' என்று அர்த்தபுஷ்டியோடு கண் சிமிட்டி விட்டு ஒரு கேள்வியைப் போட்டார் அம்மாஞ்சி.

''மிஸ் இகிடான்னு பேரு. எங்க ஆபீஸ்லே ஸ்டெனோவா இருக்கா...எங்களோடு எக்ஸ்கர்ஷன் வந்திருக்கா'' என்றான் ரமேஷ்.

''இகிடாவா...இகிடீயா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

"இப்பத்தான் புரியறது நீ உள்ளே வராத ரகசியம்!" என்று அம்மாஞ்சி சிரித்தபடி கூறினர்.

"ரொம்ப அழகாயிருக்காளே" என்ருர் சாம்பசிவம்.

"கொள்ளை அழகு! ரமேஷுக்கு ஏற்ற ஜோடிதான்" என்ருர் அம்மாஞ்சி.

"ஏண்டா அப்படி ஏதாவது அபிப்பிராயம் இருக்கா என்ன?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"அதெல்லாம் இல்லே மாமா. ஃப்ரீயாப் பழகுவோம்... அவ்வளவுதான்" என்ருன் ரமேஷ்.

"முதல்லே ஃப்ரீயாப் பழகுவா, அப்புறம் 'லவ்' பண்ணுவா, கடைசியில் கலியாணத்தில் முடியும்" என்ருர் சாம்பசிவ சாஸ்திரி.

"ததாஸ்து" என்ருர் அம்மாஞ்சி.

சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த மிஸ் இகிடாவைப் போய் அழைத்து வந்து சாஸ்திரிகளுக்கு அவளை அறிமுகப்படுத்தினன் ரமேஷ்.

அந்தப் பெண், "யுரோஷாய் மாஸே" என்று கூறி இடுப்பை வளைத்து அவர்கள் மூவரையும் வணங்கி வரவேற்ருள்.

"உங்களுக் கெல்லாம் வெல்கம் சொல்கிருர் மாமா!" என்று மொழி பெயர்த்தான் ரமேஷ்.

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்னு சொல்லுடா" என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

மிஸ் இகிடா சிரித்துக்கொண்டே ஜப்பானிய மொழியில் ரமேஷிடம் ஏதோ கூறினுள்.

"என்னடா! என்ன சொல்கிருள் உன் கர்ல் பிரண்ட்?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"நீங்க கையிலே வைத்துக் கொண்டிருக்கிற விசிறி ரொம்ப அழகாயிருக்காம்" என்ருன் ரமேஷ்.

''இந்தியாவுக்கு வரச் சொல்லு. வேண்டிய விசிறி தரேன். ஜப்பான் விசிறியின் அழகு உலகப் புகழ் பெற்றது. இவளுக்கு நம் ஊர் பனை ஓலை விசிறி பிடிச்சிருக்கு. இக் கரைக்கு அக்கரை பச்சை'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ரமேஷ், உன் கலியாணத்தில் பரதேசிக் கோலம் புறப்படுகிறபோது ஒரு விசிறி கொடுப்பார்கள். அதை இவளிடம் கொடுத்து விடு'' என்று வேடிக்கையாகப் பேசினார் அம்மாஞ்சி.

ரமேஷ் தன் கைக் கடியாரத்தைப் பார்த்தான். மணி நாலாகி யிருந்தது.

''புறப்படலாமா? நேரமாகிறது!'' என்று கூறிய ரமேஷ் இகிடாவிடம் விடை பெற்றுக் கொண்டான். ஒரு டாக்ஸியைக் கூப்பிட்டு சாஸ்திரிகளோடு ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தான்.

அங்கே அம்மாஞ்சி வாத்தியார் தயாரித்துக் கொடுத்த காப்பியைச் சாப்பிட்டு விட்டு நால்வரும் ஸூப்பர் எக்ஸ் பிரஸைப் பிடித்து டோக்கியோவுக்குப் புறப்பட்டார்கள்.

''அடாடா! ரயில் என்றால் இதல்லவா ரயில்? தனித் தனி ஸீட். ஒவ்வொரு ஸீட் மீதும் தும்பைப்பூ மாதிரி ஒரு வெள்ளைத் துணி!'' என்று வியந்தார் அம்மாஞ்சி.

''இவ்வளவு துல்லியமா ஸீட் மீது துணி போட்டு வைத்தால் நம் ஊரில் அழுக்காக்காமல் விட்டு வைப்பார் களா?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''முதலில் துணியையே விட்டு வைப்பார்களா? அதைச் சொல்லுங்க'' என்றார் அம்மாஞ்சி.

''இங்கிருந்து டோக்கியோ போகிற வரைக்கும் லைனுக்குக் குறுக்கே ஒரு தட்டுத் தடங்கல் கிடையாதாம். வழியில் லெவல் கிராஸிங், ஆடு, மாடு எதுவும் இருக் காதாம். ரயில் ஓட்டத்தை எலெக்ட்ரானிக் ஸிஸ்டம்தான் மாரமே கண்ட்ரோல் பண்றதாம். லைன் மீது ஒரு

மட்டையோ விழுந்து கிடந்தால் ரயில் ஆட்டமாடிக்கா நின்று விடுமாம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இப்படிப்பட்ட ஒரு தேசத்துலே வந்து நாம் தேர் ஓட்டப் போகிறோம் என்பதை நினைச்சா வேடிக்கையா யிருக்கு!'' என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

''நாம்கூடத் தேரை ரயில் மாதிரி எலெக்ட்ரானிக் ஸிஸ்டத்திலே ஓட்டிவிடலாம். அது ஒரு பிரமாதமா என்ன? ஆனால் அப்படிச் செய்யக் கூடாதுங்கறதுதானே இதுலே முக்கியம். நம்மூர்லே எப்படித் தேர் ஓட்டறமோ அப்படியே இங்கே ஓட்டிக்காட்டணும். ஜப்பான்காராளுக்கு டீ ஸெரிமனி எப்படியோ அப்படி நமக்குத் தேரோட்டம்!'' என்று தத்துவ விளக்கம் தந்தார் சாம்பசிவ சாஸ்திரி.

''சாஸ்திரிகளே, ஹெலிகாப்டர் ரெடியா இருக்காம். நாம் அஞ்சு பேரும் ராத்திரியே அடாமிக்குப் போயிட லாமா?'' என்று கேட்டான் பஞ்சு.

''அடாமின்னா அது என்ன?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''ஹகோனே ஏரிக்குப் போவதற்கு முன்னால் உள்ள ஒரு ஊர். ரொம்ப அழகான இடம். அங்கிருந்து கேபிள் கார் மலைமேல் போகிறது. ராத்திரியே அடாமி போயிட்டா காலையில் மலை மீது ஒரு பாயிண்ட் வரை போய் உதய சூரியனைப் பார்க்கலாம்'' என்றான் பஞ்சு.

''அடாமியிலே எங்கே தங்கறது?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''அங்கே ஓட்டல்கள் நூற்றுக்கணக்கில் இருக்கு. ஏதாவது ஒரு ஓட்டலில் போய்த் தங்கிக் கொள்ளலாம். எந்த ஓட்டலில் தங்கினாலும் அந்த ஓட்டல் ஜன்னல் வழியாக ஃப்யூஜி மலையைப் பார்க்கலாம்'' என்றான் பஞ்சு.

''ஹெலிகாப்டர் எங்கிருந்து புறப்படப் போகிறது?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

"இங்கே அரண்மனைத் தோட்டத்திலிருந்துதான். சக்கரவர்த்தி பயணம் செய்கிற ஹெலிகாப்டராக்கும்!" என்றான் பஞ்சு பெருமையோடு.

"நாமெல்லாம் ஏக் தின்கா சுல்தான்!" என்றார் அம்மாஞ்சி.

"அடாமியிலே ஹாட் ஸ்ப்ரிங்ஸ் நிறைய இருக்குமாமே, அந்த மினரல் வாட்டர்லே ஸ்நானம் செய்யணுமே" என்று தம் ஆசையை வெளியிட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"அதுக்கென்ன பிரமாதம்? ஆயிரக்கணக்கிலே இருக்கு. சுடச் சுட ஸ்பிரிங்லேருந்து பொங்கி வரும் வாட்டரை ஓட்டல் பாத் ரூமுக்குள் கொண்டு வருகிறார்கள். அந்தத் தண்ணீர் உடம்புக்கு ரொம்ப நல்லது. கந்தகம் இருக்கோல்லியோ?" என்றான் பஞ்சு.

இரவு டின்னரை முடித்துக் கொண்டு ஐந்து பேரும் ஹெலிகாப்டரில் ஏறிக் கொண்டார்கள்.

"பஞ்ச பாண்டவர்களுக்குக் கிட்டாத அதிருஷ்டம் நமக்கு அடித்திருக்கிறது. அவர்கள் வனவாசம் போன போது ஹெலிகாப்டர் ஏது?" என்றார் அம்மாஞ்சி.

"அசட்டுப் பிசட்டென்று உளறுதேயும். நாம் இப்போது வனவாசமா போகிறோம்?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"ஒரு விதத்தில் அம்மாஞ்சி சொல்வது சரிதான். ஹகோனே ஏரி, இஸு நேஷனல் பார்க் இதெல்லாம் இருக்கிற இடம் காடு தானே? வன போஜனம் பண்றதுக்கு ஏற்ற இடமாம்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"எப்பவும் சாப்பாட்டு ஞாபகம்தான் உமக்கு!" என்றார் அம்மாஞ்சி.

"ஏரியல் ஸர்வே நடத்துவதற்கு ஹெலிகாப்டர்தான் ஏற்ற வாகனம்" என்றார் சாம்பசிவம்.

''ஏரியல் ஸர்வேயா? ஏரிகள் சர்வேயா?'' என்று சிலேடையாகக் கேட்டார் அம்மாஞ்சி.

''அதுவும் சரிதான். ஹகோனே ஏரி என்றால் ஒரே ஒரு ஏரி இல்லை. தொடர்ந்தாற்போல் ஐந்து ஏரிகள்'' என்றான் பஞ்சு.

''நான் விடியற்காலை நாலு மணிக்கே எழுந்து ஏரியிலே முங்கிக் குளித்து நீச்சல் அடிக்கப் போகிறேன்'' என்றார் சாம்பசிவம்.

''நாங்களும்தான்'' என்றனர் அம்மாஞ்சியும் குள்ள சாஸ்திரியும்.

''காலையில் கேபிள் காரில் போய் உதயசூரியனைப் பார்க்க வேண்டும். நீங்கள் பாட்டுக்கு நீச்சல் அடிக்கப் போயிட்டா எப்படி?'' என்றான் பஞ்சு.

''ஐந்து மணிக்குள்ளாகவே ஸ்நானத்தை முடித்து விடுவோம். எங்களால் டிலே இருக்காது'' என்றார் அம்மாஞ்சி.

ஸ்நானத்துக்குப் பிறகு அம்மாஞ்சி தயாரித்துக் கொடுத்த 'நெஸ்' பானத்தை முடித்துக் கொண்டு ஐவரும் கேபிள் காரில் ஏறிச் சென்றனர். அங்கே சூரியோதயம் பார்ப்பதற்கெனத் தனியாக ஓர் இடம் அமைத்திருந்தார்கள். அந்த இடத்தில் கைகளை ஊன்றிப் பார்ப்பதற்கு வசதியாக கனமான மரக்கட்டை வேலி ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. ஐவரும் அங்கே போய் நின்று கொண்டனர். எங்கே பார்த்தாலும் மலைகளும் மலர்கள் மண்டிய மரங்களும் தெரிந்தன. வசந்தத்தின் இதமான குளிர் காற்றும் காலை வேளையின் சுகமும் மனதுக்கு இனிமை ஊட்டின.

ஐவரும் ஜப்பான் சமுத்திரத்தைப் பார்த்தார்கள். சூரியன் புறப்படும் போது கறுப்பு மேகங்கள் அதை மறைத்து விட்டிருந்தன.

"அழகான சூரியோதயக் காட்சியைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை" என்று வருத்தப்பட்டார் அம்மாஞ்சி.

"உதயசூரியனுக்கு இப்போது நல்ல காலம் இல்லை. கருமேகம் மறைக்கிறது" என்றார் கோபால் ராவ்.

திரும்பி வரும்போது மலைப் பாதைகளெங்கும் செர்ரி மரங்கள் மௌனமாகச் சிரித்துக் கொண்டிருந்தன.

நீர் நிலைகள் ஒரு மோன நிலையில் சலனமின்றிக் காணப்பட்டன.

"டோக்கியோ நகரின் பரபரப்புக்கும் இங்கே நிலவும் அமைதிக்கும் எவ்வளவு வித்தியாசம்!" என்று வியந்தார் அம்மாஞ்சி.

"ப்யூஜி மௌண்டனைப் பார்த்தீரா? எவ்வளவு அழகு!" என்றார் கோபால் ராவ்.

சாம்பசிவ சாஸ்திரி கீழே குனிந்து பார்த்தார்.

"மலையைப் பார்க்கச் சொன்னால் கீழே குனிந்து பார்க்கிறீரே?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"ஏரித் தண்ணீரில் அந்த மலையின் பிரதிபிம்பம் எவ்வளவு அழகாகத் தெரிகிறது பாருங்கள், ஜப்பான் விசிறியைப் பிரித்து வைத்த மாதிரி!" என்றார் சாம்பசிவம்.

"ஜப்பானுக்கு வருகிறவர்களில் பெரும்பாலோர் டோக்கியோ நகரைப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறார்கள். ஜப்பானே அவ்வளவுதான் என்று எண்ணிக் கொள்கிறார்கள். இந்த ஹகோனே ஏரியையும் இங்குள்ள தேசியப் பூங்காவையும் வந்து பார்த்தால்தானே தெரியும்? ஜப்பானின் ஆத்மா இங்கேதான் இருக்கிறது!" என்றான் பஞ்சு.

"அடடா! பௌர்ணமியன்று, வட்ட நிலா வான வீதியில் பவனி வரும்போது, அந்த நிலவின் ஒளி ஏரித்தண்ணீரில் வெள்ளியாகப் பளபளக்கிற போது, இங்கே தெப்பம்

விடணும். அந்தத் தெப்பத்திலே, நாமகிரிப்பேட்டை, ஏ. கே. ஸி., லால்குடி, குன்னக்குடி, சிட்டிபாபு, மதுரை சோமு, எம். எல். வி. இவர்களெல்லாம் கச்சேரி செய்ய ணும். இந்தக் காற்றுக்கும் கச்சேரிக்கும் எப்படி இருக் கும்?'' என்று கூறி மானசீகமாக ரசித்துப் பார்த்தார் சாம்பசிவ சாஸ்திரி.

''குன்னக்குடின்னு எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவ ருக்குப் பக்க வாத்தியம் யாரு?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''வலையப்பட்டிதான். நாமகிரிப் பேட்டை, குன்னக் குடி இரண்டு பேருக்குமே அவர்தான்'' என்றார் கோபால் ராவ்.

''ஒரு கல்லில் ரெண்டு மாங்காயா!'' என்றார் அம்மாஞ்சி.

''நாமகிரிப்பேட்டை தோடி வாசிச்சார்னு இந்த ஏரியே ரொம்பிப் போயிடும்'' என்றார் சாம்பசிவம்.

''குன்னக்குடியை சீக்கிரமே புறப்பட்டு வரச் சொன் னால் தேவலை'' என்றார் அம்மாஞ்சி.

''ஏன்? என்ன சமாச்சாரம்?'' என்று கேட்டார் சாம்ப சிவம்.

''அவர்தான் பட்டை பட்டையா நெற்றி பூராவையும் அடைச்சு விபூதி பூசுவார். அவர் வந்தால் நமக்கு விபூதிப் பஞ்சம் தீரும். கொண்டு வந்த ஸ்டாக்கெல்லாம் தீர்ந்து போச்சு'' என்றார் அம்மாஞ்சி.

''இந்த ஏரியையும் சூழ்நிலையையும் பார்க்கிறப்போ, தெப்ப உற்சவத்தன்று இங்கே வரவங்க எல்லாருக்கும் ஒரு வெண் பொங்கல், புளியோதரை, மசால்வடை, தயிர் சாதம் அவ்வளவையும் தனித் தனியா பொட்டலம் பொட் டலமாகக் கட்டிக் கொடுத்து விட்டால் அவங்கவங்க, கும்பல் கும்பலா ஏரியைச் சுற்றி புல்தரையிலே உட்கார்ந்து ஆனந்

தமாச் சாப்பிடுவாங்க...'' என்று ஓர் ஆசையை வெளி யிட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''செஞ்சுட்டாப் போறது! எப்படியும் சமையல்காரர் கள் மட்டும் ஐந்நூறு பேருக்கு மேலே வரப் போறுங்க. இங்கேயே மரத்தடியில் செய்யச் சொல்லி விட்டால் போச்சு. வனபோஜனம் மாதிரியும் ஆயிடும்'' என்ருன் பஞ்சு.

''சமையல்காரங்க பார்ட்டி வரபோது அப்படியே அம்பிகா அப்பளம், அசோகா பொட்டலம் பாக்கு, டி. ஏ. எஸ். ரத்னம் பட்டணம் பொடி மறக்காமல் கொண்டு வரச் சொல்லுங்க'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''நேரமாச்சு. புறப்படுங்க, டோக்கியோ போகலாம்'' என்ருன் பஞ்சு.

''பஞ்சு ஸாரும் கோபால் ராவும் ஹெலிகாப்டரில் முன்னுடி போகட்டும். நாம் மூவரும் ரயலில் போகலாம். நமக்கென்ன அவசரம்? இங்கிருந்து டோக்கியோவுக்கு ஸுப்பர் எக்ஸ்பிரஸ் போகிறது. ஐம்பத்தைந்தே நிமி ஷம் தான். வழியிலுள்ள இயற்கைக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டே போகலாம்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

ஹெலிகாப்டரில் டோக்கியோ போய்ச் சேர்ந்ததுதான் தாமதம்; பஞ்சுவும் கோபால் ராவும் அவசரம் அவசரமாக டயட் ஆபீசுக்குப் போய் வேலையைக் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள். அங்கே அவர்களுக்காக பெட்டி பெட்டி யாகத் தபால்களும் தந்திகளும் காத்துக் கிடந்தன.

''தெப்போ எப்போது?'' என்று கேட்டுச் சில தந்திகள்.

''ஒட்டலில் ரூம் ரிஸர்வேஷன் செய்து தரமுடியுமா?'' என்று விசாரித்துச் சில தந்திகள்.

பஞ்சு அவற்றை யெல்லாம் தள்ளி வைத்து விட்டு பாப்ஜி கொடுத்திருந்த தந்தியை எடுத்துப் படித்தான்.

வி. எஸ். டி. பார்ட்டி மறுநாள் மாலை ஏர் இண்டியா அக்பர் சக்கரவர்த்தியில் டோக்கியோ வருகிறார்கள் என்பதே பாப்ஜி அனுப்பியிருந்த செய்தி.

''பலே, பலே! நாளைக்கு வராங்களாம் வி. எஸ். டி. பார்ட்டி'' என்றான் பஞ்சு.

''தஞ்சாவூர் சமையல்காரர்கள், காரைக்குடி ஆசாரிகள், மகாபலிபுரம் ஸ்தபதிகள் எல்லாம்கூட வருகிறார்களாம்'' என்று இன்னொரு தந்தியை எடுத்துப் படித்துச் சொன்னார் கோபால் ராவ்.

''இவர்களையெல்லாம் எங்கே இறக்கலாம்?'' என்று கேட்டான் பஞ்சு.

''எல்லாரையும் பாலெஸ் ஓட்டலில் இறக்கி விடுவோம். அதுதான் வசதியான ஓட்டல். அரண்மனைக்குப் பக்கத்திலேயும் இருக்கிறது'' என்றார் கோபால் ராவ்.

''வி. எஸ். டி. பார்ட்டியை மட்டும் பாலெஸ் கஸ்ட் ஹவுஸில் இறக்கி விடலாம். சக்கரவர்த்தியின் விசேஷ விருந்தாளியாச்சே அவங்க'' என்றான் பஞ்சு.

கோபால் ராவ் பத்திரிகைக்காரர்களுக்கு ஃபோன் செய்து தெப்போ-76 சம்பந்தமான புதிய செய்திகளைச் சொல்லத் தொடங்கினார்.

# 8

"பிரயாணம் செய்தால் ஜப்பான் ரயிலில் செய்யணும். ப்ளேனில் போனால் கூட இவ்வளவு வசதியா இருக்காது. துளி அலுப்பு இல்லையே!" என்றார் அம்மாஞ்சி.

ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்த சாம்பசிவ சாஸ்திரி, "ஒரு 'இஞ்ச்' நிலத்தைக் கூட வீணாக்காமல், எங்கே பார்த்தாலும் பயிர் பண்ணியிருக்கான் ஜப்பான்காரன். கண்ணுக்கு எட்டின வரைக்கும் ஒரே நெல் வயலா இருக்கு..." என்றார்.

"ஜப்பான் பூமியை முக்கால் பங்குக்கு மேல் மலைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அந்த மலைகளுக்கெல்லாம் ராஜா ஃப்யூஜி" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"ரொம்பச் சின்ன தேசம். இதிலே எங்கே பார்த்தாலும் மலை. மிச்சம் இருக்கிற துளியுண்டு இடத்திலே குடியிருக்க வீடு, கார் போக ரோடு, ரயில்வே லைன்கள், தொழிற்சாலைகள், கோயில்கள் இவை தவிர ஆறு, காடு மேடு இதெல்லாம் வேறே. இவ்வளவும் போகப் பயிர் பண்றதுக்கு இடம் ஏது?" என்று வியந்தார் அம்மாஞ்சி.

"இதிலே வேடிக்கை என்ன தெரியுமோ! ஜப்பான்லே எப்பவுமே அரிசிக்குப் பஞ்சம் கிடையாது. 'தி ஜாப்னிஸ் பீபிள் வில் நெவர் ஸ்டார்வ்'னு என் மருமான் எனக்கொரு சமயம் லெட்டர் எழுதியிருந்தான்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பணப் பஞ்சம், சாப்பாட்டுப் பஞ்சம் இரண்டும் இல்லாத நாடு இது. ஆனால் இடம் போதாமல் தவிக்கிறாங்க, பாவம்" என்றார் அம்மாஞ்சி.

"நம் ஊர்லே இடத்துக்குப் பஞ்சம் இல்லே. மிச்ச இரண்டுக்கும் திண்டாட்டம்..." என்றார் அம்மாஞ்சி.

"ஒண்ணு செய்யலாம்; கொஞ்ச காலத்துக்கு இந்த ஜப்பான்காரங்களை இண்டியாவிலே குடியேறச் சொல்லி விட்டு நாம் ஜப்பானுக்கு வந்துடலாம்!" என்றார் சாம்ப சிவம்.

"ஏன்? ஜப்பான் நன்றாயிருப்பது உமக்குப் பிடிக்க வில்லையா?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே டோக்கியோ, ஷிஞ்சுகு ஸ்டேஷன் வந்து விட்டது. மூவரும் டாக்ஸி பிடித்து பாலெஸ் போய்ச் சேர்ந்தார்கள்.

பார்லிமெண்ட் கட்டடத்தின் பக்கத்தில் அமைந்துள்ள தெப்போ-76 அலுவலகம் ஒரே பரபரப்பாயிருந்தது. ஓயாத டெலிபோன் கால்கள் ஒரு புறம். வெளிநாட்டுப் பயணிகளின் விசாரணை ஒருபுறம். கோபால் ராவ், பஞ்சு இருவருமே எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பஞ்சுவின் மேஜை மீது டைப் அடிக்கப்பட்ட காகிதங்கள் அவன் கையெழுத்துக்காகக் காத்திருந்தன. புதிதாக வந்துள்ள நியான் ஸைன் போர்டை எங்கே வைத்தால் பொருத்தமாயிருக்கும் என்ற பிரச்னையில் பஞ்சுவும் கோபால் ராவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். The Japan Association for Theppo-76 என்று அந்த போர்டில் ஆங்கிலத்திலும் ஜப்பான் மொழியிலும் எழுதப்பட்டிருந்தன. தெப்போ-76-ன் சின்னமாக வட்ட வடிவத்தில் சிவப்பு நிற உதயசூரியனும் அதன் பக்கத்தில் திருவாரூர்த் தேரின் உருவப் படம் ஒன்றும் வரையப் பட்டிருந்தன.

"எக்ஸலண்ட் ஐடியா! சின்னம் ரொம்ப நன்றாக அமைந்து விட்டது" என்றார் கோபால் ராவ்.

"கின்ஸாவில் தேர் ஓடப் போகிற வீதிகளைக் காட்டி வரை படம் ஒன்று தயாரித்திருக்கிறார்கள். பத்து லட்சம் பிரதிகள் பிரிண்ட் செய்திருக்கிறார்களாம்" என்றான் பஞ்சு.

"அத்தனை பிரதிகளை நாம் என்ன செய்வது?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"எல்லா ஓட்டல்களிலும், விமானக் கம்பெனி அலுவலகங்களிலும் கொடுத்து வைத்தால் வெளிநாட்டுப் பயணிகள் வாங்கிப் பார்ப்பார்கள். பப்ளிஸிடி தானே?" என்றான் பஞ்சு.

"அதன் பின்பக்கத்தில் திருவாரூர்த் தேரின் உயரம், கனம், அதிலுள்ள சிற்பங்கள் பற்றிய விவரம், சக்கரங்களின் சுற்றளவு, தேர் இழுப்பதற்குத் தேவையான ஆட்கள் எத்தனை பேர் போன்ற நுணுக்கமான விவரங்களையெல்லாம் அச்சிட்டுக் கொடுத்தால் வெளி நாட்டுக்காரர்களுக்கு ரொம்ப உபயோகமா யிருக்கும்" என்றார் கோபால் ராவ்.

"இங்கிலீஷ் பேசத் தெரிந்த ஆயிரம் பெண் கய்டுகள் தேவை. மிஸ்டர் யோஷிஹரியிடம் சொல்லி இன்றே பத்திரிகைகளில் விளம்பரம் செய்யச் சொல்லிவிடுங்கள்" என்றான் பஞ்சு.

"ஜப்பானில் பெண்களுக்கும் ஓட்டல்களுக்கும் பஞ்சமே கிடையாது" என்றார் கோபால் ராவ்.

"ஸ்தபதிகளையும், ஆசாரிகளையும் பாலெஸ் காம்பவுண்டுக்குள்ளேயேதான் இறக்கணும். தேர், திருவள்ளுவர் சிலை இரண்டும் அரண்மனைக்குள்ளேயேதான் செய்ய வேண்டும்" என்றான் பஞ்சு.

''நம்ம ஆட்கள் போடுகிற கூச்சல், கொட்டாப்புளி, கல்லுளி போடுகிற சத்தம், சமையல்காரர்கள் அண்டாக் களை உருட்டுகிற சத்தம் இதெல்லாம் சேர்ந்து காது செவிடா யிடுமே! சக்கரவர்த்திக்கு இடைஞ்சலாயிருக்குமே'' என்றார் கோபால் ராவ்.

''கவலைப்படாதீங்க. அரண்மனைக்குள் வேண்டிய இடம் இருக்கிறது. மொத்தம் 250 ஏக்கர் நிலம். எங்காவது ஒரு மூலையில் அவர்களை இறக்கி விடலாம். தேர் வேலை நடக்கிறபோது வெளியிலே சத்தம் கேட்காதபடி நாளைக்கே 'ஸவுண்ட் ப்ரூப் ஹால்' ஒன்று கட்டிவிடலாம்'' என்றான் பஞ்சு.

''இம்பீரியல் பாலெஸ் காம்பவுண்டுக்குள் இல்லாததே எதுவும் இல்லை. ஆஸ்பத்திரி, பாங்க், கடைத்தெரு, தியேட்டர், ரெஸ்டாரண்ட், நீச்சல் குளம், ஷிண்ட்டோ கோயில்கள், ஸலூன், லாண்ட்ரி, இடுகாடு எல்லாம் இருக்கு. ரோம்லே வாடிகன் ஸிடி மாதிரி'' என்றார் கோபால் ராவ்.

''ஆமாம்; வள்ளுவர் சிலை செய்வதற்கு ஏற்ற கல் வேண்டுமே, அதற்கென்ன செய்வது?'' என்று கேட்டான் பஞ்சு.

''ஜப்பான்லே கல்லுக்குத்தானா பஞ்சம்? எங்கே பார்த்தாலும் மலைகள் மயம். கணபதி ஸ்தபதி வந்ததும் அவரையே நேரில் அழைத்துக்கொண்டு போய் அவர் தேர்ந்தெடுக்கிற கல்லைக் கொண்டு வந்து விடவேண்டியது தானே!'' என்றான் பஞ்சு.

''விமானக் கம்பெனிகளெல்லாம் இப்பவே விளம்பரம் செய்ய ஆரம்பிச்சுட்டாங்களே! பேப்பர்லே பார்த்தீங்களா?'' என்று யோஷினாரி அன்றையப் பேப்பர் ஒன்றை எடுத்து வந்து பஞ்சுவிடம் காட்டினார்.

''பேஷ் பேஷ்!'' என்ருன் பஞ்சு.

''தெப்போ 76-க்கு ஸ்பெஷல் ஸ்டாம்ப் கூட ரிலீஸ் செய்யச் சொல்லியிருக்கிருர் பிரைம் மினிஸ்டர்'' என்ருர் மிஸ்டர் யோஷிஞரி.

''ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து'' என்று ஜப்பான் சாஸ்திரிகள் தமது வலது கை கட்டை விரலில் தொடங்கி சுண்டு விரல் வரை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தார்.

''ஓய்! என்ன இது? சுண்டு விரலிலிருந்து எண்ணுவதற்குப் பதில் கட்டை விரலிலிருந்து தலைகீழாக எண்ணுகிறீரே?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''இப்படி இந்தப் பக்கத்திலிருந்து எண்ணுவதுதான் ஜப்பானியர்கள் வழக்கம். 'பி எ ரோமன் வென் யூ ஆர் இன் ரோம்'னு கேள்விப்பட்டதில்லையா?'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''சரி; ஐந்து வரை என்ன கணக்குப் போட்டீர்?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''மெட்ராஸிலிருந்து ப்ளேன் வருவதற்கு இன்னும் ஐந்து மணி நேரம் இருக்காம்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''நாம் ஏர்போர்ட்டுக்குப் போக வேண்டாமா! யார் யார் வருகிருர்களாம்?'' என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரி.

''வி. எஸ். டி. தேர் வேலை முடிஞ்சதும் வருகிருராம். இன்றைக்கு ஸ்தபதிகள், ஆசாரிகள், சமையல் பார்ட்டி வரைக்கும் வருகிருர்களாம்'' என்ருர் அம்மாஞ்சி.

''சமையலுக்கு வைத்தா பார்ட்டிதானே வருகிருர்கள்? வைத்தா கையாலே வத்தக் குழம்பு வெச்சாலும்

தேனுயிருக்கும்'' என்று நாக்கைச் சப்புக் கொட்டினுர் சாம்பசிவ சாஸ்திரி.

''நாளையிலிருந்து சாப்பாட்டுப் பஞ்சம் தீர்ந்தது!'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''உமக்கு அதேதானே கவலை!'' என்ருர் சாம்ப சிவம்.

''நான் சாப்பாட்டைப் பற்றி வாயால் பேசுவதோடு சரி. நீர் காரியத்தில் கவனித்துக் கொள்வீர். அதுதான் வித்தியாசம்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''என்னை சாப்பாட்டுராமன் என்கிறீரா?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''உம்ம தொந்தியே சொல்லும் அதை'' என்று சாம்பசிவத்தின் தொப்பையைத் தம் கையால் தட்டினுர் ஜப்பான் சாஸ்திரி.

''ஓய்! வெறும் தொப்பை இல்லை அது. தொப்பே-76'' என்று கேலி செய்தார் அம்மாஞ்சி.

''நாளைக்கு ஈவினிங் டிபன் ஜாங்கிரியும் ரவா உப்பு மாவும் போடச் சொல்லணும். வைத்தா ரவா உப்புமா கிண்டினுல் வாசனை ஜப்பானையே தூக்கிக் கொண்டு போகும்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''ஜாங்கிரி சுத்தறதிலே நாம் எக்ஸ்பர்ட். ஜப்பான் காரன் நம்ம ஜாங்கிரியைப் பார்த்து அசந்து போவான்'' என்ருர் சாம்பசிவம்.

''எப்படி?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''ஜாங்கிரிக்கு ஆரம்பம் எது, முடிவு எது என்று அவ னுலே கண்டு பிடிக்க முடியாமல் திண்டாடுவான்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''பகவானுக்கு ஆதி அந்தம் கிடையாது. அதே மாதிரி நம்ம ஜாங்கிரியிலும ஆரம்பம் எது முடிவு எது என்று கண்டுபிடிக்க முடியாது. நம்ம ஜாங்கிரியிலே ஒரு பெரிய தத்துவமே அடங்கியிருக்கு'' என்றார் சாம்பசிவம்.

''இதைச் சொல்லிக் கொண்டே தான் நாம் காலத்தை ஓட்டணும்'' என்றார் அம்மாஞ்சி.

''முதலில் இப்போ தேரை ஓட்டுவோம்'' என்றார் சாம்பசிவம்.

# 9

"சின்னம் ரொம்பப் பொருத்தமாகவும் அழகாகவும் அமைந்துவிட்டது. வெள்ளை நிறப் பட்டுத் துணியில், சிவப்பு நிற வட்டச் சூரியனும் திருவாரூர் தேரும் பொறித்த கொடியைத் தேரின் உச்சியில் சுட்டிவிட வேண்டும். கின்ஸா வீதியிலே தேர் போகிற போது அந்தக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும். தேரைச் சுற்றியுள்ள 'தொம்பை'கள் யானைத் துதிக்கை மாதிரி இப்படியும் அப்படியும் அசைந்தாடும். வள்ளுவர் நாலு வீதியிலும் ஜம்மென்று பவனி வருகிற அந்தக் காட்சியைக் காண வெளி நாடுகளிலிருந்தெல்லாம் லட்சக்கணக்கான மக்கள் வந்து கூடியிருப்பார்கள். அதை நினைத்தாலே எனக்கு ஒரே 'த்ரில்'லா இருக்கு" என்றார் கோபால் ராவ்.

"எனக்கு ஒரு ஐடியா......" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"என்ன அது?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"வள்ளுவர் வலம் வரப்போகிற அந்த நாலு வீதிகளுக்கும் வள்ளுவர் வீதி, கம்பர் வீதி, இளங்கோ வீதி, தொல்காப்பியர் வீதி என்று பெயர் சூட்டி விட்டால் என்ன என்பது தான் அந்த ஐடியா!" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"ஒரு வீதிக்கு நான் ஏற்கனவே பெயர் வைத்து விட்டேன்..." என்றார் சாம்பசிவம்.

"அது எப்போ? என்ன பெயர்?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

''அன்றைக்குக் கின்ஸாவிலே நான் காணமல்போயிட்டேன் இல்லையா? அப்போ ஒரு தெரு முனையிலே உள்ள சுவர்லே என் பெயரை பால்பாயிண்ட் பென்சிலால் அழுத்தமா எழுதி வைத்து விட்டேன். கின்ஸாவிலே எல்லாத் தெருவும் ஒரே ஜாடையா இருக்கு. ஒரு முறை போன தெருவிலேயே திரும்பத் திரும்ப அலையக் கூடாது என்பதற்காக என் பெயரை எழுதி வைத்து விட்டேன்'' என்ருர் சாம்பசிவம்.

''உமக்கு ஏன் இப்படி ஒரு அற்ப ஆசை? சின்னப் பிள்ளைத்தனமா இருக்கே!'' என்ருர் அம்மாஞ்சி.

''எனக்கு அந்த வீதி முனையிலே ஒரு சிலையே வைக்கலாம். அவ்வளவு அலை அலைந்திருக்கிறேன்'' என்ருர் சாம்பசிவம்.

''நீரா அலைந்தீர்? உம்மைத் தேடி நாங்கள் அல்லவா அலைந்தோம்?'' என்ருர் அம்மாஞ்சி.

''சரி, வீதிகளுக்குப் பேர் வெச்சுட்டா மட்டும் போதுமா? தேரின் நாலு பக்கத்திலும் நாலு குறள்களை எழுதி வைக்க வேண்டாமா?'' என்று கேட்டார் கோபால் ராவ்.

''நாலு குறள் என்ருல் என்னென்ன குறள்? அவற்றை யார் தேர்ந்தெடுப்பது?'' என்று கேட்டார் கோபால் ராவ்.

''தேரில் குறள் எழுதி வைக்கிற ஐடியா ஒண்ணும் புதுசில்லே. நம் ஊர் பஸ்களில் எழுதி வைத்திருக்கிற மாதிரி தானே?'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''எனக்கு ஒரே ஒரு குறள் தெரியும். 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்கிற குறள்'' என்ருர் அம்மாஞ்சி.

''உமக்கென்ன? ரொம்பப் பேருக்கு அது ஒண்ணு தான் தெரியும். ஆனல் அவங்க எல்லாக் குறளும் தெரிஞ்ச மாதிரி நடிப்பாங்க...'' என்ருர் சாம்பசிவம்.

"அது பரவாயில்லையே! சில பேர் தமிழ்நாட்டில் பிறக்காமலே தமிழன் மாதிரி நடிக்கிறுங்களே!" என்றுர் கோபால் ராவ்.

"பஞ்சு ஸார்! பாப்ஜிக்கு ஃபோன் செய்யறப்போ அருமையான குறளாக நாலு செலக்ட் பண்ணி அனுப்பச் சொல்லுங்க" என்றுர் ஜப்பான் சாஸ்திரி.

"பாப்ஜிக்கு என்ன தெரியும் குறளைப் பற்றி?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"அவனுக்குத் தெரியாவிட்டாலும் தெரிஞ்சவங்க கிட்டே பொருத்தமான குறளோவியமாகக் கேட்டு வாங்கி அனுப்புவான்" என்றுர் சாம்பசிவம்.

"புரியறது!" என்று அம்மாஞ்சி கண் சிமிட்டினுர்.

"தேருக்கு வேண்டிய தொம்பையை மறந்துடப் போறுங்க!" என்றுர் சாம்பசிவ சாஸ்திரிகள்.

"ஆமாம்; கும்பகோணம் சக்ரபாணிப் பிள்ளை ஸன் சாமிநாதன் கிட்டே சொல்லிட்டாப் போதும். கோயில் குடை, தேர்ச்சீலை, முகப்பு வாசல் மாலை, தொம்பை சகலமும் கொண்டு வந்து விடுவார். பாப்ஜியிடம் சொல்லி அவரை அடுத்த பிளேன்லேயே ஏற்றி அனுப்பிடச் சொல்லணும். அவருக்கு ஏக வேலை இருக்கு இங்கே" என்றுர் ஜப்பான் சாஸ்திரி.

"ஆமாம்; தெப்போ 76 ஆபீஸ் வாசலில் கூட ஒரு பந்தல் போட்டு அதைச் சுற்றி தொம்பைகளைக் கட்டி வைத்தால் ஒரு 'ஃபெஸ்ட்டிவல்' களை கட்டும்" என்றுன் பஞ்சு.

"அத்தோடு வாழை மரங்களையும் கட்டி வையுங்க. அப்பத்தான் நம் தமிழ்நாட்டுக் களை கட்டும்" என்றுர் அம்மாஞ்சி.

"ஜப்பானியர் வீட்டில் ஏதாவது விசேஷம்னு வீட்டுக்கு முன்னுலே பைன் மரங்களைக் கட்டி வைப்பாளாம்" என்றுர் ஜப்பான் சாஸ்திரி.

"நம் ஊர் விழா என்பதால் வாழை மரம்தான் பொருத்தமாயிருக்கும்" என்றார் கோபால் ராவ்.

"முதல்லே ஒரு வாழைத் தோட்டத்தை அப்படியே வெட்டி பந்தல் சாமான்களோடு ஏற்றி அனுப்பச் சொல்லுங்க" என்றார் அம்மாஞ்சி.

"தேருக்கு வேண்டிய மரச் சாமான்களெல்லாம் எப்போது வருகிறதாம்?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"இன்றைக்கே காரைக்குடி ஆசாரிகளோடு வருகிறதாம்" என்றான் பஞ்சு.

"பாப்ஜிக்கு போன் பண்றப்போ நாளை ஃப்ளைட்லே சாந்தா நாராயணனை அனுப்பி வைக்கச் சொல்லுங்கோ. அந்த அம்மாள் தேர் ஓடப்போகிற நாலு வீதிகளிலும் ரங்கோலி கோலம் போட்டால் ஜப்பானே அசந்துபோகும். அவர்களுடைய 'இகபானா' நம்ம ரங்கோலியிடம் என்ன செய்யும்?" என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

"இகபானா வேறே. ரங்கோலி வேறே. இதையும் அதையும் ஏன் பிணைக்கிறீங்க?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"இரண்டுமே வீட்டை அழகுபடுத்தும் கலைதானே!"

"கோலத்தைக் கூட்டம் மிதிச்சிப் பாழ் பண்ணிடாதோ...?" என்று கேட்டான் பஞ்சு.

"கோலம்னா நாலு பேர் கால் பட்டு அழியத்தான் செய்யும். அதெல்லாம் ஒரு சுபம்தான். அந்த அம்மாள் தண்ணீர் மீது கூடக் கோலம் போடுவாங்க. தெப்பத்தன்று ஹகோனே ஏரித் தண்ணீர் மீது போடச் சொல்லுவோம். ரொம்ப அழகாயிருக்கும்" என்றார் அம்மாஞ்சி.

"ஜப்பானில் தீபங்களைக் கூடத் தண்ணீர் மீது மிதக்க விடுவார்கள். அதுகூட ரொம்ப அழகாயிருக்கும்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''தேரோட்டம் வரைக்கும் தெப்போ ஆபீஸ் வாசலில் தினம் ஒரு கோலமாகப் போட்டு வைக்கட்டுமே. ஆபீஸுக்கு வர்ற வெளிநாட்டுக்காரர்களெல்லாம் அதைப் பார்த்து ஆச்சரியப்படுவாங்க......'' என்றார் கோபால்ராவ்.

''எனக்கு ஒரு சந்தேகம்...'' என்றார் அம்மாஞ்சி.

''என்ன அது?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''தேரோட்டம் தொடங்கறதுக்கு முன்னாலே முக்கியமானவர்களெல்லாம் தேர்ச் சக்கரத்தின் மீது சூறைக்காய் அடிக்கிற வழக்கமாச்சே! இங்கேயும் உண்டா அது?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''இதிலே என்ன சந்தேகம் உமக்கு? நிச்சயமா உண்டு'' என்று தேங்காய் அடித்த மாதிரி சொன்னான் பஞ்சு.

''இல்லே, சூறைக்காய் உடைத்தால் அந்தக் காய்களெல்லாம் சிதறி வீதியெல்லாம் இரைந்து குப்பையாகி விடுமே என்று பார்க்கிறேன்'' என்றார் அம்மாஞ்சி.

''சிதறட்டுமே! அதெல்லாம் தானே முக்கியம்!'' என்றான் பஞ்சு.

''வடம் பிடிக்கிறவங்க காலில் அந்தச் சில்லுகள் பொத்துக்கொண்டு ரத்தம் வரும்'' என்றார் அம்மாஞ்சி.

''அப்ப என்ன செய்யலாம் அதுக்கு?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''நம் ஊரில் சூறைக்காய் அடித்தால் அதைப் பொறுக்குவதற்கென்று சில பசங்கள் பாய்ந்தோடி வருவாங்க. அந்த மாதிரிப் பசங்களாப் பார்த்து ஒரு நூறு பசங்களை இங்கே அனுப்பி வைத்தால் நல்லது'' என்றார் அம்மாஞ்சி.

''ஏன் சாஸ்திரிகளே, அந்த ஏழைப் பசங்க தேங்காய் பொறுக்கிச் சாப்பிடுவதைப் பார்த்தால் ஜப்பான்காரன்

நம்ம கண்ட்ரியைப் பற்றி என்ன நினைப்பான்? அது நமக்குக் கேவலமில்லையா?'' என்று கேட்டார் கோபால் ராவ்.

''அவங்ககிட்டே நாம் முன்னடி சொல்லி வெச்சுட்டாப் போச்சு. 'தெருவிலே குப்பை விழுவது அவர்களுக்குப் பிடிக்காது. உடனே பாய்ந்து பொறுக்கி எடுத்து விடுவார்கள். அப்படி ஒரு பழக்கம் அவர்களுக்கு. இதற்காகவே அவர்களை வரவழைத்திருக்கிறோம்' என்று கூறிச் சமாளிக்க வேண்டியதுதான்''' என்றான் பஞ்சு.

''எக்ஸலெண்ட் ஐடியா! அவங்களுக்கெல்லாம் முன் கூட்டியே ஒரு யூனிபார்ம் கொடுத்து போட்டோ எடுத்து அந்த போட்டோவுக்குக் கீழே,

'ஹண்ட்ரட்ஸ் ஆப் வாலண்டீர்ஸ் ப்ரம் டமில் நாட் அரைவிங் டோக்யோ டு கிளியர் தி ப்ரோக்கன் பீஸஸ் ஆப் கோகனட்ஸ் ப்ரம் தி கின்ஸா ஸ்ட்ரீட் பிஃபோர் தி ஃபெஸ்ட்டிவல் ஸ்டார்ட்ஸ்' என்று எழுதி பேப்பரில் நியூஸ் கொடுத்து விடுவோம்!'' என்றார் கோபால் ராவ்.

''நரிக்குறவாளை வாஷிங்டனுக்கு அழைச்சிண்டு போன பஞ்சு ஸாருக்கா இதெல்லாம் சொல்லித் தரணும்?'' என்றார் அம்மாஞ்சி.

''ப்ளேன் வர நேரமாச்சு. புறப்படுங்க. எல்லாரும் ஏர்போர்ட்டுக்குப் போவோம்'' என்று அவசரப்படுத்தினான் பஞ்சு.

ரமேஷும் இகிடாவும் ஒரு காரில் ஏறிக்கொண்டார்கள். பஞ்சு, கோபால் ராவ், யோஷினோரி மூவருக்கும் இன்னொரு கார். சாஸ்திரிகள் மூவருக்கும் வேறொரு கார்!

ஸ்தபதிகளையும் ஆசாரிகளையும் சிற்பிகளையும் காண விமானகூடத்தில் கூட்டம் ஜேஜே என்று அலை மோதிக் கொண்டிருந்தது.

முதலில் கணபதி ஸ்தபதிதான் இறங்கி வந்தார். அப்புறம் பளபளவென்ற விநாயகர் விக்கிரகத்தையும், நடராஜர் விக்கிரகத்தையும் நாலைந்து பேராகத் தூக்கிக் கொண்டு இறங்கி வந்தனர். சுற்றி நின்ற காமிராக்காரர் களும், டெலிவிஷன்காரர்களும் வந்தவர்களையும் விக்கிர கங்களையும் படமெடுத்துக்கொண்டே இருந்தார்கள். பிரஸ் ரிப்போர்ட்டர்களின் கேள்விகளுக்கு பஞ்சுவும், கோபால் ராவும் மாறி மாறிப் பதில் சொல்லிக் கொண்டிருந்தனர்.

"நடராஜர் விக்கிரகம் ஏன் ஒரு காலைத் தூக்கிக் கொண்டு நிற்கிறது?" என்று கேட்டார் ஒரு நிருபர்.

"இரண்டு காலையும் தூக்கினால் எப்படி நிற்க முடி யும்?" என்று பதிலுக்குத் திருப்பிக் கேட்டான் பஞ்சு.

"வெரிகுட் ஜோக்!" என்று சிரித்தனர் நிருபர்கள்.

"ஓல்ட் ஜோக்!" என்று கோபால் ராவ் பஞ்சுவின் காதில் கிசுகிசுத்தார்.

"ஜப்பானியருக்குப் புதிசுதானே?" என்றான் பஞ்சு.

"விநாயகரின் காலடியில் இருக்கிறதே, அது என்ன?" என்று கேட்டார் ஒரு நிருபர்.

"மூஷிக வாகனம். மூஷிக்!" என்றார் கோபால் ராவ்.

"அ! முஷிகு? இட் ஸௌண்ட்ஸ் லைக் ஜாப்னீஸ் நேம்!" என்று கூறி மகிழ்ந்தனர் நிருபர்கள்.

கணபதி ஸ்தபதி, ஆசாரி ஸ்தபதி இருவரையும் தங்கள் காரில் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர் பஞ்சு வும் கோபால் ராவும்.

மரச் சாமான்களை டிரக்குகளில் ஏற்றி அனுப்பிவிட்டு, விக்கிரகங்களை ஒரு தனிக் காரில் எடுத்துக்கொண்டு புறப் பட்டார் யோஷிநூரி.

சமையல் வைத்தாவை ஜப்பான் சாஸ்திரி கவனித்துக் கொண்டார்.

"ஏன் வைத்தா? நீங்க மொத்தம் ஐந்நூறு பேர் வரப் போவதாகச் சொன்னுளே. கொஞ்சம் பேர்தானே வந் திருக்கீங்க?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"கலியாண சீஸன் இல்லையா? அதனுல் கிராக்கி அதிகம். பாதிப் பேர்தான் வந்திருக்காங்க. மற்றவங்க அடுத்த வாரம் வராங்க" என்ருர் சமையல் வைத்தா.

"இப்பத்தான் தமிழ்நாட்டிலே கஸ்ட் கண்ட்ரோ லாச்சே! சமையல்காரர்களுக்கு கிராக்கி இருக்காதே!" என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

"என்ன கண்ட்ரோலாளுலும் டின்னர் பார்ட்டிகளுக் குக் குறைச்சல் இல்லை" என்ருர் சமையல் வைத்தா.

ஆசாரிகளையும் சமையல்காரர்களையும் ஒகூரா ஓட்டலில் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பை ரமேஷ், இகிடா இருவரிடமும் ஒப்படைத்துவிட்டுப் போய் விட்டான் பஞ்சு.

அவர்கள் அவ்வளவு பேரையும் மாஞே ரயிலில் ஏற்றி ஒகூரா ஓட்டலில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குள் ரமேஷும் இகிடாவும் பெரும் பாடுபட்டுப் போனுர்கள்.

முதலில் பாலெஸ் கெஸ்ட் ஹவுஸில் கொண்டு வைக் கப்பட்ட இரண்டு விக்கிரகங்களுக்கும் தேங்காய் உடைத்து கற்பூர ஹாரத்தி எடுத்தனர் சாஸ்திரிகள்.

"சரி, விக்கிரகங்கள் வந்து சேர்ந்துவிட்டன. வள்ளு வர் சிலைக்கு என்ன செய்யப் போறீங்க?" என்று கணபதி ஸ்தபதியைக் கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"மலைகள் உள்ள பக்கமாகப் போய்த் தேடிப் பார்த்து சிலைக்குப் பொருத்தமான கல்லைக் கொண்டு வரவேண்டி யதுதான்" என்றனர் ஸ்தபதிகள்.

"அங்கெல்லாம் போய்த் தேடுவதற்கு நேரமில்லை. நான் ஒரு 'ஐடியா' செய்து வைத்திருக்கிறேன். இங்கே டோக்கியோவிலேயே க்யோஸுமி கார்டனில் வேண்டிய பாறைகள் உள்ளனவாம். ஜப்பான் நாட்டிலுள்ள பாறை

வகைகள் எத்தனை உண்டோ அத்தனையும் அங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்களாம். நாம் இப்போதே ஒரு காரில் போய்ப் பார்த்து விட்டு வந்து விடலாமா?'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''பேஷாப் போச்சு! அப்படி ஒரு கார்டன் இருக்கா? அது எங்கே?'' என்று கேட்டான் பஞ்சு.

''கியோஸு பிரிட்ஜ் அருகில் இருக்கு. அது ரொம்ப அழகான கார்டனும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இதெல்லாம் உமக்கு எப்படித் தெரிகிறது?'' என்று கேட்டான் பஞ்சு.

''மருமான் சொல்லியிருப்பான்'' என்றார் சாம்பசிவம்.

''அதுதான் இல்லே. நானே டூரிஸ்ட் கய்ட் புக் ஒன்றில் பார்த்தேன். இதோ பாருங்க'' என்று கூறி அந்த கய்ட் புக்கை எடுத்துக் காட்டினார் ஜப்பான் சாஸ்திரி.

பஞ்சு, கோபால் ராவ், சாஸ்திரிகள், ஸ்தபதிகள் எல்லோரும் உடனே கியோஸுமி கார்டனுக்குப் புறப்பட்டுப் போய் அங்குள்ள பாறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்கள்.

## 10

"சாம்பசிவ சாஸ்திரிகளைக் காணுமே, எங்கே?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"அவரும் ஜப்பான் சாஸ்திரியும் சேர்ந்து ஷாப்பிங் போயிருக்கா. அப்படியே ஹோட்டல் ஒகூராவுக்குப் போய் சமையல் வைத்தாவைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொன்னார்கள்" என்றார் அம்மாஞ்சி.

"நல்ல மழை கொட்டுகிறதே! இப்பத்தானா ஷாப்பிங் போவதற்கு நேரம் கிடைத்தது? கையிலே குடை ஏதாவது எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்களா?" என்று கவலையோடு விசாரித்தார் கோபால் ராவ்.

"ஜப்பான் சாஸ்திரி கையிலே விசிறி மட்டும் இருந்தது. பார்த்தேன். குடை எடுத்துக் கொண்டு போனதாகத் தெரியவில்லை" என்றார் அம்மாஞ்சி.

"மழையிலே நனைந்து தெப்பமா திரும்பி வரப் போறாங்க" என்றார் கோபால் ராவ்.

"தெப்பம் விடத்தானே வந்திருக்கோம்?..." என்று சிரித்தார் அம்மாஞ்சி வாத்தியார்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே சாம்பசிவ சாஸ்திரியும் ஜப்பான் சாஸ்திரியும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

"ஆயுசு நூறு உங்களுக்கு! இப்பத்தான் பேசிக் கொண்டிருந்தோம் உங்களைப் பற்றி...எங்கே போயிட்

டீங்க ரெண்டு பேரும் இந்தக் கொட்டுகிற மழையிலே?'' என்று கேட்டார் கோபால் ராவ்.

''ஷாப்பிங்'' என்றார் பெருமையோடு சாம்பசிவம்.

''மழையில் துளிக்கூட நனையாமல் வந்திருக்கிறீர்களே, எப்படி?'' என்று கேட்டார் கோபால் ராவ்.

''ஜப்பான்லே மழையிலே நனையாமல் ஷாப்பிங் பண்ணுவதற்கு ஒரு வழி இருக்கு'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அதென்ன வழி?'' என்று கேட்டார் கோபால் ராவ்.

''அண்டர்கிரவுண்ட் வழிதான்! அண்டர்கிரவுண்ட்லே போயிட்டால் அங்கே எல்லாக் கடைகளுமே இருக்கு. மழையைப் பற்றிக் கவலையே இல்லே. எவ்வளவு மழை பெய்தாலும் துளித் தண்ணீர் வராது. அது மட்டுமா? நல்ல காற்று வேறே ஜிலுஜிலுன்னு வீசும். டிராபிக் இடைஞ்சல் இல்லாமல் நிம்மதியாக நடக்கலாம். இரைச்சல், சத்தம் எதுவும் கிடையாது'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''பொதுவா ஜப்பானிலேயே சத்தம் குறைச்சல் தானே!'' என்றார் கோபால் ராவ்.

''அண்டர்கிரவுண்ட்லே அதைவிடக் குறைச்சல்!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ஜப்பானில் தரைமட்டத்துக்கு மேல் ஒரு நகரம் இருக்கிறதென்றால் பாதாளத்தில் ஒரு நகரம் இருக்கு. இட நெருக்கடி; அகலக் கால் வைக்க முடியவில்லை. ஆழக்கால் வைத்திருக்கிறார்கள். பூமிக்கடியில் 'குடை குடை' என்று குடைந்து தள்ளியிருக்கிறார்கள்'' என்றார் கோபால் ராவ்.

''கோபால் ராவ் சார்! ஒரு பெரிய தமாஷ் நடந்து போச்சு. அது தெரியுமா உங்களுக்கு?'' என்றார் சாம்பசிவம் சிரித்துக்கொண்டு.

''என்ன அது?'' என்று ஆவலோடு விசாரித்தார் கோபால் ராவ்.

"ஒகூரா ஓட்டலுக்கு எனக்கு வழி தெரியும், 'சப்வே' வழியாப் போகலாம் வாங்கன்னு சொல்லி என்னை அழைச்சிண்டு போனார் இந்த ஜப்பான் சாஸ்திரி. ஒகூரா ஓட்டல் அகாஸாகாவிலே இருக்கு. அகாஸாகாவுக்கும் அஸாகுஸா வுக்கும் வித்தியாசம் தெரியாமல் அஸாகுஸாவுக்கு இரண்டு டிக்கெட் வாங்கிட்டார். அவன் அஸாகுஸாவிலே கொண்டு விட்டுட்டான்!"

"அப்புறம் என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சு! ஒகூரா ஓட்டலைத் தேடி அஸாகுஸா வெல்லாம் சுற்றி அலைஞ்சோம். அது எப்படிக் கிடைக்கும்? கடைசியா அங்கே ஒருத்தர், 'இது அஸாகுஸா ஏரியா. ஒகூரா ஓட்டல் அகாஸாகாவிலே இருக்கு' என்று சொன்னார். அப்புறம் அங்கிருந்து அகாஸாகாவுக்குப் போய் ஒகூரா ஓட்டலைக் கண்டு பிடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது."

"ஒகூரா ஓட்டலுக்கு எதுக்குப் போனீங்க?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"சமையல் வைத்தா அங்கேதானே தங்கியிருக்கான்? அவனிடமிருந்து பொடி வாங்கிண்டு வரப் போயிருந்தோம்...!"

"அதானே பார்த்தேன். அதுக்குத்தான் அவ்வளவு அவசரமாப் புறப்பட்டுப் போனீங்களா?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"நான் போனது மஞ்சள் பொடிக்கு. ஜப்பான் சாஸ்திரி என்னோடு வந்தது வேறே பொடிக்கு" என்று பொடி வைத்துப் பேசினார் சாம்பசிவம்.

"மஞ்சள் பொடி எதற்கு?" என்று கேட்டார் கோபால் ராவ்.

"நாளைக்குக் காலையில் தேர் வேலை தொடங்குவதற்கு முகூர்த்தம் பார்த்திருக்கிறோமே! அப்போது பிள்ளையார்

பூஜை செய்ய வேண்டாமா? பிள்ளையார் பிடிக்க மஞ்சள் பொடி வேண்டுமே!'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''காலையிலே வைத்தாவை வரச் சொல்லுவதுதானே? நாளைக்கே இங்கு சமையலை ஆரம்பிச்சுடலாமே!'' என்றார் கோபால் ராவ்.

''சொல்லாமல் இருப்போமா! ராத்திரியே கார் அனுப்பிக் கூட்டி வந்துவிட வேண்டியதுதான். ரெடியா இருக்கச் சொல்லிவிட்டு வந்திருக்கிறோம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அப்பம், எள்ளுருண்டை, வடை, சுண்டல், வெண் பொங்கல் இவ்வளவும் செய்யச் சொல்லியிருக்கேன். பிள்ளையாருக்கு நைவேத்தியம்'' என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

''அப்படியே கொஞ்சம் கொழுக்கட்டையும் செய்யச் சொல்லுங்க. பிள்ளையாருக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''பிள்ளையாருக்கா, உமக்கா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''பூஜைக்கு சக்கரவர்த்தியும் மகாராணியும் தங்கள் குடும்பத்தாருடன் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்'' என்றான் பஞ்சு.

''தேங்காய், சந்தனம், புஷ்பம், ஊதுவத்தி, சாம்பிராணி, வெற்றிலை பாக்கு சகலமும் வந்திருக்கு மெட்ராஸ்லேருந்து...'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''மாலை வந்திருக்கா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''பத்து ரோஜா மாலையும், ஒரு டஜன் மல்லிகைப் பூ மாலையும் ஸ்பெஷலாகக் கட்டி அனுப்பியிருக்கிறார்கள்'' என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

''பிள்ளையார் பூஜை முடிந்ததும் சக்கரவர்த்தி குடும்பத்தாருக்கு அந்த மாலைகளைப் போடணும்'' என்றார் கோபால் ராவ்.

''உதிரிப் பூக்கள் வேறு நாலு கூடை வந்திருக்காம். வாசனை ஒகூரா ஓட்டலையே தூக்கிண்டு போறது'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''தேரோட்டத்தன்று பூ மட்டும் ஒரு பிளேன் நிறைய வரப் போகிறது. அன்றைக்குப் பூ வாசனை ஜப்பானையே தூக்கிண்டு போகும் பாருங்கள்,' என்றான் பஞ்சு.

''அவ்வளவு பூவையும் என்ன செய்யப் போறீங்க?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''கின்ஸாவிலே தேர் ஓடுகிறபோது மேலே ஹெலி காப்டரிலிருந்து பூமாரியாப் பொழிவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்றான் பஞ்சு.

''ஆமாம், சக்கரவர்த்தி தேர் ஓட்டத்தை எங்கிருந்து பார்க்கப் போகிறார்? கூட்டம் நெருக்கித் தள்ளுமே?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''கின்ஸாவிலே ஒரு பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர் இருக்கு. அதன் மொட்டை மாடியிலே 'ஹெலிபோர்ட்'டே இருக்காம். சக்கரவர்த்தியும் அவர் குடும்பத்தாரும் அந்த மாடியிலே வந்து இறங்குவாங்க. அதே கட்டடத்திலே மூன்றாவது மாடி ஜன்னல் வழியாகத் தேர் ஓடுவதைப் பார்ப்பார்கள்'' என்றான் பஞ்சு.

''தேரை அப்படிப் பார்த்தால் மட்டும் போதாது. தெருக் கோடியில் திரும்புகிறபோது பார்க்கணும் அந்தக் காட்சியை!'' என்றார் கோபால் ராவ்.

''சரி, அதற்கும் ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்றான் பஞ்சு.

''ஆமாம், நாளைக்கு பூஜைக்கு பிரைம் மினிஸ்டர் வருகிறாரா? யார் யாருக்கு இன்விடேஷன் போட்டிருக்கீங்க?'' என்று கேட்டார் அம்மாஞ்சி வாத்தியார்.

''எல்லோருக்கும் போட்டிருக்கோம். பிரைம் மினிஸ்டர் அமெரிக்கா போயிருக்கிறார். திரும்பி வந்ததும், தேர்

வேலை நடக்கிறபோது இங்கே வந்து பார்ப்பதாகச் சொல்லி யிருக்கிறார்'' என்றான் பஞ்சு.

''ஒகூரா ஓட்டலில் இன்னொரு தமாஷ் நடந்ததே, அது தெரியுமா?'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அதென்ன?'' என்று பஞ்சுவும் கோபால் ராவும் ஆவலோடு கேட்டார்கள்.

''அந்த ஓட்டல் லௌஞ்சில் எங்களுக்காகக் காத் திருப்பதாகச் சொன்னான் என் மருமான். நானும் சாம்பசிவ சாஸ்திரியும் அங்கே போய்ப் பார்த்தோம். ஆனால் அவனைக் காணவில்லை.''

''அப்புறம்?...''

''ஒருவேளை இகிடாவுடன் எங்காவது ஊர் சுற்றப் போயிருப்பான் என்று எண்ணிக் கொண்டு அங்கேயே ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தோம். ஒரு மணி நேரம் கழித்து வந்தான் ரமேஷ்! வந்தவன், 'என்ன மாமா! இங்கே வந்து உட்கார்ந்திருக்கீங்க? இது ஐந்தாவது மாடி லௌஞ்ச் அல்லவா?' என்று கேட்டான்.

'ஏண்டா இந்த ஓட்டல்லே மொத்தம் எத்தனை லௌஞ்ச்?' என்று கேட்டேன். 'இரண்டு லௌஞ்ச். ஒண்ணு க்ரவுண்ட் ப்ளோர்லே இருக்கு. இன்னொன்று ஐந்தாவது மாடியிலே இருக்கு. இந்த ஓட்டல் ஒரு மலைச் சரிவிலே இருக்கு. அதனாலே பின்பக்கமாக ஒரு வழி. முன் பக்கமாக ஒரு வழி. முன்பக்க வழி கிரௌண்ட் ப்ளோருக்கு வந்து சேரும். பின் பக்க வழி உயரத்திலுள்ள ஐந்தாவது மாடிக்கு வந்து சேரும்' என்றான். எங்களுக்கு அப்புறம் தான் விஷயம் புரிந்தது!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''பூஜைக்கு நேரமாகிறது. எல்லாரும் வாங்க'' என்று பூஜை மணியை எடுத்து கிணு கிணுவென்று அடித் தார் சாம்பசிவ சாஸ்திரி. சமையல் கட்டில் தயாராகிக்

கொண்டிருந்த வெண் பொங்கலிலிருந்து வீசிய நெய் மணமும் முந்திரிப்பருப்பு வாசனையும் சாஸ்திரிகளின் மூக்குகளைத் துளைத்தன. அந்த வாசனையோடு ஊதுவத்தி வாசனையும் சேர்ந்து கொண்டபோது தமிழ்நாடே ஜப்பானுக்கு வந்துவிட்ட மாதிரி இருந்தது.

பூஜைக்கு, கார்டனிலுள்ள ஓர் அழகான இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

அம்மாஞ்சி வாத்தியார் பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள், பழங்கள், தேங்காய், கற்பூரம், வெற்றிலை பாக்கு, அருகம்புல், எருக்கம் பூமாலை, கரும்பு, சந்தனம், ஊதுவத்தி, சாம்பிராணி எல்லாவற்றையும் கொண்டு வந்து வைத்துவிட்டு, குத்துவிளக்குகளை ஏற்றுவதற்குத் தீப்பெட்டியைத் தேடினார். அதைக் கவனித்த யோஷினாரி தம் சட்டைப் பையிலிருந்த தீப் பெட்டியை எடுத்து அம்மாஞ்சியிடம் கொடுத்தார்.

''நீங்களே ஏற்றி விடுங்கள்; பரவாயில்லை'' என்றார் அம்மாஞ்சி.

யோஷினாரி தீக்குச்சியை எடுத்து ஜப்பானியர் வழக்கப்படி எதிர்த் திசையில் உரசினார்.

''விரல் விட்டு எண்ணும்போது கட்டை விரலிலிருந்து ஆரம்பிக்கிறாங்க. தீக்குச்சியை எதிர்த்திசையில் கிழிக்கிறாங்க'' என்று சொல்லிச் சிரித்தார் கோபால் ராவ்.

சமையல் வைத்தா பிரசாதங்களைக் கொண்டு வந்து வைத்தார்.

காரைக்குடி ஆசாரிகள், திருவாரூர் ஆசாரிகள், மலபார் ஆசாரிகள் எல்லாரும் ஸ்நானம் செய்து, விபூதி அணிந்து, சிவப்பழமாகப் பூஜைக்கு ஆஜராகியிருந்தார்கள்.

காலையில் எட்டு மணிக்கு முகூர்த்தம் வைத்திருந்தார்கள். குறித்த நேரத்துக்குள் எல்லோரும் வந்து சேர்ந்து

விட்டனர். பிரஸ் ரிப்போர்ட்டர்களையும் முக்கிய பிரமுகர்களையும் யோஷினோரி, ரமேஷ், இகிடா மூவரும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தார்கள்.

குறித்த நேரத்தில் சக்கரவர்த்தியும் அவரது குடும்பத்தினரும் வந்து அவர்களுக்காகப் போடப்பட்டிருந்த 'வெல்வெட்' ஆசனத்தில் அமர்ந்தனர். விநாயகர், நடராஜர் விக்ரகங்களின் அழகைக் கண்ட மகாராணி "பியூட்டிபுல் ஐடல்ஸ்!" என்று வியந்தார்.

"பூஜை ஆரம்பிக்கலாமா?" என்று சக்கரவர்த்தியின் முன் விநயத்தோடு குனிந்து கேட்டான் பஞ்சு. சக்கரவர்த்தி தலையசைத்தார்.

அம்மாஞ்சி மந்திரங்களைச் சொல்லி பூஜை செய்யத் தொடங்கினார். அடுத்தாற்போல் திருவாரூரிலிருந்து வந்திருந்த ஓதுவார் தமிழ்ப்பாடல் ஒன்றைக் கணீரென்ற குரலில் இனிமையாகப் பாடி முடித்தார்.

மஞ்சள் பொடியில் பிடித்து வைத்திருந்த பிள்ளையாரைப் பார்த்துவிட்டு, "அது என்ன?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"பிள்ளையார்" என்றான் பஞ்சு.

"அப்படியானால் விநாயகர் என்பது யார்?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"விநாயகர், பிள்ளையார், விக்னேசுவரர், கணபதி எல்லாப் பெயர்களும் ஒன்றேதான்" என்றான் பஞ்சு.

அடுத்தாற் போல் கணபதி ஸ்தபதியை சக்கரவர்த்திக்கு அறிமுகப்படுத்தினார் கோபால் ராவ்.

"கணபதி! ஸேம் நேம்!" என்றார் சக்கரவர்த்தி சிரித்துக்கொண்டே.

பூஜை முடிவுற்றதும், சாம்பசிவ சாஸ்திரிகள் பிள்ளையாருக்குச் சூறைக்காய் உடைத்தார். சூறைக்காய் உடைப்

பதன் தத்துவத்தை சக்கரவர்த்திக்கு விளக்கினார் கோபால் ராவ்.

கடைசியாக ரோஜா மாலைகளை எடுத்து சக்கரவர்த்தி, மகாராணி, சக்கரவர்த்தியின் குடும்பத்தினர் எல்லோருக்கும் அணிவித்தான் பஞ்சு. தேரோட்டத்தன்று சக்கரவர்த்திக்கு யானைகள் மாலை போடப் போகும் காட்சியை மனக் கண்ணால் பார்த்து மகிழ்ந்தார் கோபால் ராவ்.

கடைசி கடைசியாக எல்லோருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

''கொழுக்கட்டை ரொம்ப ருசியாயிருக்கிறது. வெரி ஸ்வீட். பூர்ணத்தை இதற்குள்ளே எப்படி வைத்தீர்கள்?'' என்று வியப்போடு கேட்டனர் சில நிருபர்கள்.

சமையல் வைத்தா நிருபர்களை சமையல்கட்டுக்கு அழைத்துச் சென்று கொழுக்கட்டை செய்யும் விதத்தைக் காட்டினார்.

''இதற்கே இப்படி ஆச்சரியப்படுகிறார்களே, இவர்கள்! காராபூந்தியைப் பார்த்தால், 'அத்தனை சின்ன காராபூந்திக்குள் எப்படி காற்றடைத்தீர்கள்?' என்று கேட்பார்கள் போலிருக்கிறது!'' என்றார் அம்மாஞ்சி.

'கருமருது, இரும்பகம்' என்ற இரண்டு மரங்களை எடுத்துத் தேர் வேலையை ஆரம்பித்து வைத்தார் காரைக்குடி ஆசாரி.

கணபதி ஸ்தபதி வள்ளுவர் சிலைக்காக வந்திருந்த பாறைக்கு மஞ்சள் பூசி, கற்பூரம் காட்டி, தேங்காய் உடைத்துவிட்டு, கல்லுளியை எடுத்துச் சிற்ப வேலையைத் தொடங்கினார்.

## 11

''அகாஸாகா ஏரியாவில் கெய்ஷாக்கள் நடமாட்டம் அதிகமாம்...'' என்ருர் சாம்பசிவம்.

''அங்கே கைரிக்ஷாக்கள் நடமாட்டமும் அதிகம்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''இந்த கெய்ஷாக்கள் கைரிக்ஷாக்களில் ஒய்யாரமாக ஏறி உட்கார்ந்து போகிற அழகே தனி'' என்ருர் சாம்பசிவம்.

''உலகத்திலேயே டோக்கியோவை ரொம்ப மாடர்ன் ஸிடி என்கிருர்கள். ஆனல் இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ள இந்நகரில் இன்னமும் கைரிக்ஷாக்கள் ஓடுவது ஆச்சரியமாயிருக்கிறது'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''அந்த விதத்தில் தமிழ்நாடு தேவலை. கைரிக்ஷாக்களை ஒழித்தாயிற்று!'' என்று பெருமைப்பட்டார் கோபால் ராவ்.

''இங்கே டிராம் வண்டிகள் கூட ஓடுகின்றன. அது தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''எவ்வளவு முன்னேறினலும் ஜப்பானியர் தங்களுடைய பழமைச் சின்னங்களை மறப்பதில்லை'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''அது மட்டுமல்ல. நன்றி பாராட்டுவதிலும் ஜப்பானியர்களை யாரும் மிஞ்சிவிட முடியாது. நம்மவர்கள் வள்ளுவர் குறளை மேற்கோள் காட்டி நன்றியைப் பற்றி வாய் கிழியப் பேசுவதோடு சரி. காரியத்தில் நேர்மாருக

நடந்து கொள்வார்கள். ஜப்பானியர் அப்படியில்லை. அவர்களுக்கு யாராவது ஒரு சின்ன உதவி செய்தாலும் அதைப் பெரிதாக மதித்து நன்றி பாராட்டத் தவற மாட்டார்கள். ஒரு நாய்க்குச் சிலை செய்து வைத்துள்ள நாடு இது'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் கோபால் ராவ்.

''அது இடத்தின் விசேஷம். ஏழுமலை வாசிகள் ஆயிற்றே!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அதென்ன ஏழுமலை?'' என்று ஆர்வத்தோடு கேட்டார் சாம்பசிவ சாஸ்திரி.

''திருப்பதி மாதிரி இந்த டோக்கியோவும் ஏழு மலைகள் மீது அமைந்துள்ளது. வாடிகன் ஸிடி இல்லையா? அதே மாதிரி!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அப்படியா! இத்தனை நாள் எனக்கு இது தெரியாதே! உமக்கு யார் சொன்னது?'' என்று கேட்டார் அம்மாஞ்சி வாத்தியார்.

''ஜப்பான் சாஸ்திரி என்று பெயர் வைத்துக்கொண்டு இது கூடத் தெரியாமல் இருக்கலாமா?'' என்றார் குள்ள சாஸ்திரி.

''நாய்க்குச் சிலை வைத்திருக்கிறார்களாமே, அதை நாம் போய்ப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி வாத்தியார்.

''இப்போது அங்கேதான் போகப் போகிறோம். கைவசம் பூ மாலைகள்கூட நிறைய இருக்கு. ஆளுக்கொரு மாலை எடுத்துக் கொண்டு போய் அந்த நாய்க்குப் போட்டு விட்டு வரலாம்'' என்றார் கோபால் ராவ்.

''நாய்க்கு மாலை போடுவதா! அது சரியாயிருக்குமா?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''அது நாய்க்குப் போடும் மாலை அல்ல. நன்றி உணர்வை மதித்துப் போடுகிற மாலை'' என்றார் கோபால் ராவ்.

"பஞ்சு ஸார்! அப்படியானால் இப்போதே போன் செய்து பிரஸ் போட்டோகிராபர்களை அங்கே வரச் சொல்லுங்க. நாம் மாலை போடுவதை அவர்கள் போட்டோ எடுத்துப் பத்திரிகைகளில் போடுவார்கள்" என்றார் அம்மாஞ்சி.

"நீர் என்ன அரசியல்வாதியா? இப்படி ஒரு பப்ளிஸிடி ஆசை வேண்டாம் உமக்கு!" என்றான் பஞ்சு.

"என் சொந்த பப்ளிஸிடிக்காகச் சொல்லவில்லை. நன்றி உணர்வுக்குத் தமிழர்கள் கொடுக்கும் மதிப்பு நாலு பேருக்குத் தெரியட்டுமே என்றுதான் சொல்கிறேன்" என்றார் அம்மாஞ்சி.

கோபால் ராவ், பஞ்சு, அம்மாஞ்சி, சாம்பசிவம், ஜப்பான் சாஸ்திரி ஐவரும் ஒரு காரில் ஏறிக் கொண்டு ஷிபுயா ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அந்த ஸ்டேஷன் வாசலில்தான் 'ஹச்சிக்கோ' என்ற நாய்க்குச் சிலை செய்து வைத்துள்ளார்கள்.

ஜப்பான் சாஸ்திரியைத் தவிர மற்ற நால்வரும் மாலைகளை அந்த நாயின் கழுத்தில் போட்டனர்.

நாய்ச்சிலை உயரத்தில் இருந்ததால் குள்ள சாஸ்திரிக்கு அது எட்டவில்லை. எனவே, அம்மாஞ்சியும் சாம்பசிவ சாஸ்திரியும் அவரைத் தூக்கிப் பிடித்துக் கொண்டார்கள். இந்த அபூர்வக் காட்சியைப் பத்திரிகை நிருபர்கள் போட்டோ எடுத்து அதன் கீழே A Short man from Tamil Nadu pays homage to Hachiko என்று செய்தியும் வெளியிட்டனர்.

"நாயின் முகத்தில் ஒரு சோகம் தெரிகிறதே, அந்த சோகபாவத்தை சிலையில் எப்படித்தான் கொண்டு வந்தார்களோ?" என்று வியந்தார் ஜப்பான் சாஸ்திரி.

"எதையோ பறி கொடுத்த மாதிரி ஒரு சோகம்!" என்று பரிதாபப்பட்டார் அம்மாஞ்சி வாத்தியார்.

"ஆமாம்; இந்த நாயின் எஜமானர் ஒரு புரொபஸர். அவர் 1925-ல் இறந்துவிட்டார். பாவம், இந்த நாய்க்கு அப்போது இரண்டரை வயதுகூட ஆகவில்லை" என்றார் கோபால் ராவ்.

"அது சரி; இந்த ஸ்டேஷனுக்கும் அந்த நாய்க்கும் என்ன சம்பந்தம்? இங்கே எதற்காக அதற்குச் சிலை செய்து வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"அந்த புரொபஸர் தினமும் இந்த ஸ்டேஷனுக்கு வந்துதான் ரயில் ஏறுவது வழக்கம். தினமும் காலையில் எட்டு மணிக்கு ரயில் ஏறி யூனிவர்ஸிடிக்குப் போவார். பிறகு மாலை ஐந்து மணிக்குத் திரும்பி வருவார். காலையில் அவரோடு ஸ்டேஷனுக்கு வரும் அந்த நாய் மாலையில் அவர் திரும்பி வரும் வரை இங்கேயே காத்துக் கிடக்கும்.

"ஒரு நாள் யூனிவர்ஸிடிக்குப் போன புரொபஸர் திரும்பி வரவேயில்லை. இதய நோய் காரணமாக யூனிவர்ஸிடியிலேயே இறந்து விட்டார். அவரை அங்கேயே அடக்கம் செய்து விட்டார்கள். அந்தச் செய்தியை நாய்க்குச் சொல்லுவார் ஒருவருமில்லை. எஜமானரைக் காணாத இந்த 'ஹச்சிகோ' ஸ்டேஷனிலேயே வெகுநேரம் வரை பட்டினியோடு காத்துக் கொண்டிருந்தது. பிறகு மிகுந்த சோகத்தோடு வீட்டுக்குத் திரும்பிச் சென்றது. மறு நாள் வழக்கம்போல் காலை எட்டு மணிக்கு ஸ்டேஷனுக்கு வந்து மீண்டும் ஐந்து மணி வரை காத்திருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பிச் சென்றது. இப்படியே பத்து வருட காலம் அது உயிரோடு உள்ள வரை வந்து போய்க் கொண்டிருந்தது. எஜமானரைப் பிரிந்த சோகம் தான் அதன் முகத்தில் தெரிகிறது. அதற்குத்தான் இங்கே சிலை வைத்திருக்கிறார்கள்" என்றார் கோபால் ராவ்.

"அடாடா, இப்படி ஒரு தேசமா?" என்று வியந்தார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''த்சொ! த்சொ!'' என்று அனுதாபத்துடன் ஒலி எழுப்பினார் அம்மாஞ்சி கண் கலங்கியபடி.

''ஜூலை பதினெட்டு தேரோட்டம். ஜூலை இருபத்தைந்து தெப்ப விழா. இரண்டுக்கும் டேட் பிக்ஸ் பண்ணியாச்சு'' என்று உற்சாகத்தோடு சொல்லிக் கொண்டு வந்தனர் அப்போது தான் டயட் ஆபீஸிலிருந்து வந்த பஞ்சுவும் கோபால் ராவும்.

''பேஷ்! பேஷ் இரண்டு நாளுமே ஸண்டே! ரொம்ப சௌகரியமாப் போச்சு'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''தேர் வேலை அதற்குள்ளே முடிந்து விடுமா?'' என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார் அம்மாஞ்சி.

''முடியாமல் என்ன? ஏற்கெனவே கால்வாசிக்கு மேல் முடிந்து விட்டதே!'' என்றான் பஞ்சு.

''கால்வாசியா? என் தலைவாசிக்கு வந்துவிட்டது!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''உம்ம தலை உயரம்னு ஐந்தடிதானே? அப்படியானால் சக்கரத்திலே பாதி அளவு கூட உயரவில்லை என்று அர்த்தம்'' என்று கேலி செய்தார் அம்மாஞ்சி.

''அது சரி, சக்கரம் யார் செய்யப் போகிறார்கள்?'' என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரி.

''திருச்சியிலிருந்தே செய்து வரப்போகிறது. திருவாரூர்த் தேர் போலவே ஸ்டீல் சக்கரம்'' என்றான் பஞ்சு.

''தேரிலுள்ள சிற்பங்கள்கூட திருவாரூர்த் தேரில் உள்ளபடியே இருக்குமா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''தத்ரூபம் அப்படியே இருக்கும். ஒவ்வொரு சிற்பத்தையும் தனித்தனியா போட்டோ எடுத்து வந்திருக்கிறார்கள். குரங்கு ஒன்று இன்னொரு குரங்குக்குப் பேன் பார்க்கிற மாதிரிகூட அந்தத் தேரில் ஒரு சிற்பம் இருக்கிறது'' என்றான் பஞ்சு.

''மகாபலிபுரத்திலே இருக்கிற மாதிரியா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி வாத்தியார்.

''இல்லை; இது வேறே மாதிரி. ரொம்பச் சின்னது. கவனிச்சுப் பார்த்தால்தான் தெரியும்'' என்றான் பஞ்சு.

''நாம் கூட 'தெப்போ-76' விழா ஞாபகமாக 'கீ செயின்' ஒன்று செய்ய ஏற்பாடு செய்யலாம். சந்தன மரத்தில் சின்ன அளவில் தேர் செய்து அந்தக் கீ செயினில் இணைத்து, முக்கியமானவர்களுக்கெல்லாம் கொடுக்கலாமே'' என்றார் கோபால் ராவ்.

''தேர் எவ்வளவு பெரிசு! அதைச் சந்தன மரத்தில் இத்தனூண்டு செய்து கொடுத்தால் நன்றாயிருக்குமா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''பெரிதாக இருப்பதைச் சிறிதாகச் செய்து பார்ப்பதில்தான் அழகு இருக்கு. பெரிய யானையைச் சின்ன சைஸில் செய்து பார்ப்பதிலும், சின்ன எறும்பைப் பெரிய சைஸில் செய்து பார்ப்பதிலும்தான் தமாஷே இருக்கு!'' என்றார் கோபால் ராவ்.

''அதுவும் நல்ல ஐடியாதான்'' என்றார் அம்மாஞ்சி.

''ஜூலை பதினெட்டு என்றால் நெருக்கத்தில் வந்து விட்டதே! இன்விடேஷன் போட வேண்டாமா?'' என்று கேட்டார் சாம்பசிவ சாஸ்திரி.

''ஓய்! இது ஜப்பான். எல்லாமே வேகத்திலே நடக்கும். நம்ம ஊர் பிரஸ் என்று நினைத்துவிட்டீரா?'' என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

''அது சரி, வடம் பிடித்து இழுக்கப் போகிறவர்கள், முட்டுக்கட்டை போடப் போகிறவர்கள், கொடி காட்டப் போகிறவர்கள், வெடி வைக்கப் போகிறவர்கள், நாதசுரக்காரர்கள், ஓதுவார்கள், பந்தல்காரர்கள், யானைக்காரர்கள், தேர் ஜோடனைக்காரர்கள், சமையல்காரர்கள் இவ்வளவு பேரையும் க்ரூப் க்ரூப்பாகப் பிரித்து ஒவ்வொரு

க்ரூப்புக்கும் ஒவ்வொரு கலரில் டிரஸ் தைத்துக் கொடுத்து விட வேண்டும்...'' என்றார் கோபால் ராவ்.

''இவர்கள் எல்லோரையும் கின்ஸா டோக்யோ ஓட்டலில் இறக்கி விடலாம். அதுதான் தேரோட்டம் நடக்கப் போகிற வீதிகளுக்குப் பக்கத்திலேயே இருக்கிறது...'' என்றான் பஞ்சு.

''யானைகளை எங்கே இறக்குவீர்கள்?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''யுயேனோ பார்க்கில் இறக்கி விடலாம். அங்கேதான் மியூஸியம் இருக்கிறது. மியூஸியம் பார்க்க வருகிறவர்கள் அப்படியே யானைகளையும் பார்க்கலாம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''சரி, இன்விடேஷன் எத்தனை பேருக்கு அனுப்பப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''ஒரு லட்சம் பேருக்கு. எல்லா நாடுகளுக்கும் அனுப்பப் போகிறோம். தெப்போ ஆபீஸில் நைட் அண்ட் டே இந்த வேலைதான் நடந்து கொண்டிருக்கிறது. விலாசங்கள் டைப் ஆகிக் கொண்டிருக்கின்றன'' என்றான் பஞ்சு.

''ஏற்கெனவே டோக்கியோ நகரத்தின் மக்கள் தொகை ஒரு கோடியே பத்து லட்சம். அத்துடன் இப்போது ஃப்ளோட்டிங் பாபுலேஷனும் சேர்ந்தால் ஜன நெருக்கம் தாங்காது'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''தெப்போவே ஃப்ளோட்டிங் ஃபெஸ்ட்டிவல் தானே?'' என்று ஜோக் அடித்தார் அம்மாஞ்சி.

''தேர் ஓடுகிறபோது வி. ஐ. பி.க்களை ஒரு வசதியான இடத்தில் உட்கார வைக்க வேண்டும். தேரோட்டம் நடக்கப் போகிற நாலு வீதிகளிலும் உள்ள மூலைக் கட்டடங்களைக் காலி செய்து அவர்களுக்கு ரிஸர்வ் செய்துவிட்டால்

தெரு முனைகளில் தேர் திரும்புகிற காட்சியை அவர்கள் சௌகரியமாகப் பார்க்க முடியும்'' என்றார் கோபால் ராவ்.

''இப்பவே டோக்கியோவிலே நம்மவங்க நடமாட்டம் அதிகமாகி விட்டது. தேரோட்டத்தன்று எப்படி இருக்கப் போகிறதோ?'' என்றார் அம்மாஞ்சி.

''லேடி வாலண்டியர்கள் ஆயிரம் பேர் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எல்லாம் ஜப்பானியப் பெண்கள். பட்டர்ஃப்ளைஸ் மாதிரி இருக்காங்க. அவ்வளவு பேரும் எக்ஸ்போ-70-யில் வேலை செய்து அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் டிரஸ் ஒன்றே போதும்; அவ்வளவு ஜோராயிருக்கு!'' என்றான் பஞ்சு.

''கூட்டத்தில் காணாமல் போகும் குழந்தைகளை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார் அம்மாஞ்சி.

''அதுவும் எக்ஸ்போ ஸெவண்டி மாதிரிதான். குழந்தைகளோடு வருகிறவர்கள் முதலில் கின்ஸாவிலுள்ள 'லாஸ்ட் சில்ட்ரன்' ஆபீஸுக்குப் போய் அங்கே கொடுக்கிற நம்பர்களை வாங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு நம்பர்கள் கொடுப்பார்கள். உதாரணமாக 1687-என்றால் அதே நம்பர் இரண்டு கொடுப்பார்கள். ஒன்றைக் குழந்தையின் முதுகிலோ அல்லது சட்டையிலோ ஒட்டிவிட வேண்டும். இன்னொன்றைக் குழந்தையின் பெற்றோர் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும். கூட்டத்தில் குழந்தை காணாமல் போய்விட்டால் அந்தக் குழந்தையை வாலண்டியர்கள் லாஸ்ட் சில்ட்ரன் ஆபீஸில் கொண்டு விட்டுவிடுவார்கள். குழந்தைகளுக்கு அங்கே விளையாட்டுப் பொம்மைகள் இருக்கும். ஓடி விளையாட பார்க் இருக்கும். சாப்பிடுவதற்கு சாக்லெட், ஐஸ் க்ரீம் எல்லாம் கொடுப்பார்கள். பெற்றோர்கள் கவலைப்படவே வேண்டாம். தங்களிடமுள்ள நம்பரைக் கொண்டுபோய் அங்கே காட்டினால் உடனே

அதே நம்பருள்ள குழந்தையைக் கொண்டு வந்து அவர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள்'' என்றான் பஞ்சு.

''அடாடா! பிரமாத ஏற்பாடு! எனக்குக்கூட ஒரு குழந்தையா மாறி காணாமல் போகணும்போல ஆசையாயிருக்கு!'' என்றார் சாம்பசிவம்.

''காணாமல் போவதில் நீர் ஏற்கெனவே எக்ஸ்பர்ட் ஆயிற்றே! உமக்கும் ஒரு நம்பர் வாங்கி உம் முதுகில் ஒட்டி வைக்க வேண்டியதுதான்'' என்றார் அம்மாஞ்சி.

''கோபால் ராவ்! வாங்க, வாங்க! விமானம் வருகிற நேரமாச்சு. ஏர் போர்ட்டுக்குப் போவோம். தேர் ஜோடனைக்காரர்கள், பந்தல்காரர்கள், ரங்கோலி சாந்தா நாராயணன் எல்லாரும் வராங்களாம். அவர்களை அழைத்து வந்துவிடுவோம்'' என்றான் பஞ்சு.

''இதற்கு நீங்கள் போவானேன்? ரமேஷையும் இகிடாவையும் அனுப்புங்கள், போதும்'' என்றார் அம்மாஞ்சி.

## 12

"இது டோக்கியோவா அல்லது தமிழ்நாடா என்று அடையாளமே தெரியாமல் மாறிப் போச்சு! எங்கே, எந்த இடத்தில் பார்த்தாலும், நம்மவர்கள்தான் கண்ணில் தென் படுகிருர்கள். இப்பவே இப்படி இருந்தால் பதினெட்டாம் தேதி எப்படி இருக்குமோ?" என்று வியந்தார் அம்மாஞ்சி.

"மெட்ராஸுக்கும், டோக்கியோவுக்கும் ஒரு வித்தியாசம்தான். இங்கே எருமை மாடு, சினிமா போஸ்டர் இதெல்லாம் இல்லே!" என்ருர் சாம்பசிவம்.

"இந்த ஊர் மக்கள் நம் ஊர் மாதிரி நடுரோடில் நடப்பதும் இல்லே. நம் ஊரில் ஹார்ன் அடிச்சாக்கூட ஒதுங்க மாட்டாங்களே" என்ருர் அம்மாஞ்சி.

"எருமைப்பால் காப்பி சாப்பிடுகிறவர்கள் குணம் வேறு எப்படி இருக்கும்? ரோடிலே நடக்கும் போதும் அந்த குணம்தானே வரும்?" என்ருர் குள்ள சாஸ்திரி.

"பஞ்சு ஸாரையும், கோபால் ராவையும் எங்கே காணும் காலையிலிருந்து?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"அவங்க ரெண்டு பேரும் தெப்போ ஆபீஸுக்குப் போயிருக்காங்க. அங்கே பெரிசா தஞ்சாவூர் பாணியிலே பந்தல் போட்டு, வாழை மரம், தேர்த் தொம்பை எல்லாம் கட்டி வைத்திருக்கிருர்களாம். சாந்தா நாராயணன் பார்ட்டி தெப்போ வாசல் பூராவும் ரங்கோலி கோலம் போட்டுக் கொண்டிருக்கிருர்களாம். அதை வேடிக்கை பார்க்க ஏராளமான கூட்டமாம்! சக்கரவர்த்தி பிறந்த

நாளன்று பாலெஸ் வாசலில் கூடுமே, அந்த மாதிரி கூட்டமாம்’’ என்றார் சாம்பசிவம்.

‘‘ரங்கோலி ரொம்ப அழகாயிருக்குமே! நம் நாட்டுக் கலைகளில் அதுவும் ஒன்று. என்ன கோலம் போட்டிருக்காங்களாம்?’’ என்று கேட்டார் அம்மாஞ்சி.

‘‘திருவாரூர்த் தேர். பூம்புகார், வள்ளுவர் கோட்டம், மாமல்லபுரம் கற்கோயில், வள்ளுவர் உருவம், நடராஜர் உருவம், விநாயகர் உருவம் இவ்வளவும் போட்டிருக்காங்களாம்’’ என்றார் சாம்பசிவம்.

‘‘அது சரி, இன்னும் எட்டே நாள்தானே இருக்கு? தேர் வேலை அதற்குள்ளே முடிந்து விடுமா?’’ என்று கேட்டார் அம்மாஞ்சி.

‘‘அநேகமாக முடிஞ்ச மாதிரிதான். எத்தனை ஆசாரிகள்? எத்தனை ஸ்தபதிகள்! ராத்திரியெல்லாம் வேலை நடக்கிறதே...’’ என்றார் சாம்பசிவம்.

‘‘எனக்கென்னவோ வள்ளுவர் சிலையைப் பற்றித்தான் கவலையாயிருக்கு...’’ என்றார் அம்மாஞ்சி.

‘‘கணபதி ஸ்தபதி கையிலே ஒரு காரியத்தை ஒப்படைத்தாச்சுன்னு அப்புறம் அதைப்பற்றிய கவலையே வேண்டாம் நமக்கு. பதினெட்டாம் தேதிக்குள் சிலை தயாராயிடும்...’’ என்றார் சாம்பசிவம்.

‘‘எப்படி முடியப்போகிறதோ, இன்னும் சிலைக்குத் தலையே தெரியலையாம்!’’ என்று பெருமூச்சு விட்டார் அம்மாஞ்சி.

‘‘ஆமாம், சிலை உருவாகிற இடத்தைச் சுற்றித் திரை போட்டு மறைத்துக் கொண்டு வேலை செய்யறாங்க. நான் மெதுவாக எட்டிப் பார்த்தேன். ‘இங்கே பதினேழாம் தேதி வரை யாருமே தலைகாட்டக் கூடாது’ என்று சொல்லி விட்டார் கணபதி ஸ்தபதி. பேசாமல் திரும்பி வந்துட்டேன்’’ என்றார் சாம்பசிவம்.

"ஒரு வேளை பதினேழாம் தேதிக்குள் வள்ளுவர் சிலை முடியல்லேன்னு என்ன செய்வது?" என்று கவலைப் பட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"நம்ம சாம்பசிவ சாஸ்திரிக்கு வள்ளுவர் வேஷம் போட்டு தேருக்குள்ளே உட்கார வைத்துவிட வேண்டியது தான்" என்றார் அம்மாஞ்சி.

"வேஷம் ரொம்பப் பொருத்தமாயிருக்கும் அவருக்கு! வள்ளுவரே உயிர் பெற்று எழுந்து வந்த மாதிரி இருக்கும்..." என்றார் குள்ள சாஸ்திரி.

"இங்கே நடக்கிற ஏற்பாடுகளைப் பார்த்தால் வள்ளுவரே நேரில் வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை" என்றார் அம்மாஞ்சி.

"பாவம்! கோபால்ராவும் பஞ்சுவும் தூங்கி நாலு நாள் ஆச்சு. அவங்க ரெண்டு பேரும் இல்லேன்னு தேரோட்டமே இல்லை. வெளிநாட்டிலிருந்து தேர் பார்க்க வருகிறவர் வசதிக்காக டோக்கியோ பூராவும் கய்டுகளை நிறுத்தி வைக்கப் போகிறார்களாம். அதைத் தவிர அங்கங்கே மூலை முடுக்கெல்லாம் போர்டுகள் எழுதி வைச்சிருக்காங்களாம். முக்கியமான குறிப்புகளெல்லாம் அவற்றில் இருக்குமாம்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பதினெட்டாம் தேதி கின்ஸாவில் தேரோட்டம் நடக்கிறபோது தெருக்களில் கார்களே போகக் கூடாதுன்னு உத்தரவு போடச் சொல்லணும்" என்றார் அம்மாஞ்சி.

"ஏற்கனவே ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கே கார்களை அனுமதிப்பதில்லை. அன்று முழுதும் மக்கள் கின்ஸாவில் 'ஃப்ரீ'யாக நடந்து போய் ஷாப்பிங் செய்வதற்காக இந்த ஏற்பாடு. பதினெட்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமைதான். அதனால் கவலையில்லை. அன்றைக்கு நம்ம ஸௌத் இண்டியன் டெம்பிள் கார் மட்டும்தான் கின்ஸாவில் ஓடும்..." என்றார் ஜப்பான் சாஸ்திரி.

**அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.**

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய அ எழுத்தைத் தமக்கு முதலாக உடையன. அது போல் உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக உடைத்து.

**உருவகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்
தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.**

உருளுகின்ற பெரிய தேருக்கு, அச்சில் அமைந்து தாங்கும் சிறு ஆணி போன்ற வினைத் திட்பம் உடையாரும் உலகத்தில் உள்ளனர். ஆதலால், அச்சாணி போன்ற அவர்களின் உருவச் சிறுமையைக் கண்டு இகழாதிருக்கக் கடவர்.

**கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து**

நிலத்தில் ஓடும் வலிமை பொருந்திய உருளைகளை உடைய பெரிய தேர்கள் கடலில் ஓடமாட்டா. அக்கடலில் ஓடும் மரக்கலங்களும் நிலத்தில் ஓடமாட்டா.

**தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.**

ஆராயாமல் ஒருவனைத் தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவனிடம் ஐயங்கொள்ளுதலும், நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

"அகஸ்தியர் மாதிரி இருந்து கொண்டு ஜப்பானையே கரைத்துக் குடித்திருக்கிறீர் நீர்" என்றார் சாம்பசிவம்.

"சரி, தேருக்கு நாலு பக்கத்திலும் நாலு குறள் எழுதி வாங்கி அனுப்பச் சொன்னோமே, அது என்ன ஆயிற்று?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"பாப்ஜியா, கொக்கா? எமகாதகனாச்சே. விடுவானா? குறளோவியம் ஆசிரியரையே நேரில் போய்ப் பார்த்து அவர் கையாலேயே நாலு குறள் எழுதி வாங்கி அனுப்பி விட்டான். நாலும் நாலு மணியான குறள். அதிலே வேடிக்கை என்னவென்றால் அவற்றில் இரண்டு குறள் தேர் சம்பந்தப் பட்டதாகவே அமைந்துவிட்டது. அந்த நாலு குறளில் 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்ற குறளும் ஒன்று" என்றார் சாம்பசிவம்.

"அந்த முதல் குறளை வள்ளுவர் கோட்டத்தின் பிரதான வாயிலில் கூட எழுதி வைத்திருக்கலாம்" என்று ஒரு யோசனையை வெளியிட்டார் அம்மாஞ்சி.

"அந்தக் குறையை இங்கே தீர்த்து விட்டால் போச்சு" என்றார் சாம்பசிவம்.

"அந்த நாலு குறளையும் தேர் மீது எப்படி எழுதி வைப்பாங்க?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"நியான் விளக்கு எழுத்துக்களில் ஜப்பானை மிஞ்சுவதற்கு உலகத்திலேயே ஆள் கிடையாது. அடாடா, கின்ஸாவிலே நம்ம தேர் மீது அந்தக் குறள் நாலும் கண் சிமிட்டுகிறபோது அந்த அழகைப் பார்க்கக் கொடுத்து வைக்கணும்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"கலைஞர் எப்போது வருகிறாராம்?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"முதல் நாளே வந்துவிடுகிறார். வள்ளுவருக்கு அவரைப் போல் பெருமை செய்தவங்க வேறு யார் இருக்காங்க?

குறளோவியம், வள்ளுவர் கோட்டம் இந்த இரண்டும் போதுமே!'' என்றார் அம்மாஞ்சி.

''அது சரி, வி. எஸ். டி. எப்ப வருகிறார் தெரியுமா?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''இரண்டு நாள் முன்னதாகவே வந்து விடுகிறார்'' என்றார் அம்மாஞ்சி.

''அவர் வந்த பிறகுதான் விழா ஏற்பாட்டுக்கு 'ஃபைனல் டச்சஸ்' கொடுக்க முடியும். அவர் ஒருத்தர் தான் தேர் நாலு வீதிகளையும் சுற்றி நிலைக்கு வருகிறவரை கூடவே இருந்து டைரக்ட் பண்ணுவார்''. என்றார் சாம்பசிவம்.

''பாவம்! பஞ்சுவும் கோபால் ராவும் நாலு நாளா நின்ற இடத்திலே நிற்கல்லே, காலில் சக்கரத்தைப் பூட்டிக் கொண்டு சுத்தறாங்க.'' என்றார் அம்மாஞ்சி.

''சக்கரம் என்றதும் ஞாபகம் வருகிறது. தேர்ச் சக்கரங்கள் எப்போது வருகிறதாம்?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''அதெல்லாம் நேற்றே வந்துவிட்டன. தேர் வேலையும் முடிஞ்ச மாதிரிதான். அலங்கார வேலைதான் கொஞ்சம் பாக்கியிருக்கு. அதுவும் இன்றைக்குள் முடிந்து விடும்!'' என்றார் குள்ள சாஸ்திரி.

''நாம் போய் முழுத் தேரையும் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''அரண்மனை வாசல் பக்கமே நாம் யாரும் இப்போ தலைகாட்ட முடியாது. தேரைப் பார்க்க அங்கே ஒரு பெரிய ஜன சமுத்திரமே அலை மோதிக்கொண்டு நிற்கிறது. அடேயப்பா, எவ்வளவு டெலிவிஷன் காமிரா வந்திருக்கு தெரியுமா?''

''டெலிவிஷன்லே நம்ம தலை தெரிய வேண்டாமா? நாம் போய்த் தேர் மேலே நிற்கலாமே'' என்றார் அம்மாஞ்சி.

"உமக்கு ஏன் இப்படி ஒரு அல்ப ஆசை! தேரிலே உள்ள சிற்பங்களைப் படம் எடுப்பாங்களா? உம்ம தலையைப் படம் எடுப்பாங்களா?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"விருந்தோம்பும் பண்பில் தமிழ் மக்களையும் மிஞ்சி விடுவார்களோ இந்த ஜப்பானியர்?" என்று ஐயுறும் அளவுக்கு இந்த டோக்கியோ நகரம் எழுச்சியுற்று நிற்கிறது..." என்று ஜப்பான் சாஸ்திரி தீந்தமிழில் உணர்ச்சியோடு கூறினார்.

"நல்ல தமிழ்ப் பேச்சு கேட்டு ரொம்ப நாளாயிற்று. தேரோட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசப் போகும் கலைஞர் பேச்சைக் கேட்கப் பல்லாயிரம் மக்கள் ஆவலோடு காத்திருக்காங்க!" என்றார் அம்மாஞ்சி.

"கின்ஸா மெயின் வீதி முனையில் மேடை அமைத்து ஒலிபெருக்கி ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறார்களாம். அந்தப் பந்தலுக்கு முன்னால்தான் தேரோட்டம் தொடங்கப் போகிறதாம்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"பேஷ் பேஷ்! கலைஞரின் தமிழ் முழக்கம் தெருவெல்லாம் கேட்கப் போகிறதென்று சொல்லுங்கள்" என்று உற்சாகத்தோடு கூறினார் சாம்பசிவம்.

"முதலில் கலைஞரின் தமிழ் முழக்கம். அப்புறம் நாதசுர முழக்கம். அப்புறம் வெடி முழக்கம். டோக்கியோவே அல்லோலகல்லோலப் படப்போகிறது" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"விழாவில் நம்ம ஜப்பான் சாஸ்திரியும் நாலு வார்த்தை பேசட்டும். அவருக்கும்தான் நன்றாகப் பேச வருகிறதே!" என்றார் அம்மாஞ்சி.

# Greetings from the Governor

On the occasion of your arrival in this capital I feel it my happy duty to extend, on behalf of the ten million people of Tokyo, my warmest greetings to all visitors from abroad.

As you are aware, Tokyo being the political, economic and cultural centre of Japan, has a population of one tenth of the entire population of the nation, with the majority engaged in various trades and industries.

Tokyo is a place in which important international conferences. conventions and seminars of world-wide scale, as well as various international sports meets of similar magnitude have been held one after the other in recent years.

Theppo-76, (the South Indian Temple Car Festival), as you know is taking place on the 18th of this month here in our city. This is a significant milestone in the cultural history of our city and the country.

Despite the fact that this cosmopolitan city is equipped with all the up-to-date cultural facilities aud accommodations, which modern cities are supposed to have, Tokyo still retains many time honored traditions, as well as ancient cultural assets—characteristics of the Orient and conventional Japan.

I am proud of my city in the thought that foreign vitsitors to Tokyo will not only highly appreciate all the ancient relics and other inheritance which Tokyo has kept from olden times, but will be deeply inspired by the deepness, elegance and other colorful qualities which are inherent in them.

I feel certain that you will also be interested in various other aspects of Tokyo, such as the research institutes, sightseeing assets and numerous entertainment facilities, etc.

In addition to reiterating my heartiest welcome to all of you for coming all the way to Tokyo. I most ardently hope that each of you will find your stay here an enjoyable one.

Governor of Tokyo,
Metropolis.

## 13

பொழுது விடிந்தால் தேரோட்டம். கின்ஸா வீதிகள் நான்கும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தன. முதல் நாள் இரவே தேரோடப் போகும் அந்த நாலு தெருக்களி லும் வண்டிப் போக்குவரத்தைத் தடை செய்து விட்டிருந்த னர். டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களுக்கு விடுமுறை அளித்து விட்டனர். 'தெப்போ சின்னம்' அணிந்த தொண்டர் களும் 'I Speak English' என்ற எழுத்துக்களைச் சட்டையில் அணிந்திருந்த பெண் கய்டுகளும் தெருவெங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

மெயின் ஸ்ட்ரீட் முனையில் நிறுத்தப்பட்டிருந்த தேரைச் சுற்றிலும் பலத்த பந்தோபஸ்து போடப்பட்டிருந் தது. தொம்பைகள் கட்டி முடிந்தால் தேர் வேலை முழுதும் முடிந்த மாதிரிதான்!

சிலர் தண்ணீர் இறைக்கும் மோட்டார் வண்டிகளைக் கொண்டு வந்து தெருவெங்கும் கழுவி விட்டு ஏற்கெனவே சுத்தமாயிருந்த வீதிகளை மேலும் சுத்தப்படுத்தி விட்டுப் போனார்கள். அதைத் தொடர்ந்து சாந்தா நாராயணன் குழுவினர் இரவு முழுவதும் அந்த வீதிகளில் வண்ணக் கோலங்களைப் போட்டு முடித்தனர்.

டெலிவிஷன்காரர்களுக்கும், வெளிநாட்டுப் பத்தி ரிகை போட்டோக்காரர்களுக்கும் வசதியாக அங்கங்கே இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் யோஷி ஹரி.

# THEPPO-76
## INAUGURATION CEREMONY
### Programme

Time : 8-30 A.M.
Date : July 18, 1976
Place : Ginza

| | | |
|---|---|---|
| 1. | 8-30 A.M. | Nadaswaram by : Namagiripettai Krishnan<br>Thavil—Valayapatti |
| 2. | 9-00 | Entrance of Their Majesties, the Emperor and Empress, Their Imperial Highnesses, the Crown Prince and Princess and other members of the Imperial Family. |
| 3. | 9-05 | Prayer by : Sirkazhi Govindarajan |
| 4. | 9-08 | Singing of "KIMIGAYO", the Japanese National anthem. |
| 5. | 9-10 | Raising of the Flag of Japan. |
| 6. | 9-12 | Raising of the Flag of Theppo-76. |
| 7. | 9-14 | Welcome Address by the President of the Japan Association for Theppo-76 |
| 8. | 9-26 | Address and Release of Theppo-76 stamp by the Prime Minister of Japan |
| 9. | 9-38 | Inauguration of THEPPO-76 by Kalaignar M. Karunanidhi. |
| 10. | 9-50 | Fanfare, Athirvedi, fireworks, balloons. |
| 11. | 10-00 | Vote of thanks by Japan Sastry |
| 12. | 10-05 | Vadampidithal and departure of Their Majesties, the Emperor and Empress, Their Highnesses, the Crown Prince and Princess and other members of the Imperial Family. |

புகழ்பெற்ற மிக்கிமாட்டோ அலுவலக வாசலில் முத்துப் பல்லக்கு ஜோடனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேருக்கு முன்னால் பவனி வரப்போகும் அந்தப் பல்லக்கைச் சுற்றிப் பெரும் கூட்டம் சூழ்ந்திருந்தது.

பஞ்சுவும் கோபால் ராவும் பம்பரமாய்ச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தார்கள்.

"பாவம் பஞ்சு! இன்றெல்லாம் சாப்பிடவில்லை. 'க்ளீன் ஃபாஸ்ட்'" என்றார் அம்மாஞ்சி.

"அப்படீன்னா?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"சுத்தப் பட்டினி என்று அர்த்தம்" என்றார் அம்மாஞ்சி.

"எப்பவுமே பஞ்சு ஸார் ரொம்ப க்ளீன். அத்தோடு இப்ப வேகமும் சேர்ந்து விட்டது. அதனாலே சுத்தமாகவும் வேகமாகவும் இருக்கிறார் என்பதைத்தான் 'க்ளீன் ஃபாஸ்ட்' என்று சொன்னீர்களோ என எண்ணிக் கொண்டேன்" என்றார் சாம்பசிவம்.

தேருக்குப் பக்கத்திலேயே மேடை அமைத்து ஷாமியானா போடுவதில் முனைந்திருந்தார் கோபால் ராவ். சக்கரவர்த்தி குடும்பத்தினர், ஜப்பான் தேசத்துப் பிரதமர், குறளோவியம் ஆசிரியர் கலைஞர், மற்ற முக்கிய விருந்தினர்கள் எல்லோருடைய பெயர்களையும் எழுதி, யார் யார் எங்கெங்கே உட்காருவது என்பதைத் தீர்மானித்து, அவ்வளவு பேருக்கும் நாற்காலிகள் போட்டு அவரவர்களுக்குரிய ஆசனத்தில் அவரவர் பெயர்களையும் ஒட்டி விட்டார் கோபால் ராவ்.

பூமாலைகளை யார் எடுத்துக் கொடுக்க வேண்டும், யார் யாருக்கு யார் யார் மாலை போட வேண்டும் என்பது போன்ற நுணுக்கமான விவரங்களைக்கூட யோசித்து வைத்திருந்தார் அவர்.

வி. ஐ. பி-க்களும் விசேஷ விருந்தினர்களும் உட்காருவதற்கு ஷாமியானாவுக்குப் பக்கத்திலேயே இடம் போடப்

பட்டிருந்தது. தொடக்க விழா நிகழ்ச்சி முடிந்ததும் சக்கர வர்த்தி அவர்களைத் தேருக்கு முன்னால் அழைத்துச் சென்று சூரைக்காய் உடைப்பதற்கான வழிவகைகளைச் செய்து வைக்கவும் தவறவில்லை அவர்.

"டோக்கியோ நகரையே தமிழர்கள் குத்தகைக்கு எடுத்த மாதிரி இருக்கு" என்றார் சாம்பசிவம்.

"கூட்டம்தான் தாங்காது போலிருக்கு" என்றார் அம்மாஞ்சி.

"ஓட்டல்களில் இடமில்லாமல் பல பேர் ஸ்டேஷன் களிலும் பார்க்குகளிலும் படுத்துத் தூங்கினார்களாம், பாவம்!" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"நம்மவர்கள் எங்கே போனாலும் வெற்றிலையைப் போட்டுத் துப்பிவிடுவார்கள். அதை நினைத்தால்தான் சங்கடமாயிருக்கு" என்றார் சாம்பசிவம்.

"வெற்றிலை, புகையிலை, வாழைப்பழம், மாம்பழம் இவற்றை யார் கொண்டு வந்தாலும் அனுமதிக்க வேண்டா மென்று பஞ்சு ஸார் ஏர்போர்ட்டில் சொல்லி வைத்துவிட் டாராம். தொல்லை விட்டது!" என்றார் அம்மாஞ்சி.

"கலைஞர் எங்கே தங்கியிருக்கிறாராம்?" என்று கேட் டார் ஜப்பான் சாஸ்திரி.

"அரண்மனை கஸ்ட் ஹவுஸில் தான். இனுகுரேஷன் ஸ்பீச்சைக் கூட எழுதி அச்சிட்டுக் கொண்டு வந்து விட்டா ராமே" என்றார் அம்மாஞ்சி.

"தேருக்கு நாலு புறத்திலும் நாலு குறளை எழுதி வைத்தாயிற்றா?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"நாலு குறளும் நியான் ஸைன்லே ஜம்மென்று ஜொலித்துக் கொண்டிருக்கிறதே பார்க்கவில்லையா?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"தேரும் வள்ளுவர் சிலையும் அற்புதமாக அமைஞ்சு போச்சு" என்று பெருமைப்பட்டார் அம்மாஞ்சி.

‘‘முத்துப் பல்லக்கையும் நடராஜர் விக்கிரகத்தையும் இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்’’ என்றார் சாம்பசிவ சாஸ்திரி.

‘‘அவ்வளவும் அசல் முத்துக்கள்! பல்லக்கு ரொம்பக் காஸ்ட்லி’’ என்றார் அம்மாஞ்சி.

‘‘ஜப்பானில் முத்துக்கு என்ன பஞ்சம்? நமக்கு தர்ப்பைப் புல் மாதிரி’’ என்றார் சாம்பசிவம்.

‘‘முத்துக்களின் அழகு வேறு எதற்கும் வராது. அடக்கமா, அழகா, அமைதியா அளவோடு ஒளி வீசுவதைப் பார்க்கும்போது நிறைகுடமாக, பெருந்தன்மையாக உள்ள பெரிய மனிதர்களைப் பார்க்கிற மாதிரி இருக்கிறது’’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.


‘‘கூட்டத்தையும் நெரிசலையும் எப்படிச் சமாளிக்கப் போகிறார்களோ? அதுதான் கவலையாயிருக்கு’’ என்றார் அம்மாஞ்சி.

‘‘எக்ஸ்போ நடந்தபோதும், ஒலிம்பிக் நடந்த போதும் கூட முதலில் இப்படித்தான் பயந்தார்களாம். கடைசியில் எல்லாமே கச்சிதமாக நடந்து போச்சாம். அது மாதிரி இதுவும் நடந்து விடும். கவலையை விடுங்கோ. எல்லாவற்றையும் கம்ப்யூட்டரிலேயே கண்ட்ரோல் செய்யக்கூடிய கண்ட்ரியாச்சே இது’’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.

மறு நாள் காலை குறித்த நேரத்தில் விழா ஆரம்பமாகி விட்டது. மாடிகள், மொட்டை மாடிகள் எங்கு பார்த்தாலும் ஒரே தலைமயமாகத் தெரிந்தன.

தமிழர்களும், ஜப்பானியரும் வெளி நாட்டவரும் கங்கையும், யமுனையும் சரஸ்வதியும் கலக்கும் திரிவேணி போல் கின்ஸாவில் சங்கமம் ஆகியிருந்தார்கள்.

மணி எட்டரைக்கு நாமகிரிப்பேட்டை நாதஸ்வரத்துடன் தொடங்கிய விழா ஜப்பான் சாஸ்திரியின் நன்றி



ஜப்பான் ஓவர்சிஸ்
ரேடியோ அண்ட்
பாங்க் ஆஃப் ஜப்பான்
டோக்கியோ டிரேட் சென்ட்டர்
டிரான்ஸ்போர்ட்டேஷன் மினிஸ்ட்ரி
டோக்கியோ சென்ட்ரல் ஸ்டேஷன்
சென்ட்ரல் போஸ்ட் ஆபீஸ்
இம்பீரியல் பாலெஸ்
கவர்ன்மென்ட் ஆபிஸ்
நேஷனல் மியூசியம்
இம்பீரியல் தியேட்டர்
கின்ஸா ஏரியா
கின்ஸா சர்ச்
மட்ஸ்யா
மிட்ஸுகோஷி
சாம்பசிவ சாஸ்திரி காணாமல் போன இடம்
கபுகிஸா தியேட்டர்
ஹோட்டல் ஒகூரா
இம்பீரியல் ஒட்டல்
டோக்கியோ டவர்
கின்ஸா டோக்யு ஒட்டல்
கின்ஸா ஏரியா
ஷிம்பாஷிஎம்புஜோ
டோக்கியோ கின்ஸா ஏரியாவில் தேரோட்டம் நடக்கப் போகும் இடம்

உரை முடியும்வரை எல்லாமே நிகழ்ச்சி நிரலில் கண்டபடி டக் டக்கென்று குறித்த நேரத்தில் நடந்து முடிந்தன.

சிவப்பு வட்டச் சூரியன் (ஹி–ஞே மாரு) உருவத்தைச் சின்னமாகக் கொண்ட தேசியக் கொடியை ஏற்றி வைத்த சக்கரவர்த்தி ஹிராஹிடோ அவர்கள் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளே பேசினார்:

"இந்தத் தொப்போ-76-விழாவை டோக்கியோவில் ஏற்பாடு செய்தவர்களைப் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டின் கலைப்பொக்கிஷமாகத் திகழும் திருவாரூர்த் தேரையும், தமிழ்மறை என்று போற்றப்படும் திருக்குறளை இயற்றிய வள்ளுவரின் சிலையையும் இங்கேயே செய்து இங்கேயே விழாவும் நடத்திக் காட்ட வந்துள்ள உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

"சிவப்பு வட்டச் சூரியன் சின்னம் இந்த நாட்டின் மிகப் பழமையான சின்னம் என்பதை நீங்கள் அறிவீர்கள். கீழ்த்திசை நாடுகளின் கீழ்க்கோடியிலுள்ள ஜப்பான் நாட்டில் உதிக்கும் சூரியன்தான் உங்கள் தேசத்துக்கு வருகிறான். ஆகவே உங்களோடு உறவுக்கு வருவது, அதாவது சூரியன் மூலமாக உறவுக்குக் கைகொடுப்பது நாங்கள் தான். பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்து இந்த நாட்டின் சின்னமாகத் திகழ்ந்துவரும் சிவப்பு வட்டச் சூரியன் உருவத்தைத் தேசியக் கொடியில் பதித்து அதிகார பூர்வமாகப் பறக்கவிட்டது 1870-ல்தான்.

"பின்னர் 1872–ல் அதையே தேசியக் கொடியாக்கி ஜப்பானில் முதல் முதலாக ரயில் ஓடத் தொடங்கியபோது, அதாவது முதல் ரயிலோட்டத்தின்போது பறக்க விட்ட பெருமை மெய்ஜி சக்கரவர்த்தியைச் சேர்ந்தது. முதலில் ரயிலோட்டத்தில் பறக்க விடப்பட்ட எங்கள் கொடியை ஏறத்தாழ நூற்றாண்டுகளுக்குப் பிறகு இன்று இங்கே தேரோட்டத்தில் பறக்க விடுகிறோம். இந்தப் பெருமை

எனக்குக் கிடைத்திருப்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

"அடுத்தாற்போல் இங்கே இந்த விழாவைத் தொடங்கி வைக்க வந்துள்ள கலைஞர் கருணாநிதி அவர்களையும், திருவாரூரில் பல ஆண்டுகளாகத் தேரோட்டம் நடத்தி வரும் திரு ~~வி. எஸ். டி. அவர்களையும்~~ வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்."

பிறகு ஜப்பானியப் பிரதமர் 'தெப்போ-76' தபால் தலையை வெளியிட்டுப் பேசி முடிந்ததும் விழாவைத் தொடங்கி வைக்கும்படி கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

கலைஞரின் வலது தோளில் போட்டிருந்த நீண்ட அங்க வஸ்திரம் முதுகுப் பக்கமாகப் போய் இடது கை மணிக் கட்டு வழியாக மேலே வந்து இடது கையில் முடிந்திருப் பதை சக்கரவர்த்தி அவர்கள் சற்று நேரம் கண்கொட்டா மல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தமிழ் நாட்டில் எல்லோரும் இப்படித்தான் அங்க வஸ்திரம் போடுவார்களா?" என்று அவர் பஞ்சுவைப் பார்த்துக் கேட்டார்.

'இல்லை; ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி. வள்ளுவர் ஒரு ஸ்டைல், வ. உ. சி. ஒரு ஸ்டைல். காமராஜ், ராஜாஜி ஒவ்வொருத்தரும் ஒரு ஸ்டைல்" என்றான் பஞ்சு.

கலைஞர் இனிய தமிழில் எழுதி வைத்திருந்த சொற் பொழிவை எடுத்துப் படிக்கத் தொடங்கினார்:

"திருவாரூரில் நெடுநாட்கள் ஓடாமலிருந்த தேரை, ஓட்டத் தொடங்கிய போது அந்த விழா நிகழ்ச்சிக்கு என்னை வந்து கலந்து கொள்ளுமாறு வலியுறுத்தி அழைத் தார்கள். நான் அழைப்பை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் இருப்பதாக அறிவித்து விட்டேன். ஆனால் இப் போது ஜப்பானில் நடைபெறுகிற தேரோட்ட விழாவுக்கு

என்னை அழைத்தவுடன் ஒத்துக்கொண்டதற்குக் காரணம், இது ஒரு கற்பனைத் தேர் என்பதுதான்! நண்பர் சாவி அவர்களின் எழுத்தின் வாயிலாக நான் ஜப்பான் நாட்டைக் கற்பனையில் காணுகிறேன். இந்த நாட்டில் உள்ள ஒரு நன்றியுள்ள நாயின் சிலை பற்றி அவர் தீட்டியுள்ள உருக்கமான வாசகங்கள் என் உள்ளத்தைத் தொட்டன. தமிழ்நாட்டில் உள்ள சில மனிதர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய நாயாகும் அது!

வாஷிங்டனில் திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த குழுவினர், ஜப்பானில் தேர் இழுக்கும் விழாவையும் சீர்பெற நடத்திடுவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

'தேர்' என்பது 'தேர்ந்தெடு' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படும் சொல்லாகும். 'தேர்' ஓட்டிட ஜப்பானைத் தேர்ந்தெடுத்துள்ளனர். தேரை இழுத்தால் மட்டும் போதாது! பின்னுலிருந்து உலுக்கு மரம் போட்டுத் தள்ளவும் வேண்டும்! 'தேர் தள்ளுதல்' என்றும் கூறுவதுண்டு! 'தேர் தள்ளுதல்' என்பதிலிருந்துதான் 'தேர்தல்' வந்தது என்று யாராவது வேடிக்கையாகச் சொன்னால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல! தேருக்கும் முட்டுக் கட்டை உண்டு! தேர்தலுக்கும் முட்டுக்கட்டை உண்டு! என்ன பொருத்தம் பாருங்கள். தேருக்குப் போடும் முட்டுக் கட்டை அதை ஒழுங்காக ஓடவிட! ஆனால் தேர்தலுக்குப் போடும் முட்டுக்கட்டை? இதை நான் கேள்வியாகவே விட்டு விடுகிறேன்.

தமிழ்நாட்டில் பூம்புகாரையும், வள்ளுவர் கோட்டத்தையும் உருவாக்குவதில் ஒத்துழைத்துக் கலைப்பணி புரிந்த சிற்பிகள் ஜப்பானில் தங்கி, தேருக்கான வேலைகளையும் திருவள்ளுவர் சிலை உருவாக்கும் தொண்டினையும் நிறைவேற்றியிருப்பது சாவி அவர்கள் திறமையினாலேதான் என்று கூறினால் மிகையாகாது.

நான் மாணவனாக இருந்தபோது, திருவாரூர்த் தேரோட்டத்தைப் பார்த்துவிட்டு ஒரு பாட்டு எழுதி வெளியிட்டேன், அன்றைய 'முரசொலி' துண்டுத் தாளில்!

'ஏரோட்டும் மக்கள் எலாம்
ஏங்கித் தவிக்கையிலே
தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராஜா!'

என்பதே அந்தப் பாட்டு!

பின்னர், நான் முதலமைச்சரான பிறகு திருவாரூரில் தேர் ஓடியதைச் சுட்டிக் காட்டி, சட்டசபையில் ஓர் உறுப்பினர் என் பழைய பாடலைக் குறிப்பிட்டுக் கேள்விக்கணை தொடுத்தார்!

'அப்போது ஏரோட்டும் மக்கள் ஏங்கித் தவித்தனர்! அதனால் தேரோட்டம் எதற்கு என்று கேட்டேன். இப்போது இந்த ஆட்சியில் ஏரோட்டும் மக்கள் ஏங்கித் தவிக்கவில்லை. எனவே, 'தேரோட்டம் எதற்கு?' என்று நான் கேட்கவில்லை'' என்று நான் சட்டசபையில் பதில் அளித்தேன்.

ஜப்பானில் தேரோட்டுகிற குழுவினரை நான் வாழ்த்திப் பாராட்டுகிறேன். இந்தக் குழுவினருக்கு ஒரு வேண்டுகோள்!

அமெரிக்க வாஷிங்டனில் திருமணம் நடத்திக் காட்டினீர்கள்! மகிழ்ச்சி!

இன்று ஜப்பானில் தேர் ஓட்டுகிறீர்கள்! மிக்க மகிழ்ச்சி!

நமது தமிழ்நாட்டுச் சிறப்புக்கள், தொன்மைக் காலக் கலைகள் அனைத்தையும் பல்வேறு நாடுகளுக்குக் கொண்டு சென்று நமது பெருமையை வெளிப்படுத்துங்கள். வரவேற்கிறேன்.

புலி வேடம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகம், கப்பரை, கிராமியப் பாடல், வில்லுப்

பாட்டு, பரதம்-இப்படி அனைத்துச் சிறப்பையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லுங்கள்! ஆனால் ஒன்று—காவடி மட்டும் எங்கேயும் எடுத்துச் செல்ல வேண்டாம்! அதை வெளிநாட்டார் வேண்டுமானால் இங்கு வந்து பார்த்து மகிழட்டும் என்று கூறி இந்தக் கற்பனைத் தேரை, கற்பனை வீதிகளில், கற்பனையாக ஓடவிடும் கற்பனை விழாவை, கற்பனையாகத் தொடங்கி வைத்து, கற்பனையாக விடை பெற்றுக்கொள்கிறேன்! வாழ்க கற்பனைச் சுரங்கம் சாவி!''

கலைஞர் உரை முடிந்தபோது எழுந்த கர ஒலி வானுலகில் உள்ள வள்ளுவர் காதுக்கே எட்டியிருக்கும். நிகழ்ச்சிகள் முடிந்த உடன் திரு வி. எஸ். டி. அவர்கள் எல்லோரையும் தேரடிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே சாஸ்திரிகள் மூவரும் தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தித் தேருக்குப் பூஜை செய்தார்கள். அது முடிந்ததும், வி. எஸ். டி. முக்கியமானவர்களை ஒவ்வொருவராக அழைத்து ஆளுக்கொரு தேங்காயைக் கையில் கொடுத்து சக்கரத்தின் மீது சூரைக்காய் உடைக்கச் சொன்னார்.

''முதலில் நீங்க உடையுங்க. அதைப் பார்த்து சக்கரவர்த்தியும் உடைப்பார். அப்புறம் எல்லோரும் உடைப்பார்கள்'' என்றான் பஞ்சு.

அப்படியே, முதல் சூரைக்காயை திரு வி. எஸ். டி. உடைத்துக் காட்டினார். தொடர்ந்து சக்கரவர்த்தியும், அவரது குடும்பத்தினரும், பிரதம மந்திரியும் மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராய் வந்து உடைத்துத் தீர்த்தார்கள்.

அம்மாஞ்சி ஓடிப்போய் வெள்ளைப் பூசனிக்காய்களை எடுத்து வந்து நாலு சக்கரங்களுக்கும் அடியில் திணித்தார்.

''அந்தக் காய்களை எதற்கு சக்கரத்தின் அடியில் வைக்கிறார்கள்?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"அப்போதுதான் தேர் நகரும்போது அந்த நாலு காய்களையும் நசுக்கிவிடும்" என்றார் சாம்பசிவம்.

"அந்தக் காய்களை நசுக்குவதற்கு இவ்வளவு பெரிய தேர் வேண்டுமா? ஒரு ஆள் போதாதா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"தமிழ்நாட்டில் இதைத் திருஷ்டிப் பரிகாரம் என்பார்கள்" என்றார் அம்மாஞ்சி.

'இதெல்லாம் மூடநம்பிக்கை' என்று எண்ணிக் கொண்டார் கலைஞர். அதை ஊகித்தவர் போல், "இம்மாதிரி மூட நம்பிக்கைகள் ஜப்பான் நாட்டிலும் உண்டு" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"சரி, தேரை நகர்த்த ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டார் திரு வி. எஸ். டி.

"ஓ ஆரம்பிக்கலாமே" என்று தலையசைத்து தேர் நகரப் போவதை ஆவலோடு எதிர்பார்த்து நின்றார் சக்கரவர்த்தி.

"சக்கரவர்த்தி அவர்களும் வடம் பிடித்து இழுக்க வேண்டும்" என்றார் வி. எஸ். டி.

இதற்குள் மேடையிலிருந்து ஏணி வழியாகத் தேர் மீது போய் அமர்ந்து கொண்ட நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் தமது வாத்தியத்தை எடுத்து மல்லாரி ராக ஆலாபனை செய்யத் தொடங்கினார். அடுத்த கணம் கின்ஸா ஏரியாவே நாத வெள்ளத்தில் மூழ்கியது.

அதே சமயம் அதிர்வேட்டுகளும் தாரைகளும் தப்பட்டைகளும் எக்காளமிட்டன. ஆங்காங்கே நின்று கொண்டிருந்த தேர்த் தொண்டர்கள் வடம் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குப் பச்சைக் கொடி காட்டினார்கள். அதைக் கண்டதும், சக்கரவர்த்தியுடன் சேர்ந்து எல்லோரும் வடம் பிடித்து இழுக்கத் தொடங்கினர். பின்னாலிருந்து சிலர்

உலுக்கு மரம் போட்டுத் தேரை நகர்த்துவதற்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். தேருக்குப் பின்னால் நின்ற யானைகள் வேறு தேரை முட்டி மோதித் தள்ளிக் கொண்டிருந்தன. முட்டுக்கட்டை போடுகிறவர்கள் தங்கள் திருப்பணியைச் செய்வதற்கான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் சேர்ந்து ஒருமுகமாக இழுத்தபோது தேர் மெதுவாக நகரத் தொடங்கியது. அதைக் கண்ட மக்களிடையே பரவசமான பரபரப்பும் மகிழ்ச்சி ஆரவாரமும் உண்டாயின. அடுத்த நிமிஷமே யானை போல் ஆடி அசைந்து கம்பீரமாக ஓடத் தொடங்கிய தேரைக் கண்ட போது மக்களின் உற்சாகம் கரை புரண்டுவிட்டது! அதன் அறிகுறியாக பலூன்கள் பறக்க விட்டார்கள். ஊதுகுழல் எடுத்து ஊதினார்கள். ஜப்பானியர் சிலர் இட நெருக்கடி காரணமாகக் குழந்தைகளைத் தங்கள் தோள்மீது உட்கார வைத்துக் கொண்டார்கள். தமிழ் நாட்டு கமர்கட், கலர் மிட்டாய், அரிசிப் பொரி, பட்டாணிக் கடலையெல்லாம் கூட கின்ஸா வீதிகளுக்கு வந்திருந்தன. ஆனால் கமர் கட்டையும் கலர் மிட்டாய்களையும் மொய்ப்பதற்கு ஈக்களைத் தான் காணவில்லை!

“தெரிந்திருந்தால் தமிழ் நாட்டிலிருந்து ஈக்களையும் ஒரு டப்பாவில் பிடித்துப் போட்டு எடுத்து வரச்சொல்லியிருக்கலாம்” என்றார் அம்மாஞ்சி.

# 14

கின்ஸாவிலுள்ள மிக்கிமாட்டோ, மட்ஸுஜகாயா, மிட்ஸுகோஷி போன்ற பெரிய பெரிய கட்டடங்கள் அவ்வளவையும் வெளிநாட்டு வி. ஐ. பி. க்கள் உட்கார்ந்து பார்ப்பதற்காக 'ரிஸர்வ்' செய்திருந்தார்கள்.

கிமோனுக்கள் அணிந்த ஜப்பானியப் பெண்கள் சாரி சாரியாக கின்ஸாவை நோக்கி வருவது, கமர்கட், கலர் மிட்டாய், கொட்டாங்கச்சி வாத்திய விற்பனை, அதிர் வேட்டுப் புகை, யானைகள் தேரை முட்டித் தள்ளுவது, ஜப்பான் சிறுவர்கள் கையில் மிட்டாய் ரிஸ்ட்வாட்ச் கட்டிக் கொள்வது போன்ற வேடிக்கைகளை டெலிவிஷனில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர் கின்ஸாவுக்கு வர முடியாத ஜப்பானிய மக்கள்.

சாம்பசிவ சாஸ்திரி, ஜப்பான் சாஸ்திரி, அம்மாஞ்சி வாத்தியார், கோபால் ராவ் ஆகிய நால்வரும் தேர் மீது ஏறித் திசைக்கு ஒருவராக நின்று கொண்டனர்.

தேருக்குக் கீழே நடந்து கொண்டிருந்த திரு வி. எஸ். டி. தேரோட்டம் தடங்கலின்றி ஒழுங்காக நடைபெறுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவ்வப்போது அவர் கைகளை உயர்த்தி வடம் இழுப்பவர்களை ஊக்கி உற்சாகப் படுத்துவதும், தேர் நகராத நேரங்களில் தமது இரு கைகளையும் கோத்துத் தலைக்கு மேல் தாங்கி நிற்பதும் அவருடைய வழக்கம் என்பது அவரை அறிந்தவர்களுக்குத் தெரிந்த விஷயம்!

தேரின் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஜப்பான் சாஸ்திரிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"தேரும் தேர் இழுப்பவர்களும் இருந்துவிட்டால் மட்டும் தேர் நகர்ந்து விடாது. வி. எஸ். டி. யைப் போன்ற உண்மையான பக்தர் ஒருவர் பக்கத்தில் நின்று இயக்கினால் தான் தேரோட்டம் சரியாக நடைபெறும்" என்றார் கோபால் ராவ்.

ஜப்பானியரும் தமிழர்களும் ஒருமுகமாகச் சேர்ந்து இழுக்கும் போது இரண்டு நாட்டுக் கலாசாரங்களும் இணைந்து உறவாடுவது போல் இருந்தது.

திடீரென்று "என் தோள்கள் பூரிக்கின்றன!" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"எதற்கு?..." என்று கேட்டார் அம்மாஞ்சி.

"இந்த நாட்டில் வள்ளுவருக்கு இப்படி ஒரு பெருமை நடைபெறுவதைக் காணும் எந்தத் தமிழனுக்குத்தான் தோள் பூரிக்காது?" என்று திருப்பிக் கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

நாமகிரிப்பேட்டை கரகரப்பிரியாவை சவிஸ்தாரமாக ஆலாபனை செய்து முடித்துவிட்டு 'சக்கனி ராஜ' என்று தொடங்கு முன் தவில் வாசிப்பவருக்குச் சிறிது சந்தர்ப்பம் கொடுத்தார். அவ்வளவுதான்; வலையப்பட்டி தம் வாசிப்பின் மூலம் ஊரையே வளைத்து விட்டார். அன்றைய அவருடைய வாசிப்பில் ஒரு ஆவேசமே இருந்தது. பின்னர் நாமகிரிப்பேட்டை 'சக்கனிராஜ...' என்று தொடங்கியதும், "பலே, சக்கைப்போடு ராஜா!" என்று பாராட்டினார் ஜப்பான் சாஸ்திரி.

கோபால் ராவின் கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தன.

"முப்பது வருஷத்துக்கு முன்னால் ராஜரத்னம் பிள்ளை வாசிப்பைக் கேட்டிருக்கிறேன். இப்போது மீண்டும் அதைக் கேட்கிறேன்" என்றார் அவர்.

தேருக்கு முன்னும் பின்னும் பொய்க்கால் குதிரை, புலிவேடம் போன்ற தமிழ்நாட்டின் பழமையான கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

''தமிழ் நாட்டின் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் இப்படி ஒரு பெருமை எந்த நாட்டிலுமே நடந்ததில்லை'' என்று கூறி மகிழ்ந்தார் கோபால் ராவ்.

மாடிகளிலிருந்து பைனுகுலர் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கர்களும் மற்ற அயல் நாட்டினரும் தூரத்தில் தேர் வருவதைக் கண்டு விட்டு, "THERE THERE'' என்று உற்சாகத்தோடு குரல் கொடுத்தனர்.

அவர்கள் 'there there' என்று கூறியது ''தேர் தேர்'' என்று சொல்வது போலிருந்தது சுற்றியிருந்த தமிழர்களுக்கு!

தேர் மீது நின்று கொண்டிருந்த அம்மாஞ்சி வாத்தியார் தமது பைனுகுலர் வழியாகப் பஞ்சு இருக்குமிடத்தைத் தேடிப் பார்த்தார். கீழே தேருக்கடியில் நின்றுகொண்டிருந்த பஞ்சு இளநீர் சாப்பிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

அம்மாஞ்சி வாத்தியாருக்கு தாகம் தாங்கவில்லை.

''பஞ்சு! பஞ்சு! எனக்கு ஒரு இளநீர்'' என்று தேர் மீது நின்றபடியே கத்தினார் அவர்.

பஞ்சுவுக்கு அவர் கத்தியது காதில் விழவில்லை.

''ஏன் இப்படி நாட்டுப்புறம் மாதிரி கத்துகிறீர்? இது ஜப்பான் தேசம். உரக்கப் பேசுவது, கத்துவது, கூப்பாடு போடுவதெல்லாம் ஜப்பானியருக்குப் பிடிக்காது'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அது எனக்குத் தெரியும். தேர் திருவிழா என்றால் இப்படிக் கூச்சலும் கும்மாளமுமாகத் தான் இருக்கும். இது ஜப்பானியருக்கும் தெரியும். நீர் சும்மா இரும்'' என்று அவரை அடக்கினார் அம்மாஞ்சி வாத்தியார்.

பிறகு ‘‘மணி பன்னிரண்டு ஆகப் போகிறது. தேர் எப்போது தெரு முனையை அடைந்து அடுத்த தெருவுக்குத் திரும்பப் போகிறதோ?’’ என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

‘‘ஏன், பசி எடுத்து விட்டதோ கனபாடிகளுக்கு?’’ என்று அவரைக் கேலி செய்தார் கோபால் ராவ்.

‘‘அம்மாஞ்சி வாத்தியார் கையில் ரிஸ்ட் வாட்ச் கிடையாது. ஆனாலும் அவருக்கு வயிற்றில் கடிகாரம்! ‘டாண்’ என்று மணி பன்னிரண்டு அடித்ததோ இல்லையோ, பசி எடுத்துவிடும் அவருக்கு’’ என்றார் சாம்பசிவம்.

‘‘அது சரி, ‘லஞ்ச் பிரேக்’ எத்தனை மணிக்கு விடப் போகிறார்களாம்?’’ என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

‘‘பன்னிரண்டரை மணிக்கு விடப் போகிறார்கள். நமக்கெல்லாம் இன்று அரண்மனையில் விருந்து. சக்கரவர்த்தி கொடுக்கிறார்’’ என்றார் கோபால் ராவ்.

‘‘அது எனக்குத் தெரியும். வைத்தாவுக்கு ‘மெனு’ தயார் செய்து கொடுத்ததே நான்தான். சக்கரவர்த்தி குடும்பத்தினரும் நம்மோடு சேர்ந்து சாப்பிடப் போகிறார்களாம். அது தெரியுமா உமக்கு?’’ என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி பெருமையோடு!

‘‘பேஷ்! பேஷ்! என்ன மெனு? அதைச் சொல்லும்’’ என்றார் சாம்பசிவம்.

‘‘சேமியா பாயசம்! கேரளாவிலிருந்து மூட்டை மூட்டையா முந்திரி வந்திருக்கு. பொன் வறுவலா வறுத்துக் கொட்டச் சொல்லியிருக்கேன்’’ என்றார்.

‘‘அப்புறம்?’’ என்று கேட்டார் சாம்பசிவம்.

‘‘வெண் பொங்கல், அவியல், சேப்பங் கிழங்கு ரோஸ்ட், கத்தரிக்காய் எண்ணெய்க் கறி, வெண்டைக்காய் வதக்கல் பச்சடி, உருளைக்கிழக்கு வறுவல், பிஸிபேளா ஹூளி அன்னம், எரிசேரி, புளிசேரி, மோர்க்குழம்பு, டொமாடோ ஸூப், ஒரு வடை, ஒரு அப்பளம்...’’

"ஒரு வடை ஒரு அப்பளம்தானா? இரண்டு போட மாட்டாளா?" என்று வேடிக்கையாகக் கேட்டார் அம்மாஞ்சி.

சரியாகப் பன்னிரண்டரை மணி ஆனதும் அதிர்வெடிகள் போட்டு லஞ்ச் ப்ரேக்கை அறிவித்தார்கள்.

அவ்வளவுதான்; கின்ஸா வீதிகளில் மக்கள் வெள்ளம் நாலா திசைகளிலும் கலந்து அலைமோதிக் கொண்டு சென்ற காட்சி கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச் 'லஞ்ச் ப்ரேக்'கை நினைவூட்டியது.

அரண்மனை விருந்து மண்டபத்தில் ஆயிரம் விருந்தினருக்கு மேல் கூடியிருந்தார்கள். கலைஞரையும், தமிழ் நாட்டுக் கலைஞர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கும் வகையில் அமைந்த விருந்து அது.

சக்கரவர்த்தி, மகாராணி, அவர்கள் குடும்பத்தினர் அந்த ஹாலின் நடுவே நடுநாயகமாக அமர, அவர்களுக்குப் பக்கத்தில் கலைஞரும் வி. எஸ். டி.யும் மற்ற கலைஞர்களும் உட்கார்ந்து கொண்டனர்.

டைனிங் டேபிள் மீது வாழை இலை போட்ட சாப்பாடு!

அரண்மனைக்குரிய சாண்ட்லியர் விளக்குகளும் 'இகயானா' அலங்காரமும் அந்த ஹாலுக்குத் தனிக் கவர்ச்சியை உண்டாக்கின.

"நம்ம தேர், நம்ம சாப்பாடு, நம்ம சங்கீதம், நம்ம வாழை இலை, நம்ம திருவள்ளுவர்! நினைச்சாலே சந்தோஷம் தாங்கவில்லை..." என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"ஒரு சின்ன திருத்தம்" என்றார் கோபால் ராவ்.

"என்ன அது?" என்று கேட்டார் ஜப்பான் சாஸ்திரி.

"திருவள்ளுவர் மட்டும் நம்ம திருவள்ளுவர் இல்லை. அவர் உலகத்தின் பொதுச் சொத்து. 'வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியிருக்கார். தெரியுமோல்லியோ?" என்றார் கோபால் ராவ்.

வயிற்றில் பாயசம் போனதும் எல்லாருக்கும் உண்ட மயக்கம் வந்துவிட்டது. வடம் பிடித்து இழுத்த தொண்டர்களையும் அது விடவில்லை. சற்று நேரம் களைப்பாற விரும்பினார்கள் அவர்கள்.

"அதெல்லாம் கூடாது. உடனே மீண்டும் தேர் இழுக்கப் போக வேண்டியதுதான்" என்று அவர்களுடைய தூக்கத்துக்கு முட்டுக்கட்டை போட்டார்கள் சில முட்டுக்கட்டைத் தொண்டர்கள்!

'அப்படி இப்படி' என்று தேரைத் தெரு முனைக்குக் கொண்டு சேர்க்க மணி நாலாகிவிட்டது.

"தேரோட்டத்தின் முக்கியக் கட்டமே இனிமேல் தான்!" என்றார் அம்மாஞ்சி வாத்தியார். முதலில் தேர் வடங்களை அடுத்த தெருவுக்குள் தூக்கிக் கொண்டு போய்ப் போட்டார்கள். அடுத்தாற்போல் சக்கரங்களுக்குக் கீழே வலிமைமிக்க ஸ்டீல் தகடுகளை வைத்து அவற்றின் மீது விளக்கெண்ணெய் டின்களை உடைத்து ஊற்றினார்கள். வழுவழுப்பான அந்தத் தகடுகளின் மீது தேர்ச்சக்கரங்கள் வழுக்கிக் கொண்டு திரும்பப் போகும் காட்சியைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண் கொட்டாமல் காத்திருந்தார்கள். தெருமுனையில் உள்ள உயரமான ஒரு கட்டடத்தின் மொட்டை மாடி மீது போய் நின்று கொண்டு வேடிக்கை பார்த்தனர் சக்கரவர்த்தியும் அவரது குடும்பத்தினரும்.

தொம்பைகள் காற்றிலே ஊசலாட, யானைகள் பின் பக்கம் முட்டித் தள்ள, தேர் ஜம்மென்று அடுத்த தெருவில் திரும்பியபோது அதிர்வேட்டுகளும், தாரை தப்பட்டைகளும் எழுப்பிய ஒலி ஆகாசத்தை முட்டி மோதின. அதே சமயம் உயரத்தில் பறந்து வந்த ஹெலிகாப்டர் விமானம் கின்சாவில் வட்டமடித்துத் தாழ்வாகப் பறந்து ரோஜா, சாமந்தி, மல்லிகை மலர்களைக் கூடை கூடையாகக் கொட்டி தேர் மீது மாரியாகப் பொழிந்தன.

# 15

“ஏதாவது பெரிய கூட்டத்தைப் பற்றி வர்ணிக்கும் போது ‘அம்மாடி, பெரிய தேர்த் திருவிழாக் கூட்டம் மாதிரி இருக்கிறதே!’ என்று சொல்வோம். கின்ஸாவில் இப்போது கூடியுள்ள இந்தக் கூட்டத்தை எத்தோடு ஒப்பிட்டுச் சொல்வது?” என்று வியந்தார் கோபால் ராவ்.

“காணுமற் போன குழந்தைகளுக்குக் கணக்கு வழக்கே இல்லையாம்” என்ருர் சாம்பசிவ சாஸ்திரி.

“அந்தக் குழந்தைகள் யாவும் ‘லாஸ்ட் சில்ட்ரன்’ அலுவலகத்தில் பத்திரமாக விளையாடிக் கொண்டும் ஐஸ் க்ரீம் சாப்பிட்டுக்கொண்டும் இருக்கும்” என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

சில ஜப்பானியர் தங்கள் குழந்தைகளைத் தோள் மீது தூக்கி வைத்துக்கொண்டு செல்வதைக் கண்ட அம்மாஞ்சி, “குழந்தைகளைத் தோள் மீது தூக்கிச் செல்கிற வழக்கம் இந்த நாட்டிலும் உண்டு போலிருக்கிறது” என்ருர்.

பெருங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை, எலுமிச்சம்பழம் நான்கும் போட்டு கடுகு தாளித்த நீர்மோரைத் தெருவெங்கும் விநியோகம் செய்து கொண்டிருந்தனர். அப்படி விநியோகிக்கப்பட்ட இடங்களில் ‘மட்ஸுயா தர்மம்’ ‘யோஷியா தர்மம்’ ‘டய்மாரு தர்மம்’ ‘ஹாங்க்யூ தர்மம்’ என்று எழுதி வைக்கப்பட்டிருந்தன.

தேர்ச் சின்னம் பொறித்த ‘கீ செயின்’கள் தயாரித்து அவற்றில் தங்கள் கம்பெனியின் விலாசத்தையும் பொறித்து

இலவசமாக வழங்கிக் கொண்டிருந்தனர் வேறு சில வியா பாரிகள்.

ஜப்பான் சாஸ்திரி கையில் விசிறியுடன் நிற்பது போல் பெரிய மெழுகுப் பொம்மை செய்து அதைத் தம்முடைய கடைவாசலில் நிறுத்தி வைத்திருந்தார் விசிறிக் கடைக் காரர் ஒருவர்!

அதைக் கண்ட அசல் ஜப்பான் சாஸ்திரிகளுக்கு அந்தப் பொம்மையைப் பக்கத்தில் போய்ப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

"நீர் கீழே இறங்கினால் இந்தக் கூட்டம் உம்மை அப் படியே தெரிந்து அமுக்கிவிடும். அப்புறம் உம்மால் எதை யுமே பார்க்க முடியாது. பிறகு உம்மையும் யாராவது தோள் மீது தூக்கிக்கொண்டு நடக்க வேண்டியதுதான்" என்றார் அம்மாஞ்சி.

மறு நாள் மாலை ஆறு மணிக்குள்ளாகவே தேர் நிலைக்கு வந்து சேர்ந்துவிட்டது. அப்புறம்தான் திரு வி. எஸ். டி. அவர்கள் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

பூர்த்தி விழாவின் போதும் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியில் கலைஞர் மட்டும் கலந்து கொள்ளவில்லை. காரணம் அவர் சீக்கிரமே சென்னை திரும்ப வேண்டியிருந்ததால் கியோட்டோ, ஒஸாகா போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்று விட்டார்.

தேர் நிலைக்கு வந்த பிறகும் சாஸ்திரிகள் மூவருக்கும் தேரை விட்டுக் கீழே இறங்க மனமில்லை.

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுக்கு உடம்பெல்லாம் வியர்த்து கதர்ச் சட்டை உள்பட நனைந்து போயிருந்தது.

"நாமகிரிப் பேட்டைவாள்! கீழே இறங்குங்கோ. அடுத்த வாசிப்பு தெப்பத்தில்தான்" என்றார் அம்மாஞ்சி.

"பாவம்! இப்போது அவரே தெப்பமாய் நனைந்து போயிருக்கிறார்" என்றார் சாம்பசிவம்.

"எல்லோரும் கீழே இறங்கி வாருங்கள். நேரமாச்சு" என்று கீழிருந்தபடியே அவசரப்படுத்தினான் பஞ்சு.

"ஆனைக் கீழே இறக்குவதில் பஞ்சு ஸாருக்கு அலாதி ஆசை" என்றார் சாம்பசிவம்.

"நம்மை மேலே உயர்த்துகிறவரும் அவர்தானே!" என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

பூர்த்தி விழாவில் திரு வி. எஸ். டி.யும் ஜப்பான் சாஸ்திரியும் மட்டுமே பேசினார்கள். முதலில், ஹிஸ் ஹைனஸ் சக்கரவர்த்தி ஹிரா ஹிட்டோவுக்கும் ஹர் ஹைனஸ் மகாராணிக்கும் யானைகள் தங்கள் துதிக்கையால் சந்தன மாலைகள் அணிவித்தன. அடுத்தாற்போல் ஜப்பான் சாஸ்திரி பேசத் தொடங்கினார்.

"சக்கரவர்த்தி அவர்களே, மற்றும் இங்கு கூடியுள்ள பெரியோர்களே, அகஸ்தியர் என்ற தமிழ் முனிவரைப் பற்றி நீங்கள் அனைவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த மகா முனிவரைக் காட்டிலும் நான் பெரியவன். எப்படி என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன். அவர் என்னைக் காட்டிலும் குள்ளமானவர். ஆகவே அவரைக் காட்டிலும் நான் உயர்ந்தவன்!

"சூரியனைத் தெய்வமாகப் போற்றுகிற நாடு இது. சக்கரவர்த்தி பரம்பரையே சூரியனிலிருந்து வந்ததுதான் என்றொரு நம்பிக்கை இங்கே இருந்து வருகிறது. தமிழ் நாட்டிலும் சூரியனைத் தெய்வமாக வழிபடுகிறோம். எங்கள் விவசாயிகள் பொங்கலன்று சூரியனுக்குப் பொங்கல் படைக்கிறார்கள். சூரிய நமஸ்காரம் என்பது எங்கள் நாட்டில் வழிவழியாக வந்துள்ள ஒரு வழிபாடாகும். ஏன்? என்னைப் பார்த்தாலே நமக்குள்ள அந்த ஒற்றுமை நன்கு புலப்படுமே! நானும் உங்களைப் போலவே குள்ளமானவன்.

அதனால்தான் என் பெயர் கூட ஜப்பான் சாஸ்திரி என்றாகி விட்டது! இப்போது இத்தெப்போ-76 மூலம் நம் உறவும் கலாசாரப் பிணைப்பும் உறுதிப்படுகிறது. எங்கள் தேரை இந்த நாட்டில் கொண்டு வந்து ஓட்டுவதில் மிகுந்த அக்கறை காட்டி அதற்கான எல்லா உதவிகளையும் வசதிகளையும் செய்து கொடுத்த சக்கரவர்த்தி அவர்களுக்கு எங்கள் சார்பிலும், எங்கள் தமிழகத்தின் சார்பிலும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். முக்கியமாக இரண்டு சக்கரவர்த்திகளுக்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். ஒன்று ஜப்பான் சக்கரவர்த்தி. இன்னொன்று ஏர் இண்டியா அக்பர் சக்கரவர்த்தி. அந்தச் சக்கரவர்த்தியின் உதவி இல்லையென்றால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இங்கு வந்தே இருக்க முடியாதே!''

அடுத்தாற்போல் திரு வி. எஸ். டி. அவர்கள் பேசினார்:

''தேரோட்டம் நடத்துவதிலுள்ள சிரமங்களை நன்கு அறிந்தவன் நான்.

''எங்கள் திருவாரூரில் பல தேரோட்டங்களைப் பார்த்திருக்கிறேன். அங்கே நாலு வீதிகளிலும் தேர் வலமாகச் சுற்றி நிலைக்கு வந்ததும் தேரிலுள்ள சுவாமியை கோவிலுக்குள் எடுத்துச் சென்று 'சண்டாளப் பிராயச்சித்தம்' என்னும் ஒரு ஐதிகத்தைச் செய்து முடித்த பின்னரே சுவாமியை உள்ளே எடுத்துச் செல்வார்கள். சண்டாளர்கள் என்றால் மனிதர்களுக்குள்ளேயே சண்டாளத்தனமாக நடந்து கொள்கிறவர்களைத்தான் சொல்கிறேன்.

''இங்கே சுவாமியும் இல்லை. சண்டாளர்களும் இல்லை. ஆகவே பிராயச்சித்தமும் இல்லை!

''வள்ளுவர் எல்லா நாட்டுக்கும் பொதுவானவர். அவருடைய குறள்கள் வேதங்கள் போன்றவை. உலக மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை ஈரடிகளில் வகுத்துக் கொடுத்த பெரும் புலவர். அவருக்கு இங்கே தேரோட்டம் நடத்தியதோடு எங்கள் பணி தீர்ந்து விடவில்லை. டோக்கி

யோவில் உள்ள புகழ்பெற்ற யுயேனோ பார்க்கில் அவருக்கு ஒரு கோயில் அமைக்க வேண்டும் என்பதும் எங்கள் அவா. இப்போதைக்கு இந்தத் தேரை அந்தப் பூங்காவிலே கொண்டு நிறுத்தி வைப்போம். பிறகு உரிய காலத்தில் கோயில் கட்டுவோம். ஜப்பானுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் யுயேனோ பார்க்கில் உள்ள பல்வேறு காட்சிகளையும் காட்சிப் பொருள்களையும் காணத் தவறுவதில்லை. எனவே அந்த இடத்தில் எங்கள் வள்ளுவரையும் கொண்டு வைப்பது மிகப் பொருத்தமாயிருக்கும் என்று கருதுகிறேன். இந்த விழாவின் நினைவாக ஜப்பான் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள இந்தத் திருக்குறளை சக்கரவர்த்தி அவர்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.''

திரு வி. எஸ். டி.யின் உரையோடு விழா இனிது முடிந்தது.

அன்றிரவே ஹகோனே தேசியப் பூங்காவுக்கு விசேஷ ரயில்கள் விடப்பட்டன. தேருக்கு வந்த கூட்டத்தினர் அவ்வளவு பேரும் தெப்ப விழாவைக் காணும் ஆவலில் ரயிலடியை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

''ஹகோனே எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார் திரு வி. எஸ். டி.

''டோக்கியோவிலிருந்து ஒன்றரை மணி நேரப் பயணம் தான். ரயில் பயணம் ரொம்ப வசதியாக இருக்கும். ஃப்யூஜி மலை அங்கேதான் இருக்கிறது'' என்றார் அம்மாஞ்சி.

''எங்கே பார்த்தாலும் மலைகளும், ஏரிகளும், செர்ரி மரங்களும், வெந்நீர் ஊற்றுக்களும் மண்டிக் கிடக்கும் இடம் அது. அழகு தேவதை மௌனமாகத் தாண்டவமாடும் அமைதியான இடம். இயற்கை அழகும், இனிய சூழ்நிலையும், மரங்களின் வர்ண பேதங்களும் நம்மை மயக்

கத்தில் ஆழ்த்தும். பிரமிப்பில் பேச்சு வராது. வாயடைத்துப் போகும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''தெப்பம் எந்த இடத்தில் விடப் போகிறார்கள்? ஹகோனே ஏரியில்தானே?'' என்று கேட்டார் திரு வி. எஸ். டி.

''ஆமாம்; ஜப்பான்காரர்கள் அதை ஆஷி என்று சொல்வார்கள். அந்த ஏரிக் கரையிலே ஒரு சின்ன கோயில் கூட இருக்கு. அங்கேதான் தெப்ப வேலை நடந்து கொண்டிருக்கிறது. திருவாரூர்த் தெப்பம் போலவே பீப்பாய்களைப் போட்டுப் பீடம் அமைத்துச் செல்கிறார்கள். நீங்க அந்த ஏரிக்குச் சமீபத்தில் உள்ள ஃப்யூஜியா ஹோட்டலில் தங்கிக் கொள்ளலாம். அங்கிருந்து ஹகோனே ஏரிக்கு ஏழு மைல் தான். அவ்வப்போது போய் தெப்ப வேலை சரியாக நடக்கிறதா என்று பார்ப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''ஃப்யூஜி மலையை ஒரு முறை எல்லாத் திசைகளிலிருந்தும் பார்க்க வேண்டுமென்று ஆசை. படகிலேயே சுற்றிப் பார்க்க முடியுமா?'' என்று கேட்டார் திரு வி. எஸ். டி.

''பேஷாகப் பார்க்கலாம். எட்டு மணி நேரம் ஆகும். அந்த மலையைப் பல கோணங்களில் பார்ப்பதற்குப் படகிலே சுற்றிப் போவதுதான் சரியான வழி. ஃப்யூஜி மலையைச் சுற்றி ஐந்து ஏரிகள் உள்ளன. அந்த ஐந்தும் ஃப்யூஜி மலையை அர்த்த சந்திர வடிவத்தில் வளைத்துக் கொண்டிருக்கின்றன'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''அப்படின்னா நாம் எல்லோருமே நாளை காலை ஒரு ரவுண்ட் போய்விட்டு வந்துவிடலாமே'' என்றார் அம்மாஞ்சி.

''குளிர் தான் தாங்காது'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“சுற்றி ஏரியோல்லியோ” என்றார் சாம்பசிவம்.

“பரவாயில்லே. ‘ஹாட் ஸ்ப்ரிங்’ நிறைய இருக்காம். அதிலே குளித்தால் குளிர் பறந்து போய் விடுமாம்” என்றார் அம்மாஞ்சி.

“சரி, நமக்கெல்லாம் அங்கே எந்த இடத்தில் சாப்பாடு தயாராகிறது?” என்று கேட்டார் சாம்பசிவம்.

“இன்னும் அந்தக் கேள்வி வரலேயேன்னு பார்த்தேன். கவலைப்படாதீர். வைத்தி பார்ட்டி நேற்றே அங்கு போயாச்சு. புளியோதரை, தயிர்வடை எல்லாம் போடச் சொல்லி இருக்கேன்” என்றார் அம்மாஞ்சி.

“தயிர் வடையா? இந்தக் குளிரிலா? மசால் வடை போடச் சொல்லக் கூடாதா?” என்றார் சாம்பசிவம்.

“பூர்வ ஜன்மத்தில் நீர் எலியாகப் பிறந்திருக்கணும். மசால் வடை வைத்து உம்மைச் சுலபமாகப் பிடித்துவிடலாம் போலிருக்கே” என்றார் அம்மாஞ்சி.

“ஹகோனேக்கு எப்படி ரூட்?” என்று கேட்டார் வி. எஸ். டி.

“ஷிஞ்சுகு ஸ்டேஷன்லேருந்து டொக்காய்டோ லேன் எக்ஸ்பிரஸ் போறது. ஓடவாரா, அட்டாமி, நுமாஸு இந்த மூன்று இடங்களுக்கும் ரயில் போகிறது. நாம் அட்டாமிக்குப் போயிடுவோம். அட்டாமியிலேதான் அருமையான ஓட்டல்கள் இருக்கு. ஜப்பான் ஸ்டைல் ஓட்டல்களும் நிறைய இருக்கு. அந்த ஜப்பானிய விடுதிகளில் தங்கிப் பார்ப்பதற்கு இதுதான் ஏற்ற சந்தர்ப்பம்!’ என்றார் ஜப்பான் சாஸ்திரி.

“நம்மவர்களெல்லாம் பெரும் கூட்டமாக ஹகோனே போகிறார்களே, அவர்களெல்லாம் எங்கே தங்கப் போகிறார்கள்?” என்று விசாரித்தார் வி. எஸ். டி.

“ஏரிக் கரையில் மலேச்சரிவில் ஏராளமான கூடாரங்கள் போட்டிருக்கிறார்கள். மிலிடரி சாம்ப் மாதிரி ரொம்ப

வசதியாயிருக்கும். பிரமாதமான அரேஞ்ச்மெண்டாம்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''கோபால் ராவும், பஞ்சுவும் எப்போது போனார்கள்?'' என்று கேட்டார் சாம்பசிவம்.

''தேரோட்டம் முடிந்ததுதான் தாமதம்; அவர்கள் அடுத்த கணமே ஹெலிகாப்டர்லே கிளம்பிப் போயாச்சு. அவர்கள் போய்த்தானே எல்லா ஏற்பாடுகளும் நடக்கணும்'' என்றார் அம்மாஞ்சி.

# 16

"ஹகோனே போக வி. எஸ். டி.க்காக ஹெலிகாப்டர் காத்திருக்கிறதாம். நாமும் அவரோடு போய் விடலாமே" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

"ஐந்து பேருக்கு ஹெலிகாப்டரில் இடம் இருக்குமா?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

"ஐந்து பேர் ஏது? வி. எஸ். டி.யோடு நாலு பேர் தானே?" என்று கேட்டார் சாம்பசிவம்.

"விநாயகரோடு ஐந்து பேர் இல்லையா?" என்றார் அம்மாஞ்சி.

"ஆமாம்; தெப்பத்துக்கே அவர்தானே முக்கியம்?" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் நாலு பேரும் விநாயகர் சிலையுடன் அட்டாமியில் போய் இறங்கினர்.

"மலைப் பிரதேசம். குளிர் தாங்கவில்லை" என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

"ராத்திரி இங்கேயே தங்கி சுடச்சுட கந்தக ஊற்றுத் தண்ணீரில் ஸ்நானம் செய்வோம். உடம்பு வலி, களைப்பு எல்லாம் தீர்ந்து போகும். ஒரு மண்டலம் இந்தத் தண்ணீரில் குளித்தால் சரும வியாதிகள் எதுவாயிருந்தாலும் பறந்துவிடுமாம்" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

மறுநாள் காலே வி. எஸ். டி. யும் சாஸ்திரிகளும் 'ரோப்' வண்டியில் ஏறி ஹகோனே நோக்கிப் பயணமானுர்கள். அந்த வண்டி இரண்டு மலேகளுக்கிடையே கம்பி வடத்தில் தொங்கிச் சென்ற போது, ''திரிசங்கு சொர்க்கம் என்பது இதுதான்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி. கீழே கிடுகிடு பாதாளத்திலிருந்து கந்தக ஊற்றுகளின் ஆவி மேக மண்டலம் போல் மேலே வந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட அம்மாஞ்சி, ''ஆகா! கதகதப்பான அந்த நீராவியில் போய் நின்ருல் உடம்புக்கு ரொம்ப இதமாயிருக்கும்'' என்ருர்.

நால்வரும் ஓரிடத்தில் கீழே இறங்கி அந்த நீராவியின் நடுவில் போய் நின்று கொண்டனர்.

''ஸ்டீம் பாத் பிரமாதம்'' என்ருர் ஜப்பான் சாஸ்திரி.

''இப்போது ஒரு கப் டீ இருந்தால் அதை விடப் பிரமாதமாயிருக்கும்'' என்ருர் சாம்பசிவம்.

இவர்கள் ஹகோனேயை அடையும்போது மணி பத்து ஆகிவிட்டது. ஆஷி ஏரிக்கரையில் கால் வைக்க இடமில்லே. எங்கு பார்த்தாலும் கூட்டமும் கும்பலுமாயிருந்தது. பஞ்சு, கோபால் ராவ், கணபதி ஸ்தபதி, ஆசாரிகள் அத்தனே பேரும் தெப்ப வேலேயில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். தெப்பத்தை அழகாகவும் விசாலமாகவும் கட்டியிருந்தார்கள். விநாயகர் சிலே வைப்பதற்கென அதற்குள்ளே ஒரு சிறு மண்டபமும் பாடகர்கள் கச்சேரி செய்வதற்கு வசதியாக ஒரு மேடையும் அமைத்திருந்தனர்.

''விநாயகரை எடுத்து வாருங்கள். ராகு காலத்துக்கு முன் மண்டபத்தில் வைத்து விடலாம்'' என்ருர் திரு. வி. எஸ். டி.

சாஸ்திரிகள் மூவரும் போய் விநாயகரை எடுத்து வந்தார்கள்.

''இந்த இடத்தைப் பார்க்கும்போது தேக்கடி ஞாபகம் வருகிறது'' என்றார் திரு வி. எஸ். டி.

''தேர் தள்ளுவதற்காக வந்த யானைகளையும் இங்கே அழைத்து வந்திருக்கலாம்'' என்று கூறினர் அம்மாஞ்சி.

''அந்த யானைகளை நேற்றே யுயேனோ மிருகக்காட்சிச் சாலையில் கொண்டு விட்டாயிற்று!'' என்றார் கோபால் ராவ்.

சக்கரவர்த்திக் குடும்பம், வெளிநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள். வி. ஐ. பி.க்கள், விசேஷ விருந்தினர்கள். தொழிலதிபர்கள் எல்லோருக்கும் ஏரிக் கரை விளிம்பில் வரிசையாக நாற்காலிகள் போட்டு இடம் ரிஸர்வ் செய்திருந்தனர்.

''இந்த ஆஷி ஏரியில் தெப்பம் விடவேண்டும் என்ற ஐடியா உங்களுக்கு எப்படித் தோன்றியது என்று ஒரு ஜப்பானியர் என்னைக் கேட்டார்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இது உம்முடைய சொந்த ஐடியா என்று ஜம்பம் அடித்துக் கொண்டிராக்கும்!'' என்றார் அம்மாஞ்சி வாத்தியார்.

''இல்லை; ஆஷி ஏரிதான் இந்த ஐடியாவை எங்களுக்குக் கொடுத்தது. அந்த ஏரியைப் பார்த்தபோது 'இங்கே தெப்பம் விடு விடு' என்று சொல்வது போலிருந்தது என்றேன்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''எம். எல். வி., பத்மா சுப்ரமணியம், மதுரை சோமு, குன்னக்குடி, வலையப்பட்டி, நாமகிரிப்பேட்டை, சிட்டிபாபு எல்லோரும் ஹகோனே வந்து சேர்ந்தாயிற்று?'' என்று விசாரித்தார் சாம்பசிவம்.

''வந்தாயிற்றும். சிலர் ஃப்யூஜி மலையைச் சுற்றிப் பார்க்கவும் சிலர் கந்தக ஊற்றுத் தண்ணீரில் ஸ்நானம் செய்யவும் போயிருக்கிறார்களாம்'' என்றார் அம்மாஞ்சி.

ஏரித் தண்ணீரை ஒரு கையால் அள்ளிப் பருகிய ஜப்பான் சாஸ்திரி ''தேவாமிர்தம்!'' என்றார்.

''குன்னக்குடி இந்தத் தண்ணீரைக் குடித்து வைக்கப் போகிறார்! ரொம்ப ஜில்லிப்பு. வயிறுக்குத் தொண்டை கட்டிப் போகும்'' என்றார் சாம்பசிவம்.

''பத்மா சுப்பிரமணியம் டான்ஸ் எத்தனை மணிக்கு? 'கிருஷ்ணாய துப்யம் நமஹ'வை மெட்ராஸிலேயே பார்க்கணும்னு ஆசைப்பட்டேன்'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இங்கே ஓசியிலே பார்த்துவிடும் அதை!'' என்றார் சாம்பசிவம்.

''இந்தக் குளிரிலே உமக்கு விசிறி எதுக்கு? அதைக் கீழே போடும்'' என்றார் அம்மாஞ்சி.

''ம. பொ. சி.க்கு மீசை, கலைஞருக்கு கூலிங் கிளாஸ், வாத்தியாருக்கு புஷ் குல்லா எப்படியோ அப்படி எனக்கு இந்த விசிறி!'' என்றார் ஜப்பான் சாஸ்திரி.

''இந்த விசிறியை உம்முடைய ஞாபகார்த்தமாக யுயேனோ மியூஸியத்தில் வைத்துவிட்டு வருவதுதானே? தேர் பார்க்க வருகிறவர்கள் அப்படியே இந்த விசிறியையும் ஒரு அதிசயப் பொருளாகப் பார்த்துவிட்டுப் போவார்களே?'' என்றார் அம்மாஞ்சி.

எல்லையற்ற இயற்கை வனப்பும், எண்ணற்ற வர்ண பேதங்களில் தளிர்த்தும் துளிர்த்தும் கிடந்த மரங்களின் எழிலும் அந்தக் காடு முழுதும் பரவிக் கிடந்தன.

சலனமற்ற தண்ணீர்ப் பரப்பாக ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே விநாயகர் உருவம் ஒன்றை வண்ணக் கோலமாக வரைந்து கொண்டிருந்தார் சாந்தா நாராயணன். அவருடன் வந்திருந்த கிருஷ்ணமூர்த்தியும், துளசிதாஸும், சக்கரவர்த்தி, மகாராணி இருவரின் உருவங்களை ஏரிக்கரையில் உள்ள மெய்ஜி கோயில் வாசலில் போட்டு வைத்தார்கள்.

காஞ்சீபுரம் தண்டமாலை, மதுரை மல்லிகை மாலை, வெள்ளை, பச்சை, ஆரஞ்சு ஆகிய வண்ணங்களில் கட்டப் பட்ட திருச்செந்தூர் மாலை மூன்றையும் விநாயகரின் கழுத்தில் சாற்றி அலங்காரம் செய்தார் ஜப்பான் சாஸ்திரி.

இரவு எட்டு மணிக்கு, குறித்த நேரத்தில், அதிர் வேட்டுகளும் அவுட் வாணங்களும் போட்டு தெப்பம் புறப் படப் போவதை அறிவித்தார்கள்.

தெப்பத்தின் வண்ணச் சரவிளக்குகள் தண்ணீரில் பிரதிபலித்தபோது ஹகோனே ஏரிக்குள் ஏதோ மாயா ஜாலம் நிகழ்வது போலிருந்தது.

காற்றில் அணையாத காகிதக் கூண்டு விளக்குகளை ஆயிரக்கணக்கில் மிதக்க விட்டனர் ஜப்பானியப் பெண் மணிகள்.

சக்கரவர்த்தி வந்து தம் ஆசனத்தில் அமர்ந்ததும் வி. எஸ். டி. தெப்பத்தைக் கரையோடு சேர்த்துக் கட்டி யிருந்த கயிறுகளை அவிழ்த்து விடச் சொன்னார்.

புதை வாணங்கள் போன்ற வெடிகளைத் தண்ணீரி லேயே கொளுத்திவிட்டனர் ஜப்பானியர்.

நாதஸ்வர இசையுடன் மெதுவாக நகரத் தொடங் கியது தெப்பம். ஒவ்வொரு கச்சேரிக்கும் இரண்டு மணி நேரமே ஒதுக்கி யிருந்தார்கள்.

"அடாடா! இந்த சந்தன வாசனையும், ஊதுவத்தி மணமும், நாதஸ்வர இசையும் கலந்து காற்றிலே வீசுகிற போது கந்தர்வ லோகமே கீழே இறங்கி வந்துவிட்ட மாதிரி இருக்கு" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

காலையில் தெப்ப விழா முடிந்ததும், எல்லோரையும் கும்பலாக நிறுத்தி வைத்து வெள்ளைப் பூசனிக்காய் மீது கற்பூரத்தைக் கொளுத்தி திருஷ்டி சுற்றிப் போட்டார் கோபால் ராவ்.

அவ்வளவுதான்; தெப்ப விழா முடிந்ததோ இல்லையோ, அடுத்த நிமிடமே எல்லோரும் டோக்கியோ கிளம்பி விட்டனர்.

டோக்கியோ போய்ச் சேர்ந்ததும் சாஸ்திரிகள் மூவரும் நேரத்தை வீணாக்காமல் வெளியே புறப்பட்டு விட்டார்கள். காலையில் போனவர்கள் பகல் ஒரு மணிவரை திரும்பி வரவில்லை.

"சாப்பிடாமல் கூட எங்கே போய் விட்டார்கள் இந்த சாஸ்திரிகள்?" என்று கேட்டார் மகாராணி.

"தி க்ரேட் எர்த்க்வேக்-ஃபயர் மெமோரியல் ஹாலுக்குப் போயிருக்கிறார்கள்" என்றார் கோபால் ராவ்.

"நாளைக்கு எல்லோரும் ஊருக்குப் போகப் போகிறீர்களே, இன்று அரண்மனையில் நாம் எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாமே என்று நினைத்தேன். சாப்பாட்டு நேரத்துக்குள் வந்து விடுவார்களா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"வரமாட்டார்கள்; நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்த கண்ட்டோ ஏரியாவில் பூகம்பமும் தீ விபத்தும் ஏற்பட்டு ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் இறந்துவிட்டார்களாம். அவர்கள் ஞாபகார்த்தமாக இந்த நகரத்தில் கட்டியுள்ள நினைவு மண்டபத்தைப் பார்க்கப் போயிருக்கிறார்கள். இன்று எதுவும் சாப்பிட மாட்டார்களாம். வெறும் சாதத்தை மட்டும் உருட்டி விழுங்குவார்களாம். காரணம், விபத்து நடைபெற்ற போது ஜப்பானிய மக்களுக்கு அரிசிச் சோறு தவிர வேறு எந்த உணவும் கிடைக்கவில்லையாம்" என்றான் பஞ்சு.

"அப்படியா? உங்கள் சாஸ்திரிகளின் மனிதாபிமான உணர்வு என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது" என்றார் சக்கரவர்த்தி.

"எங்கள் தாய் நாட்டுக்கு அடுத்தபடி நாங்கள் விரும்பிப் போற்றுவது உங்களுடைய ஜப்பான் நாட்டைத் தான். உங்களுடைய சுறுசுறுப்பு, அழகுணர்ச்சி, நன்றி உணர்வு, சிரித்த முகம், விருந்தோம்பும் பண்பு, கலையார் வம் இவ்வளவும் எங்களைப் பிரமிக்க வைக்கின்றன" என்றார் கோபால் ராவ்.

'தெப்போவுக்காக இங்கே வந்து உதவி புரிந்தவர்கள் அவ்வளவு பேருக்கும் எங்கள் நாட்டின் பழமையான கபூகி நாடகம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளேன். கபூகிஸா தியேட்டரில் ஒரே சமயத்தில் 2222 பேர் உட்காரலாம். இன்றிரவு அதைப் பார்த்துவிட்டு நாளை பகல் எல்லோரும் என்னோடு விருந்துண்ட பிறகே நீங்கள் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும்" என்றார் சக்கரவர்த்தி.

"சாஸ்திரிகள் வந்ததும் அவர்களுக்கும் சொல்லிவிடுங்கள்" என்றார் மகாராணி.

மறு நாள் விருந்துக்குப் பின்னர் ஒவ்வொருவராக வந்து சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொள்ளத் தொடங்கினர். சக்கரவர்த்தி ஒவ்வொருவராக அழைத்துக் கை குலுக்கி நன்றி சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலில் வடம் பிடித்து இழுத்த ஆயிரம் பேருக்கும் ஆளுக்கொரு வாட்சும், டிரான்ஸிஸ்டரும் அன்பளிப்பாகக் கொடுத்தனுப்பினார் சக்கரவர்த்தி.

அடுத்தபடியாக வந்த சங்கீத வித்வான்களுக்கு ஆளுக்கொரு டேப் ரிகார்டர், டிரான்ஸிஸ்டர், வாட்ச், முத்து மாலை நான்கும் பரிசாகக் கொடுத்தார்.

நாமகிரிப் பேட்டைக்கும் வலையப்பட்டிக்கும் மட்டும் எல்லாமே டபிள் டபிள்!

"நீங்கள் இருவரும் தேர், தெப்பம் இரண்டிலும் வாசித்தீர்கள். அதனால் எல்லாமே டபிள்" என்றார் சக்கரவர்த்தி.

பிறகு கணபதி ஸ்தபதி வந்து நின்றார். பட்டாடைகளும், முத்துமாலைகளும் நிறைந்த பெரிய பேழை ஒன்றை எடுத்து அவரிடம் கொடுத்த சக்கரவர்த்தி, ''உங்கள் கலைத் திறமைக்கு ஈடாக எங்கள் நாட்டையே பரிசாகக் கொடுக்கலாம்'' என்று பாராட்டினார்.

கடைசியாக சாஸ்திரிகள் மூவரும் வந்து நின்றனர். மூவருக்கும் மூன்று குடை, மூன்று முத்துமாலை, மூன்று ஸ்கூட்டர், மூன்று காமிரா கொடுத்த பிறகு ஜப்பான் சாஸ்திரியைத் தனியாக அழைத்து அவருக்கு மட்டும் ஜப்பான் விசிறி ஒன்றைக் கொடுத்தார்.

'இந்த நாட்டை விட்டுப் பிரியவே எங்களுக்கு மனமில்லை. 'ராஜோபசாரம்' என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது அதை நாங்களே அனுபவிக்கும் பேறு எங்களுக்குக் கிட்டியது. தாங்களும் மகாராணியும் ஒரு முறை தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்து எங்கள் நாட்டுத் திருக்கோயில்களையும் திருவிழாக்களையும் நேரில் பார்க்க வேண்டும். சிற்பங்களும் கலைச் செல்வங்களும் நிறைந்தது எங்கள் நாடு. சங்கரரும், ராமானுஜரும், ராமகிருஷ்ண பரமஹம்சரும், ரமண மகரிஷியும் வாழ்ந்த நாடு. 'வி. ஆர். ஃப்ரம் தி லாண்ட ஆப் சங்கராச்சார்யா' என்று சொல்லிக் கொள்வதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். 'தொமோ, தொமோ!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் ஜப்பான் சாஸ்திரி.

சக்கரவர்த்தி, மகாராணி இருவரும் ஜப்பான் சாஸ்திரியின் கைகளைக் குலுக்கி, 'மட்டா டோஸா' (திரும்பி வாருங்கள்) என்றனர். கடைசியாக எல்லோரும் அரண்மனைக்கு வெளியே போய் சக்கரவர்த்தி குடும்பத்தாருடன் ஒரு க்ரூப் போட்டோ எடுத்துக் கொண்டு விமான கூடத்துக்குப் புறப்பட்டனர்.

விமானம் புறப்பட இன்னும் இருபது நிமிடங்களே இருந்தன. சாம்பசிவ சாஸ்திரியைத் தவிர மற்ற எல்

லோரும் வந்து சேர்ந்து விட்டார்கள். அவரை மட்டும் காணவில்லை.

'வழி தவறி வேறு எங்காவது போய் விட்டாரோ?' என்று கவலைப்பட்டார் கோபால் ராவ். எங்கு தேடியும் அவர் அகப்படவில்லை. விமானம் புறப்பட ஐந்து நிமிடமே இருக்கும்போது பரக்கப் பரக்கக் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தார் சாம்பசிவம்.

''எங்கே தொலைந்து போனீர், ஊருக்குப் புறப்படுகிற நேரத்தில்?'' என்று கடிந்து கொண்டார் அம்மாஞ்சி, அவரைப் பார்த்து.

''கின்ஸாவுக்கு'' என்றார் சாம்பசிவம்.

''அங்கே எதற்குப் போனீர்? ஷாப்பிங் செய்வதற்கு இதுதானா நேரம்?'' என்று கேட்டார் அம்மாஞ்சி.

''நான் ஷாப்பிங் செய்யப் போகவில்லை. கின்ஸாவில் தானே தேர் விட்டோம்? கடைசியாக ஒரு முறை அந்த இடத்தைப் பார்த்துவிட்டு வரவேண்டும் போலிருந்தது. அங்கே போய் ஒரு நிமிஷம் அந்தத் தெருவில் நின்று பார்த்துவிட்டு வந்தேன். கின்ஸாவை விட்டுப் பிரியவே மனம் வரவில்லை'' என்றார் சாம்பசிவம்.

விமான கூடத்தில் இவர்களை வழியனுப்ப ஏராளமான ஜப்பானியர் வந்திருந்தனர்.

எல்லோரும் விமானத்திற்குள் ஏறி உட்கார்ந்த பிறகு கோபால் ராவ், பஞ்சு, அம்மாஞ்சி, சாம்பசிவம் நால்வரும் 'ஸயோனரா' கூறிக் கொண்டு கையைத் தூக்கி அசைத்த வண்ணம் விமானப் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றனர்.

ஜப்பான் சாஸ்திரிதான் கடைசியாக ஏறினார். அவரோடு அவருடைய மருமான் ரமேஷும் அவனுடைய காதலி இகிடாவும் ஏறிச் சென்றனர்.

"இவர்களையும் இந்தியாவுக்கு அழைத்துப் போகிறீர்களா?" என்று ஜப்பான் சாஸ்திரியைக் கேட்டனர் பத்திரிகை நிருபர்கள்.

"ஆமாம், இவர்கள் திருமணம் ஜப்பானில் நிச்சயமாயிற்று. இந்தியாவில் நடைபெறும். வருகிறேன்... ஸயோனரா" என்றார் ஜப்பான் சாஸ்திரி.

விமானக் கதவு மூடப்பட்டது.

அக்பர் சக்கரவர்த்தி ஆகாசத்தில் மிதந்தார்.

முற்றும்



ஆசிரியர் சாவி

ஆசிரியர் 'சாவி' எழுதிய 'வாஷிங்டனில் திருமண'த்தைப் படிக்காதவர்களோ, அல்லது அதைப் பற்றித் தெரியாதவர்களோ, தமிழ்நாட்டில் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் இடங்களிலும் கூட இருக்க முடியாது.

சா. விசுவநாதன் என்பது இவரது இயற் பெயர். 1942 ஆகஸ்ட் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒன்பது மாத காலம் சிறைவாசம் அனுபவித்த அரசியல் தியாகி. 1947-ம் ஆண்டில் கிழக்கு வங்காளத்தில் மூண்ட வகுப்புக் கலவரத்தின் போது, அங்கே காந்தி மகாத்மா நடத்திய அகிம்சா யாத்திரையில் நேரில் கலந்துகொண்டு, இவர் கல்கியில் எழுதிய 'நவகாளி யாத்திரை' என்னும் கட்டுரைகள் புத்தகமாகவும் வந்துள்ளது.

சோவியத் ருஷ்யா, கிழக்கு ஜெர்மனி, ஜப்பான், ஹாங்காங், தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, பங்களா தேஷ் முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இவர் தினமணி கதிரில் எழுதிய கட்டுரைகள் வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. புத்தக வடிவிலும் வந்துள்ளன.

**பூம்புகார் பிரசுரம்**
சென்னை - 600 013